பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 16 ஞாயிற்றுக்கிழமை (30.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 185

### போர்க்கால மனித உரிமை மீறல்கள் விவகாரம்

# பான் கீ - மூனுக்கு ஆலோசனைக் குழு நியமிக்க ஐ.நா. சபை முடிவு

## நிபுணர்கள் தெரிவானதும் உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும்



நியூயோர்க்,மே30

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் அந்நாட்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் விவகாரத்தில் -

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூனுக்கு ஆலோசனை கூறுவதற்கு நிபுணர்கள் குழு ஒன்றைத் தெரிவுசெய்வதில் ஐ.நா. இப்போது ஈடுபட்டுள்ளது.

நிபுணர்களைத் தெரிவுசெய்த பின்னர் மிக விரைவில் அந்த விவரம் அறிவிக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவருடத்திற்கு முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தவேளையில், போர்க்காலத்தில் மனித உரிமைகள் மீறல்கள் நடைபெற்றமைக்காகப் பொறுப்புக் கூறும் விடயத்தில் ஒத்துழைப்பதாக இலங்கை அரசாங்கம் பான்கீமூனிடம் தெரிவித்திருந்தது.

ஐ.நா.பொதுச் செயலாளர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுக்களின்போது அங்கு நடைபெற்ற போரின் இறுதிக்கட்ட வேளைகளில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறும் விதத்தில் இலங்கை நடத்து கொண்டதாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் குறித்து பொறுப்புக் கூறும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்புக் கொண்டிருந்தார். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஐ.நா. பொதுச் செயலாளரிடம் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் போர் இறுதிக்கட்டத்தை அடைவதற்கு முந்திய மாதங்களில் ஐக்கிய நாடுகள் சபையும் செயலாளர் நாயகமும் போர் வலயத்தில் சிக்குண்டிருந்த பொதுமக்களின் உயிர்களை காப்பாற்ற, பாதுகாக்க, மனித நேயத்துடனான நடவடிக்கைக்களை (28ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன திருமலை மாணவன்

திருகோணமலை,மே30

திருகோமலையில் தமிழ்க்கிராமமான நிலாவெளியில் காளமேகம் காண்டீபன் என்ற மாணவன் காணாமற் போய்விட்டார் என்று அவரது தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

சென்ற வருடம் ஜி.சீ.ஈ.(சாதாரணப்) (28ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் விடிவுக்காக கூட்டமைப்பு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும்

### அரசின் 'நாடகத்தை' அம்பலப்படுத்தவும் இது உதவும் என்கிறார் அரியநேத்திரன்

யாழ்ப்பாணம்,மே30

அகதிமுகாம்களில் தங்கி அவதிப்படும் அனைத்து வன்னிப் பகுதி மக்களையும் மீளக்குடியமர்த்தி, அவர்களுக்கு நிம்மதியான, நிரந்தரமான வாழ்வை - விடிவை - ஏற்படுத்திக்கொடுப்பதை வலியுறுத்தி வடக்கு - மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார். (28ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீதான வழக்கு விசாரணையில் வெளிப்படைத்தன்மை பேணப்படவேண்டும்

### அமெரிக்க உதவி அமைச்சர் பிளேக் தெரிவிப்பு

கொழும்பு,மே30

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவின் உரிமைகளை இலங்கை அரசு மதிக்கவேண்டும். அவர் மீதான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் வெளிப்படையாக நடத்தப்படவேண்டும்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடக்கும் என்கிறார் பஸில்

கொழும்பு,மே30

வடக்கு - மாகாண சபைக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படவிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து வடக்கின் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்கள் இடம்பெறும்.

இவ்வாறு கூறினார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விஜயம் செய்த பஸில் ராஜபக்ஷ படையினர் மத்தியில் பேசுகையில் இப்படிக் கூறியுள்ளார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச்சபை பயங்கரவாத அமைப்பாம்

### அமைச்சர் சம்பிக்கவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு,மே30

சர்வதேச மன்னிப்புச் சபை பயங்கரவாத அமைப்பு என்று வர்ணித்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அதனை பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்யவேண்டும் என்றும் கேட்கின்றார்.

உலகெங்கும் இயங்கும் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் சர்வதேச மன்னிப்புச்சபை, பயங்கரவாதத்தை (28ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட இணைப்புக் குழுவின் முதலாவது கூட்டம் வரும் 7ஆம் திகதி

### யாழ்.செயலகத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.மாவட்ட இணைப்புக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் (28ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சியில் இருந்து உறவினர்களைச் சந்திக்க

# புங்குடுதீவுக்கு நேற்றுமுன்தினம் வந்தவர் அடிகாயங்களுடன் சடலமாக மீட்பு!

புங்குடுதீவு, மே 30

கிளிநொச்சியில் இருந்து உறவினர்களைச் சந்திக்க வந்தவர் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சியில் வசித்தவருமான சோமசுந்தரம் சுப்பிரமணியம் (வயது 56) என்பவரே மரணமானவராவார்.

இச்சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

புங்குடுதீவில் வசிக்கும் உறவினர்களை சந்திப்பதற்காக இவர் நேற்றுமுன்தினம் வந்தார். கண்ணகை அம்மன் கோயிலடியில் உள்ள தமது உறவினர்களைச் சந்தித்த பின்னர் அன்றையதினமே யாழ்ப்பாணம் செல்ல ஆலடிச்சந்திக்கு வந்தார். சந்தியில் சில நிமிடங்கள் காத்துநின்ற அவர் அங்கு நின்ற சிலரிடம் சாராயம் எங்கு வாங்கலாம் என்று கேட்டுள்ளார். அவரிடம் இருந்த பணத்தை அவதானித்த குறிப்பிட்ட இருவர் சாராயம் வாங்கித் தருவதாகக் கூறி அவரை இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பின்னர் அவரின் சடலம் அடிகாயங்களுடன் தெங்கன்திடல் பிள்ளையார் ஆலயத்துக்குப் பின்னால் மீட்கப்பட்டுள்ளது.

மரணமானவர் புங்குடுதீவில் இருந்து கிளிநொச்சிக்கு புறப்படும் போது அவரிடம் 10 ஆயிரம் ரூபா பணம் இருந்ததாகக் கூறப் பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இருவரைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து தடுத்து வைத்து விசாரணை செய்து விருகின்றனர். (ஒ-1-188)

## மகாகும்பாபிஷேகம்

கைதடி வடக்கு, கயிந்தசிட்டி முருகன் கோயிலின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை நடைபெறுகின்றன.

எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவமும், அடுத்த நாள் வெள்ளிக்கிழமை மகாகும்பாபிஷேகமும் நடைபெறவிருக்கின்றன.

சிவக்காரியத் திலகம் முத்துக்குமார ஐயாத்துரைக் குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். (க-121)

# 470 வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு இன்று பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 470 வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை இரு அமர்வுகளாக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வெளிவாரிப் பட்டதாரிகளான கலைமாணி, வணிகமாணி, நுண்கலைமாணி ஆகிய பட்டச்சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்நிகழ்வின் முதல் அமர்வு காலை 9 மணிக்கும் இரண்டாம் அமர்வு 11 மணிக்கும் இடம்பெறும்.

இந்தப் பட்டச்சான்றிதழ்கள் வழங்கப்படும் வைபவம் ஏழு வருடங்களுக்குப் பின்னர் நடைபெறுவதையிட்டு பட்டதாரிகள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இந்த நிகழ்வை ஒழுங்கமைத்த துணைவேந்தர், வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகு ஒருங்கிணைப்பாளர் மற்றும் பதிவாளர், ஊழியர்கள் அனைவருக்கும் பட்டதாரிகள் மனமார நன்றி தெரிவிக்கின்றனர் என்று யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-1)

## காரைநகர் அபிவிருத்திக் கூட்டம்

புலம்பெயர் நாடுகளின் காரைநகர் அபிவிருத்தி சபைகளும், காரை வாழ் மக்களும் ஏற்பாடு செய்துள்ள காரைநகர் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய நடராசா மண்டபத்தில் நடைபெறும்.(ஒ-250)

# கீரிமலை கவுணாவத்தைக்கு நேற்று திரண்டு சென்ற பக்தர்கள்

## வேள்வியிலும் ஏராளமானோர் பங்குபற்றினர்

தெல்லிப்பழை, மே 30

கீரிமலை கவுணாவத்தை வைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் மற்றும் வேள்விக்கு நேற்று யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் திரண்டு வந்திருந்தனர்.

இந்த ஆலயம் உயர்பாதுக்காப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ளதால் மட்டுப்படுத்தப்பட்ட மக்களே அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சுமார் 20 வருடங்களுக்கு மேலாக கவுணாவத்தை ஆலயப் பகுதிக்குச் சென்று நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதில் தடங்கள் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இம்முறையும் ஆலயபிரதம குரு உட்பட குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்கள் மட்டும் சென்று பொங்கலிட அனுமதிக்கப்பட்டனர் என்றும் -

எனினும் நூற்றுக்கணக்கான ஆட்டுக் கடாக்கள் மற்றும் ஏராளமான கோழிகள் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்து - குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் - தனியார் ஒருவரின் காணிஒன்றில் வெட்டப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ- 1)


**கோழிக்குஞ்சு விநியோகம்**

ஒறிஜினல் (Orginal No.1 Broiler) புரொய்லர் குஞ்சு 07.06.2010 அன்று விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்யவும்.
*எமது கிளை நிறுவனம்* (சுட்டி பாம், வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம் 021 321 6290)
நல்லூர் பாம் செண்டர்,
19 முருகேசர் லேன், நல்லூர்.
எமது T.P.: 021 222 6944 (98619)


# மிருகங்கள், பூச்சிகள், ஊர்வனவைத் திருடி மேலைத்தேய நாடுகள் மருந்து தயாரிப்பு

## இலங்கை குற்றச்சாட்டு

கொழும்பு, மே 30

சில உயிரினங்கள் மற்றும் தாவரங்களுக்காக பெறவேண்டிய ஆக்க உரிமையை (Patent) மேலைத்தேய நாடுகளால் திருடப்படுவதாக இலங்கை தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள மிருகங்கள், பூச்சியினங்கள், ஊர்வன ஆகியன திருடப்பட்டு அவற்றிலிருந்து நோய் எதிர்ப்புச் சக்திக்கான மருந்து வகைகள் தயாரிக்கும் நடவடிக்கையில் மேலைத்தேய நாடுகள் ஈடுபட்டிருப்பதாக ஆயுர்வேத திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு தயாரிக்கப்படும் மருந்து வகைகள் ஆயுர்வேத வைத்தியத் துறைக்கு பயன்படுத்தப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

இந்நிலையில், இவ்வாறான செயற்பாடுகளை கண்டுபிடித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வு அமைச்சர் திஸ்ஸவிதாரணவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் இதை உறுதிப்படுத்தினார்.

இலங்கையில் பேட்டன் உரிமைகள் மீறப்படுவதுடன், இதைக் கவனத்திற் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவிருக்கின்றது எனவும் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார்.

# துர்க்கா மணி மண்டபத்தில் இன்று இசை அரங்கு

யாழ்ப்பாணம், மே 30

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான செல்வி அபர்ணா குகதாசனின் இசை அரங்கு இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் சங்கீத கலாநிதி என்.வி.எம்.நவரத்தினம் கலந்துகொள்வார். (ஒ- 201-16)

# 'ஏ.ரி.எம்.' இயங்காததால் கிளிநொச்சி மக்கள் சிரமம்

கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையின் 'ஏ.ரி.எம்.' இயந்திரம் நேற்று திடீரென செயற்பட மறுத்துவிட்டதால், வாடிக்கையாளர்கள் பெரும் சிரமம் அடைந்தனர்.

தொடர்ச்சியாக விடுமுறை தினங்கள் வந்ததால் பணம் தேவைப்பட்டவர்கள் இயந்திரம் 'அவுட்' ஆனதால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அங்கு வேறு 'ஏ.ரி.எம்.' இயந்திரம் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ( ஒ- 405)

# மரண அறிவித்தல்கள்

## பாலகிருஷ்ணன் ஐயா சிவச்செல்வன் ஐயா

(சிவா ஐயா)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல.156, செம்மணி றோட், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் ஐயா சிவச்செல்வன் ஐயா (சிவா ஐயா) நேற்று (29.05.2010) சனிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் பாலகிருஷ்ணன் ஐயா - புஸ்பமலர் தம்பதிகளின் அன்பு மகனும் சிவசங்கர், சிவகௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கணேசலிங்கம் ஐயாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உ.பாலகிருஷ்ணன் ஐயா (தந்தை).

*156, செம்மணி றோட், நல்லூர்.*
*0771605159, 0214908460.* (98932)

## சிதம்பரப்பிள்ளை குழந்தைவேலு



அல்லைப்பிட்டி, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை குழந்தைவேலு 29.05.2010 சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ள - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் அருந்தவகுமாரன் (யாழ். கோப்பாய் மகா வித்தி), தவநாயகி (உபதபாலதிபர், அல்லைப்பிட்டி), உதயகுமாரன், தெய்வகுமாரன் (உலக உணவுத் திட்டம்), உருத்திரகுமாரன் (யாழ். தபாலகம்), வினோதநாயகி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி (அமரர்), ரஞ்சினிதேவி மற்றும் மகாலிங்கம், ஜீவரஞ்சினி, யசோதாதேவி ஆகியோரின் அன்பு மாமனும் பவளம்மாவின் சகோதரனும் செல்லையாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அல்லைப்பிட்டியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. தெய்வகுமாரன் (மகன்).

*3 ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.* (98931)

# திருமண நன்றி நவிலல்

**மகேசன் ரமேஷுக்கும்**
**ஸ்ரீஸ்கந்தராஜா தர்ஷனிக்கும்**

19.05.2010 இல் வெள்ளவத்தையில் அமைந்துள்ள ஓச்சாட் திருமண மண்டபம் 3இல் நடைபெற்ற திருமண வைபவத்துக்கு நேரில் சமுகமளித்தும், வாழ்த்தியும் அன்பளிப்பு வழங்கியும் சிறப்பித்தோருக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இளையதம்பி மகேசன்,
இடைக்காடு, அச்சுவேலி.

இராஜரட்ணம் ஸ்ரீஸ்கந்தராஜா
சிட்னி, அவுஸ்திரேலியா.

தகவல்:
இராஜரட்ணம் குடும்பம்.
15, உடையார் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (98779)


**யாழ் நகரில் Nokia Phone ஏகவிநியோகஸ்தர்கள்**




Phone Shop உரிமையாளர்களுக்கு விசேட கழிவு
விற்பனைக்கு பிந்திய சேவைகள்
நீங்கள் வாங்கும் போன்களுக்கான உத்தரவாதத்தை உறுதிப் படுத்தி பெற்றுக் கொள்ளுங்கள்

Soft Logic
நிறுவனத்தின் 1 வருட உத்தரவாதத்துடன்
Nokia Original Phone

திருமுருகன் கொம் நெற்
259 கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் T.P No: 021 222 7835
46 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி



DHL WORLDWIDE EXPRESS

யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (சனசமூக நிலையம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி (ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

குடாநாட்டில் முகவர்கள் தேவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தவர் தலையில் மிளகாய் அரைக்கும் ஏமாற்றுப் பேர் வழிகள் குறித்து விழிப்பு அவசியம்

## மோசடிப் பேர் வழிகளால் பாதிக்கப்பட்டவர்கள் அது குறித்து பகிரங்கப்படுத்தினால் பிறரும் பாதிப்பைத் தடுக்கலாம்

ஏமாறுபவன் இருக்கும் வரையும் ஏமாற்றுபவனும் இருந்து கொண்டே இருப்பான் என்பது நம்மிடையே பயிலப்பட்டு வரும் ஒரு பழமொழி. நம்மிடையே உள்ள பேராசைக் குணமும், பிறரை எடுத்த எடுப்பிலேயே நம்பும் இயல்பும் மிகப் பெரிய ஏமாற்றங்களைப் பரிசளித்துவிடுகின்றது. பிறரின் பலவீனங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வல்லமை கொண்டவர்கள், அப்பாவிகளின் தலையிலே சம்பல் அரைத்துவிட்டுச் செல்வதற்கு ஒருபோதும் தயங்கியதே இல்லை.

ஒருவாறு கடத்தல், கொள்ளை என்ற அச்சுறுத்தும் விடயங்கள் சற்றுக் குறைந்திருப்பதால் பெருமூச்சு விடத்தொடங்கியுள்ள குடாநாட்டு மக்களுக்கு இன்னொரு வகையில் புதியதொரு பிரச்சினை எழத்தொடங்கி விட்டது. எப்போதுமே திருடர்கள் கோரமுகத்தோடு வருவதில்லை என்பதை நிரூபிப்பது போல பல சம்வங்கள் குடாநாட்டில் ஒரேபாணியில் நிகழத்தொடங்கியுள்ளன. உதாரணத்துக்கு இதோ ஒரு சம்பவம்!

நாகரிகமாக உடையணிந்த ஒரு பெண், பணத்தேவை உள்ளவர்களை மிகச்சரியாக இனங்கண்டு கொண்டு அவர்களது வீட்டுக்கு வருவார். தன்னை ஒரு வங்கியின் உயர் பதவியிலுள்ள உத்தியோகத்தர் என்று அறிமுகம் செய்து கொள்ளும் அவர் தன்னுடைய வசீகரமான பேச்சாற்றலால் அந்த வீட்டில் உள்ள ஒரு உறுப்பினர் போல ஒன்றிணைந்து விடுவார். பின்னர் தங்களுடைய வங்கி மக்களுக்கான கடன் வசதிகளை இலகுபடுத்தியிருப்பதாகவும் அத்திட்டங்களை மக்களிடையே எடுத்துச் சொல்வதற்காகவுமே தான் 'பீல்ட் வேர்க்'காக குறித்த வீட்டுக்கு வந்துள்ளதாக ஒரு தூண்டிலைப் போடுவார். ஏற்கனவே பணத்தேவையுள்ள வீட்டுக்காரர்கள் கனகச்சிதமாக அவர் வீசிய தூண்டிலில் மாட்டிக் கொண்டு விடுவார்கள். என்ன கடன்? எவ்வளவு தொகையைக் கடனாகப் பெறலாம்? வட்டி வீதம் என்ன? என்றெல்லாம் கண்களில் கனவுகள் மின்ன கேள்விக் கணைகளை குறித்த பெண்ணிடம்



அடுக்கத் தொடங்குவார்கள். தன்னுடைய பொறியில் அவர்கள் வீழ்ந்துவிட்டதை அறிந்து கொண்டு புன்முறுவல் தவழும் முகத்தோடு அத்தனை கேள்விக்கும் சலிக்காமல் பதில் சொல்வார் நாகரிகப் பெண். அவர் கூறுகின்ற பதில்கள் எல்லாமே குறித்த கடன் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல என்பதாகவே அமைந்திருக்கும். அதனால் அந்தக் கடனை தாம் பெறவே முடியாது என்ற மனோநிலைக்குள் தள்ளப்பட்டு வீட்டுக்காரர்கள் சோர்ந்து போகின்ற நேரத்திலே தன்னுடைய பிரதான அஸ்த்திரத்தை அந்தப் பெண் பிரயோகிப்பார்.

'' உங்களுடைய கஸ்டத்தைப் பார்க்கும் போது என்னால் முடிந்த ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் போல தோன்றுகின்றது. நான் மனம் வைத்தால் இவ்வளவு இறுக்கமான நடைமுறைகளையும் சமாளித்து அந்தக் கடனை உங்களுக்குப் பெற்றுத்தர முடியும்''.

அவ்வளவுதான்! அவருடைய அஸ்த்திரம் தன்னுடைய வேலையை மிகச் சரியாகவே செய்யத் தொடங்கிவிடும். பணத்தேவையால் அல்லாடிக் கொண்டிருக்கும் வீட்டுக்காரருக்கு அடுத்த நொடியே இந்த நவநாகரிகப் பெண் கடவுள் போல தோன்றத் தொடங்கிவிடுவார். தம்முடைய வீட்டுக் கஸ்ரங்களை இன்னும் ஒருபடி மேலே சென்று கண்ணீர் மல்க எடுத்துரைத்து எப்படியாவ்து அந்தக் கடனை பெற்றுத் தருமாறு அவர்கள் வேண்டுவார்கள்.

'' அது பிரச்சினை இல்லை. உங்களுக்கு கடன் கிடைக்கிறதுக்கு நான் பொறுப்பு. ஆனால் ...'' என்று அந்தப் பெண் இழுப்பார். அவருடைய இழுவைக்கு ஒரு அர்த்தமிருக்கும்.

''என்னெண்டாலும் சொல்லுங்கோ நாங்கள் செய்கிறோம். எங்களுக்கு கடன் கிடைச்சா சரி'' என்று வீட்டுக்காரர்கள் 'கோரஸ் ' 'பாடுவார்கள்.

'' வங்கியிலே கொஞ்சப்பேரை சரிக்கட்டினால்தான் இந்தக் கடன் 'ஈஸி'யாக் கிடைக்கும். அதற்குக் கொஞ்ச காசு தேவைப்படும்'' என்பார் அவர்.

'' அதுக்கென்ன? லட்சக் கணக்கிலே கடன் வாங்கித் தரப்போகிறீர்கள். அதுக்கு ஒரு கொஞ்சக் காசை செலவழித்தால் நாங்கள் குறைந்து போய் விடமாட்டோம்'' என்று வீட்டுக்காரர்கள் சம்மதிப்பார்கள்.

பிறகென்ன? பேரங்களாலும், ஆசை களாலும் அல்லாடப் பட்டு அவர்க ளின் உரையாடல் தொடரும். நாலைந்து நாள் இதே பாணியில் அந்தப் பெண் குறித்த வீட்டுக்கு வந்து போவார். கடைசியாக ஒருநாள் கடன் மிக விரைவில் கிடைக்க இருப்பதாகவும் பணத்தை தயார் செய்யும்படியும் அவர் கூறுவார்.அவர்கள் ஏற்கனவே நாலைந்து பேரிடம் கெஞ்சிக் கூத்தாடி வாங்கி வைத்திருந்த பணத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு கடன் கிடைக்கும் என்று காத்திருக்கத் தொடங்கு வார்கள். அவர்க ளின் காத்திருப்பு மாதக் கணக்கில் நீளும். அதன் பின்னர்தான் பணத்தை வாங்கிக் கொண்டு குறித்த பெண் கம்பி நீட்டிவிட்டார் என்பது அவர்களுக் குப்புரியும்.

இவ்வாறு ஒரே பாணி யில் - ஒத்ததன்மையோடு - ஏராளமான சம்பவங்கள் குடாநாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. பணத்தைக் கொடுத்து ஏமாந்த பலரும் வெட்கத்துக்கு அஞ்சி தாம் ஏமாந்த சங்கதியை எவருக்குமே சொல்வதுமில்லை. இது அந்த மோசடிப் பெண்ணுக்கு இன்னும் வசதியாகப் போய்விட்டது. அவர் தன்னுடைய கைங்கரியத்தை எவ்வித இடையூறும் இன்றித் தொடர்வதற்கு பாதிக்கப்பட்டவர்களின் மௌனமும் ஒரு ஊக்கியாயிற்று. ஆனாலும் நாள் செல்லச்செல்ல ஒரு சிலர் தம்முடைய பாதிப்பை மனசுக்குள்ளே பூட்டி வைக்க முடியாமல் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யத் தொடங்கினர். நாலைந்து பேர் ஒரே விதமான முறையில் ஏமாற்றப்பட்டதாக அளித்த புகாரைத் தொடர்ந்து யாழ்.பொலிஸார் உஷாராகினர். உடனேயே பத்திரிகைகள் வாயிலாக குறித்த பெண்ணின் மோசடி வேலைகளையும், அது குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும் மக்களுக்கு அறிவுறுத்தினர்.

இவற்றையெல்லாம் கணக்கிலே எடுக்காத அந்த மோசடிப்பெண் வழமைபோலவே ஒருவரை ஏமாற்றும் பொருட்டு வங்கி ஒன்றுக்குச் சென்றிருந்த போது கையும் களவுமாக மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அந்த மோசடிப் பெண் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட செய்தியறிந்து ஏராளமானோர் - குறித்த பெண்ணிடம் பணம் கொடுத்து ஏமாந்தோர் - பொலிஸ் நிலையத்துக்கு படையெடுக்கத் தொடங்கினர். இப்போது பாதிக்கப்பட்ட பலர் தமது முறைப்பாடுகளை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து வருகின்றனர்.

இது சந்தைக்கு வந்த ஒரு உதாரணம் மட்டுமே. இதுபோன்ற ஏராளமான ஏமாற்று வேலைகள் நமது மண்ணில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏமாற்றப்பட்டதை வெளியில் சொன்னால் வெட்கக்கேடு, சிலவேளைகளில் குறித்த மோசடியை அம்பலப்படுத்தினால் ஏதேனும் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படுமோ என்ற பயம், நடந்தது நடந்து விட்டது, இனி எதுவுமே செய்ய முடியாது என்ற விரக்தி நிலை போன்றனவற்றால் பெரும்பாலான மோசடிகள் வெளிவராமலே போய்விடுகின்றன. வங்கியிலே கடன் வாங்கித் தருவதாக மோசடி செய்த ஒரு பெண்மட்டுமே இப்போது அகப்பட்டிருக்கிறார். ஆனால் இவரைப் போல - இவரைவிடவும் வீரியம் கூடிய - தில்லாலங்கடி வேலைகளைச் செய்த பலர் இன்னமும் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

தேர்தல் காலத்தில் ஒரு குறித்த கட்சிக்காகவும், வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகவும் கூறி பொதுமக்களின் பெருந்தொகைப் பணத்தோடு மாயமாகிவிட்ட தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவரின் மோசடியை யாழ்.மக்கள் அவளவு சுலபத்தில் மறந்திருக்க மாட்டார்கள்.

இதுதவிரவும் தம்மை பிரபலம் மிக்க நிறுவனங்களின் அதிகாரம் மிக்க உத்தியோகத்தராக காட்டிக் கொள்ளும் சில போலிகள் வேலை தேடும் இளைஞர்களை தம் வலையில் வீழ்த்தி அவர்களிடம் பணம் கறக்கும் செயலும் நடைபெற்றதாக தெரியவருகிறது. ஆனாலும் சட்டத்துக்கு முரணான வகையில் இந்தப் பணத்தை கொடுத்ததனால் யாரிடம் சென்று முறையிடுவது என்று தெரியாமல் அந்த இளைஞர்கள் தவிக்கிறார்கள்.

ஒரு சில இடங்களில் நிதி நிறுவனங்களின் பெயரைச் சொல்லி



மக்களின் பணத்தை அபேஸ் செய்த ஒரு சிலர் தம்முடைய சொந்த இடங்களிலிருந்து தலைமறைவாகி வேறு இடங்களுக்கு குடிபுகுந்து அங்கும் தம் கைவரிசையைக்

ஔண்யன்

காட்டிக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின்றன.

இத்தகைய மோசடிச் சம்பவங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள மக்களின் விழிப்புணர்வு ஒன்று மட்டுமே சரியான தெரிவாக இருக்க முடியும். எதையும் நேர்வழியில் அணுகாது குறுக்கு வழியில் சென்றால் இலகுவாகப் பெற்றுவிட முடியும் என்ற யாழ்ப்பாணத்து மனோநிலை இன்னும் தொடர்வதாலேயே இத்தகைய ஏமாற்றங்களை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. அரச இயந்திரம் சீராக இயங்கத் தொடங்கியுள்ள சூழலில் 'அவரிடம் போனால் அந்த வேலை கிடைக்கும், இவருக்கு காசைக் கொடுத்தால் இந்தக் கடனைப் பெறலாம்' என்பன போன்ற கனவுநிலைப்பட்ட செயற்பாடுகளுக்குள் இறங்குவது கண்ணைத் திறந்து கொண்டு கடலுக்குள் விழுவதைப் போன்றதாகிவிடும். உண்மையில் எதையுமே சட்டரீதியான வகையில் நாம் எதிர்கொண்டு, நேர்வழியில் சென்று அடைவதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அதீத ஆசைகளை ஊட்டி எதையும் குறுக்கு வழியில் பெற்றுக் கொள்ளலாம் என்ற கனவுலகத்தில் நம்மை மிதக்க வைக்கும் ஆசாமிகள் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சில வேளைகளில் நம்மையுமறியாமல் நாம் ஏமாற்றப்பட்டோமாயின் அது குறித்து பகிரங்கப்படுத்துவதன் ஊடாக நாம் ஏமாற்றப்பட்டதைப் போல இன்னொருவர் ஏமாற்றப்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அதைவிடுத்து யாம் பெற்ற துன்பம் பெறுக மற்றவரெல்லாம் என்ற நினைப்போடு எங்களுடைய ஏமாற்றத்தை எங்களுக்குள்ளேயே புதைத்துக் கொண்டு இருப்போமானால் இன்னும் நிறையப்பேர் மக்களின் தலையில் சம்பலரைக்க புறப்பட்டுவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி

# சுந்தரமூர்த்தி தையலாம்பாள்

(அம்பிகா பாட்டி)

நாம் இவ்வுலகில் குடியிருக்கும் கூடாரமாம் உடல்
அழிந்து போனாலும் கடவுளிடம் இருந்து கிடைக்கும் அழியாத வீடு
ஒன்று விண்ணுலகில் நமக்குண்டு என்று தேடிச்சென்றீரோ?
கண்ணீருக்குத் தடை போட்டதுபோல எவராலும்
உங்கள் நினைவுகளுக்குத் தடைபோட முடியாது
நினைவுகளையும் அன்பையும் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்றது ஏனோ?
ஆன்ம இளைப்பாற்றுக்காக ஆறுதலடைந்தீரோ?
எங்கிருந்தாலும் எங்களை ஆசீர்வதிப்பீர்களாக
இம்மண்ணில் சீராய் நாங்கள் வாழ்வதற்கு.

எங்களுடன் யாழ்.இந்துக் கல்லூரியில் உடன்பயின்ற ஆருயிர் நண்பன் பாபு (சுந்தப்பா - U.K.)வின் அன்புப் பாட்டி திருமதி சுந்தரமூர்த்தி தையலாம்பாள் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா இறைவன் நிழலில் சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

(98927)

என்றும் மறவா உங்கள் பேரப்பிள்ளைகள்:
ஸ்ரீநிமல், ராகுலன், கார்த்திகன், சகிந்தன், அனுஜன்,
பிரதீப்குமார், நிர்மலன், தயா, சாந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் வீதி ஒழுங்குகள் படுமோசம்!

# இதனால் உயிர்களைப் பலிகொள்ளும் விபத்துக்கள்!!



யாழ். குடாநாட்டில் போக்குவரத்து விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்தும் நடவடிக்கையில் போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில தினங்களாக யாழ். நகரப்பகுதி உட்பட குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் போக்குவரத்துப் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. வாகன வரி அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றைப் பரிசோதிக்கும் பணியில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துப் பொலிஸார் தமது நடவடிக்கைகளை முடுக்கி விட்டதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றன. அதே நேரம் யாழ்ப்பாணத்துக்கு வெளியேயும் செல்கின்றன. காலை முதல் இரவு வரை எந்த நேரமும் போக்குவரத்து நெரிசல்கள் நிறைந்த வீதிகளாக யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் மாறிவிட்டன. சொகுசுக் கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள், கனரக வாகனங்கள் என அனைத்து ரக வாகனங்களையும் யாழ். வீதிகளில் சர்வ சாதாரணமாக இப்போது காணமுடிகின்றது. தென்னிலங்கையில் இருந்து பெரும் எண்ணிக்கையான சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தைப் பார்வையிட வருகின்றமையால் வீதிகளில் அடிக்கடி நெரிசல்கள் ஏற்படுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் யாழ். குடாநாட்டின் அனைத்து முக்கிய வீதிகளும் படு 'பிஸி'யான வீதிகளாக இப்போது மாறிவிட்டன. இதனால் வீதிகளில் மிகமிக அவதானத்துடன் பயணம் செய்ய வேண்டிய நிலை யாழ். மக்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. வீதி சமிக்ஞைகளைச் சரியாகக் கடைப்பிடித்துப் பயணிக்க வேண்டிய சூழல் தோன்றியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் குடியிருக்கும் மக்கள் மத்தியில் வாகனப்பாவனை இப்போது என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கிறது. தமது தேவைகளை வேகமாக நிறைவு செய்து கொள்வதற்காக அவர்கள் வாகனங்களை விரும்பிக் கொள்வனவு செய்து வருகின்றார்கள். வசதி படைத்தவர்கள் சொகுசுக்கார் மற்றும் ஹையேஸ் ரக வாகனங்களைக் கொள்வனவு செய்கிறார்கள். ஏனையவர்கள் மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்கிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையங்களில் தினமும் சனக்கூட்டம் நிரம்பி வழிகின்றது. பெரும் எண்ணிக்கையான மோட்டார் சைக்கிள்கள் தினமும் விற்பனையாகின்றன. இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றார்கள். பலருக்கு வெளிநாட்டு உறவுகள் அனுப்பும் பணம் மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்ய உதவுகின்றது.

வாகனப் பாவனை அதிகரிக்கும் அதே வேளை அவற்றினால் ஆபத்துக்களும் அதிகரித்து வருகின்றமையை இங்கு சுட்டிக்காட்டியே ஆக வேண்டும்.

யுத்தத்தின் காரணத்தால் மிக நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. இதனால் இளம் சந்ததியினருக்கு போக்கு வரத்து விதிமுறைகள் பற்றிய போதிய விளக்கம் இல்லை. இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எதுவும் இதுவரை யாழ்ப்பாணத்தில் பெரிய அளவில் இடம்பெறவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அவற்றில் அதிக அக்கறை காட்டவில்லை. இதன் விளைவு வீதிகளில் இப்போது பயணிக்கும் போது எமக்குத் தெரிகின்றது.

கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாட்டின் வீதிகளில் வாகன விபத்துக்கள் சட்டென அதிகரித்திருக்கின்றன. அதிகரித்த வாகனப் பாவனை, விதிகளைச் சரியாக கடைப்பிடிக்காமை ஆகிய காரணங்களினால் இந்த விபத்துக்கள் ஏற்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்தே வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் தமது ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

பாதசாரிகளின் கடவைகள், முக்கிய சந்திகள், வீதி வளைவுகள், பாலங்கள் என்பவற்றைச் சரியாகக் கவனிக்காமல் படு வேகமாக வாகனத்தைச் செலுத்தும் கலாசாரம் ஒன்று யாழ்ப்பாணத்தில் உருவாகியிருக்கிறது. மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் இளைஞர்கள் 'ஸ்ரைல்'லுக்காக தலைக்கவசம் அணியாமல் செல்வதையும், நெருக்கடியான வீதிகளில் அதி வேகமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்துவதையும் காணமுடிகின்றது. சிலர் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திக்கொண்டு தலைக்கவசத்துக்குள் கைத்தொலைபேசியை வைத்து உரையாடிக் கொண்டு செல்லும் சம்பவங்களும் சாதாரணமாகிவிட்டன. அது மட்டுமல்லாமல் 'ஹையஸ்' வாகனங்கள், சொகுசு பஸ்கள், வான்கள் என்பவற்றைச் செலுத்தும் சாரதிகள் சிகரெட் பிடித்தவாறும், மதுபோதையிலும் வாகனத்தை ஓட்டுவதை அன்றாடம் காணமுடிகிறது. போதாக்குறைக்கு தென்னிலங்கையில் இருந்து பயணிகளுடன் வரும் பஸ்கள் யாழ். நகரின் வீதிகளில் சீறிப்பாய்ந்து செல்வதும் அதிகரித்திருக்கிறது.

இதனால் இப்போது யாழ்ப்பாணத்தின் வீதிகளில் விபத்துச் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. அலுவலகங்கள், பாடசாலைகள் ஆரம்பமாகி முடிவடையும் நேரங்களிலேயே இந்த விபத்துக்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. விபத்துக்களினால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதுடன் பலர் நிரந்தர அங்கவீனர்களாக்கப்படும் பரிதாப நிலையும் உருவாகின்றது.

**– அதிரன்**



யாழ். குடாநாடு இப்போது எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக இந்த வாகனவிபத்துக்கள் தலைதூக்கியிருக்கின்றன. எனவே இதற்கு ஒரு சரியான தீர்வு எட்டப்பட வேண்டிய அவசியம் இப்போது எழுந்திருக்கிறது.

இதற்கான தீர்வினை எட்டுவதற்கு சில வழிமுறைகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

✱ வாகனங்களை ஓட்டும் சாரதிகள், பாதசாரிகள் ஆகியோர் போக்குவரத்து விதிமுறைகளைச் சரியாகத் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

✱ சன நெருக்கடி மிகுந்த வீதிகளில் வேகமாக வாகனத்தைச் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

✱ பாதசாரிகள் வீதிகளில் மஞ்சள் கோடுகளால் அடையாளமிடப்பட்ட பகுதிகளில் மட்டுமே வீதிகளைக் கடக்க வேண்டும்.

✱ வாகன ஓட்டிகள் வாகனத்தைச் செலுத்தும் போது மது போதையில் இருப்பதையோ அல்லது சிகரெட் புகைப்பதையோ தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

✱ மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோர் கட்டாயமாகத் தலைக் கவசம் அணிந்திருக்க வேண்டும்.

✱ பாடசாலைகள், வைத்தியசாலைகள், வங்கிகள், அலுவலகங்கள் உள்ள இடங்களில் மெதுவாக அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்த வேண்டும்.

✱ வாகனங்களில் உள்ள சமிக்ஞை விளக்குகளை சரியான முறையில் செயற்படுத்தி வீதிகளில் வாகனங்களைச் செலுத்த வேண்டும்.

✱ சிறுவர்கள் வாகனங்கள் செலுத்துவதை அனுமதிக்கக் கூடாது.

✱ 49 சி.சி மோட்டார் சைக்கிள்களை சிறுவர்கள் செலுத்துவது அதிகரித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

✱ வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரமின்றி அவற்றைச் செலுத்தக்கூடாது. அவ்வாறு செலுத்தி விபத்துக்கள் ஏற்படும் பட்சத்தில் கடும் தண்டனைகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

மேற்கூறப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடித்தால் விபத்துக்களை தவிர்க்க முடியும்.

இலங்கையில் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான வாகன ஓட்டிகள் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெறாமல் வாகனங்களைச் செலுத்திய போது கைது செய்யப்பட்டதாக போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். மனித உயிரின் மகத்துவத்தை உணர்ந்து வீதிகளில் பயணிப்போர் ஒழுங்கு முறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறுகின்றனர். யாழ். மக்களுக்கு போக்குவரத்து ஒழுங்கு விதிகள் பற்றிய போதிய அறிவு கிடையாதெனப் பொலிஸார் சுட்டிக்காட்டுகின்றனர். போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான பல்வேறு கருத்தரங்குகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தாம் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள்.

எனவே வீதிகளில் தற்போது ஏற்பட்டு வரும் வாகன விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு பங்களிப்புச் செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும் குடாநாட்டு மக்களாகி அனைவருக்கும் உண்டு என்பதை மறந்துவிட முடியாது. ஆகவே வீதிகளில் பயணிக்கும் போது ஒழுங்கு விதிகளை உரிய முறையில் கடைப்பிடிப்பதன் மூலம் எமக்கும் பிறருக்கும் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ளுவோம்.

இதன் மூலம் விபத்துக்கள் அற்ற யாழ்ப்பாணத்தை விரைவில் நாம் காணமுடியும். ✱✱✱✱✱✱✱✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்களைக்

## காணிக்கையாக்குகின்றோம்



நற்குடியின் நிலமதிலே
உருவாகினாய் – தமிழ்
தாயவளின் மடியினிலே
கருவாகினாய்
பற்றி அவள் இருவிழியில்
உறவாகினாய்– நல்
சுற்றமெனும் வடகரையில்
தெரிவாகினாய்....

நண்பர்களின் நடுவினிலே
உறவாடினாய்
பல்கலையின் கழகமதில்
ஒளியாகினாய்..
புன்னகையின் இதயமதால்
உரையாடினாய்– ஏன்
ஆழ்மனதின் வேதனையில்
சருகாகினாய்?

வாழ்வதனிற் சோதனைகள்
உருவாகலாம்– அவை
நாள் நகரப் போதனையாய்
உரமாகலாம் – உன்
பொன் நினைவு காற்றலையில்
மறையாதடா–எம்
நட்பதனின் நெஞ்சமதிற்
கருவாகுவாய்...

## செல்வன்

# சண்முகநாதன் சுஜீபன்

(2 ஆம் வருடம், பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)

எமது நண்பன் சுஜீவனின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்:**

**நண்பர்கள், 2 ஆம் வருடம்**
**பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியை இழக்கும் அபாயத்தில் இலங்கை!

விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாது அழிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், என்ன காரணங்களுக்காக அந்த அமைப்பு தோற்றம் பெற்றதோ அந்தக் காரணங்கள் இன்னமும் தீர்க்கப்படாமல் அப்படியேதான் இருக்கின்றன என்பதே உண்மை.

இலங்கைத் தீவில் போர் மூள்வதற்கு வழிவகுத்த காரணிகள் எவையோ அவற்றைக் கண்டறிந்து தீர்க்கும் வகையிலான எந்த முனைப்புகளையும் அரசு மேற்கொள்ளவில்லை.

பிரபாகரன் கொல்லப்பட்ட உடனேயே, 'விடுதலைப் புலிகள் அமைப்பினது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார்' என்ற செய்தியை நாட்டிலுள்ள அனைத்துக் கைத்தொலைபேசிகளுக்கும் குறுஞ்செய்தியாக (SMS) இலங்கை அரசு அனுப்பியிருந்தது.

இந்தச் செய்தி உண்மை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் (அல்லது உண்மையாக இடம்பெறாத ஒன்றை இடம்பெற்றதாக நம்பவைக்கும் வகையில்) அவரது இறந்த உடலின் வீடியோக் காட்சிகள் தொலைக்காட்சிகள் வழியாக ஒளிபரப்பப்பட்டிருந்தன.

பிரபாகரனதும், அவர் கட்டி எழுப்பிய விடுதலைப் புலிகள் என்ற பிரிவினைவாத அமைப்பினதும் முடிவை குறிப்புணர்த்தும் வகையில் பிரபாகரனது நெற்றியில் பெரிய காயமொன்று காணப்பட்டது.

பிரபாகரன் இறந்ததாக அறிவிக்கப்பட்டவுடன் அவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார் என்றே பலரும் கருதினர். ஆனால், இன்று பிரபாகரன் உயிருடன் தான் இருக்கிறார் என்பதை இன்னமும் நம்புபவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறு இணையத்தள ஊடக ஒன்றில் செய்தியாளர் Paul Maley எழுதியுள்ளார். ''இலங்கையின் வடக்குப் பகுதியின் ஓர் கிராமத்தில் நாம் சந்தித்த ஒரு இளம்பெண் பிரபாகரன் இன்னமும் உயிருடன் தான் இருக்கிறார் என்றும் அவர் இறுதிக்கட்ட யுத்தத்திற்காகத் தயாராகி வருகிறார்'' என்றும் கூறிகிறார்.

''தமிழர்கள் தற்போது மகிழ்ச்சியுடன் இல்லை தலைவர் பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருக்கிறார். கூடியவிரைவில் கிழக்கு மாகாணத்தில் மோதல்கள் வெடிக்கும் என நான் நம்புகிறேன்'' என்கிறார் அந்தப் பெண்.

தவறான வழிநடத்தலின் பால் அமைந்த நம்பிக்கையினை இந்தப் பெண் கொண்டிருந்தாலும் இவரது கருத்துக்கு நடுவே ஓர் உண்மை புதைந்து விடக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாது அழிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் என்ன காரணங்களுக்காக அந்த அமைப்புத் தோற்றம் பெற்றதோ அந்தக் காரணங்கள் இன்னமும் தீர்க்கப்படாமல் அப்படியேதான் இருக்கின்றன என்பதே உண்மை. இருப்பினும் அர்த்தமுள்ள வகையில் இனநல்லிணக்க முனைப்புக்களை முன்னெடுக்கும் விடயத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ போதிய கவனம் செலுத்துவதற்கு இது வரை தவறிவிட்டார்.

இந்தோனேஷியாவில் உள்ளதைப் போல நாட்டினது சிறுபான்மை தமிழர்களுக்கு அதிக அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் சுயாட்சி வழியில் அமைந்த தீர்வை வழங்கக் கூடிய போதிய அதிகாரங்களுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ இருப்பதாகவே பலரும் கருதுகிறார்கள்.

பதிலாக, பெரும்பான்மைச் சிங்களவர்கள் வசித்துவரும் நாட்டினது தெற்குப் பகுதிகளின் பெரும் வெளிநாட்டு முதலிடுகளை செய்வதிலேயே அவர் குறியாக இருக்கிறார்.

2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் கொண்டுவரப்பட்ட அமைதி முயற்சிகளை அரசின் சார்பில் கூட்டிணைத்த இலங்கையின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர்களாக இருந்த ஐவர்வரில் ஜானக ஜெயசேகரவும் ஒருவர்.

இலங்கை அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் கடந்த மே மாதம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட நாட்டினது வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களின் மீள் கட்டுமானப் பணிகளிலேயே அரசு தனது கவனத்தைச் செலுத்தி வருகிறது.

'மீள் கட்டுமானம் என்பது அவசியமானது தான்' என்கிறார் ஜானக ஜெயசேகர. ஆனால், விடுதலைப் புலிகளும், ஏனைய தமிழ் குழுக்களும் ஆயுதங்களை தூக்கியதற்கான காரணம் இது அல்ல. சிறுபான்மைத் தமிழ் சமூகத்தவர்களும் சமமாக நடத்தப்படவேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். அதற்கான ஒரு சூழலை ஏற்படுத்த அவர்கள் முனைந்தார்கள்.

**தமிழில்: தி.வண்ணமதி**

''இந்த நாட்டில் இனப்பிணக்கு முளை விடுவதற்கு வித்திட்ட இந்த அடிப்படையான விடயங்களுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை'' என்கிறார் ஜெயசேகர.

''தமிழர்கள் முகம்கொடுத்து நிற்கும் துன்ப துயரங்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை எனில் தமிழர்கள் மீண்டும் வன்முறை தழுவிய பாதைக்குத் திரும்பும் பெரும்அபாயம் இருக்கிறது''. என இலங்கையின் சமாதானச் செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர் ஜானக ஜெயசேகர கூறுகிறார்.

''நாட்டினது இனப்பிரச்சினையின் வன்முறை சார்ந்த பக்கத்துக்கு மாத்திரமே அரசு தற்போது தீர்வு கண்டிருக்கிறது. தமிழர்களுக்கும், தமிழர் வாழும் பகுதிகளுக்கும் அதிகாரங்களை பகிர்ந்து அளிக்கும் வகையில் நாட்டினது அரசமைப்புச் சீர்திருத்துவதற்கு அல்லது மாற்றிஅமைப்பதற்கான அரியதொரு வாய்ப்பு தற்போது ராஜபக்ஷவின் அரசுக்கு கிடைத்து இருக்கிறது'' என்கிறார் அவர்.

''விடுதலைப் புலிகள் அமைப்பும், நாட்டினது வடக்கு கிழக்குப் பகுதியில் அவர்கள் அமைத்திருந்த சிற்றாட்சியும் வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து தமக்கென யாரும் இல்லையே என்ற எண்ணம் தமிழர்கள் மத்தியில் மேலோங்கி காணப்படுகிறது'' என இலங்கையின் விவகாரத்தில் நன்கு பரிச்சயமான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவர் கூறுகிறார். இந்த நாடு எமக்கானது அல்ல என தமிழர்கள் கருதுகிறார்கள்.

''தமக்காக யாரும் இல்லையே என்ற இந்த எண்ணம் தான் அவுஸ்திரேலியா நோக்கிப் படகுகளில் புறப்படுவதற்கு தமிழர்களை உந்துகிறது'' என்கிறார் அவர்.

ஆனால், இலங்கையின் மனிதாபிமான நிலைமைகள் மேம்பட்டிருப்பதன் காரணமாக இலங்கையில் இருந்து வரும் புகலிடக்கோரிக்கைகளை ஏற்பதில்லை என அவுஸ்திரேலிய அரசு அறிவித்து இருக்கிறது. இலங்கையின் நிலைமைகள் தமிழர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கின்றனவா என்பது தான் தற்போதைய கேள்வி.

தமிழர்களைப் பொறுத்தவரையில் அங்கு பாதுகாப்பானதொரு நிலைமை இல்லை. என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். இருப்பினும், தமிழர்கள் வாழ்வதற்கு சாதகமான நிலைமை இலங்கையில் முழுமையாக இல்லை என்ற தவறான எண்ணம் அவுஸ்திரேலியாவில் காணப்படுகிறது. இந்த எண்ணம் ஏற்படுவதற்கு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் ஒரு காரணம்.

நாட்டினது மொத்த சனத்தொகையில் 12 சதவீதமான 20 கோடி தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள். நாட்டினது தலைநகர் கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வசித்து வருகிறார்கள். அங்கு தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள். தங்களது நாளாந்த செயற்பாடுகளான கல்வி, வேலை என அனைத்திலுமே இவர்கள் இணைந்து இருக்கிறார்கள்.

அவுஸ்திரேலியா இதுவரைக்கும் 20 தமிழர்களை திருப்பி அனுப்பி இருக்கிறது. இவர்களில் பெரும்பாலனவர்கள் கொழும்பைச் சேர்ந்தவர்களே. இவ்வாறாக திருப்பி அனுப்பப்படுபவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக அவுஸ்திரேலிய அரசு கவலை கொள்வதாக தெரியவில்லை.

திருப்பி அனுப்பப்படும் தமிழர்களுக்கு இலங்கையில் நேரடியாக அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்கிறார் ஜெயசேகர.

இவ்வாறாக திருப்பி அனுப்பப்படுபவர்களுக்கும் விடுதலைப் புலிகளுடன் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. எனில், அவர்களை பாதுகாப்புத் தொடர்பாக கவலை அடைய தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.

இவர்கள் தமிழர்கள் என்பதற்காக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என நான் எண்ணவில்லை. ஆனால், விடுதலைப்புலிகளுடன் இவர்களுக்கு தொடர்பு இருந்திருந்தால் அரசு நிச்சயமாக இவர்கள் தொடர்பாக கவனத்தில் எடுக்கும் என இலங்கையின் முன்னாள் சமாதான செயலகப் பணிப்பாளர் கூறுகின்றார்.


வடக்கைப் பொறுத்தவரை அங்கு நிலமைகள் குழப்பம் தருகின்றனவாகவே அமைகின்றன. போரின்கோரப்பிடிக்குள் சிக்குண்ட தமிழர்கள் மனஅழுத்தத்திற்குள் உள்ளாகி இருக்கிறார்கள் அல்லது இடம்பெயர்ந்து வசிக்கிறார்கள். நீண்ட பல ஆண்டுகளாகத் தொடர்ந்த போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியாகவும் வளர்ச்சி அடையாத பிரதேசமாகவுமே நாட்டினது வடபகுதி காணப்படுகிறது.

வடக்கைப் பொறுத்தவரையில் நிலமைகள் மோசமாகவே உள்ளன என அங்கு மனிதாபிமானப் பணிசெய்து வரும் பணியாளர் ஒருவர் கூறுகிறார்.

'' மோதல்கள் கடந்த ஆண்டுதான் முடிவுக்கு வந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்வாறாக

(24 பக்கம் பார்க்க)

## திருமணப் பொன் விழாவும் முத்துவிழாவும்



திரு. செல்லப்பா நடராசா நெட்டிலிப்பாய், கோண்டாவில்.
திருமதி பத்மாவதி நடராசா

பெரும் புகழோடு பெருமையாய் வாழ்ந்த
திருவளர் செல்லப்பா திருமகன் நடராசா
அருளாளன் கோண்டாவில் ஐயர்ப் பாடசாலையில்
எனது குருநாதன் பெரியதம்பி ஆசிரியரிடம்
தமிழையும் இலக்கண இலக்கியங் களையும்
ஐயந் திரிபறக் கற்றதன் மாண்பினால்
தினகரன் நாளிதழ் ஏட்டின் எழுத்தாளனாய்ப்பின்
பாராளுமன்ற மரபுகள் நூல் ஆசிரியனாய்
ஒளிர்ந்த அன்னாரை வாழ்த்தும் தருணத்தில்
பெற்றார் சொற்படி பத்மா தேவியை
பற்றாய்த் திருமணம் புரிந்தாண்டு பலவாக
ஐம்ப தாண்டென அடுக்கும் பொன்விழாவுடன்
எண்பதாண்டகவை தன் இனிய முத்துவிழாவையும்
ஒன்றாய்க் கொண்டாட இறைவன் அருளிட
பாவையர் ஆரத்தி எடுத்துப் பாராட்ட
காவலன் சமூகத்தின் கனவான் என்றும்
சமாதான நீதிவான் தமிழ்வாணன் எனவும்
இமாசலம் போன்ற இனிய நேயனை
அன்புடன் நோக்கி ஆசிகள் புரிந்தியான்
சொன்மாலை தொடுத்து பன்மாலை புனைந்து
பல்லாண்டு வாழ்கவெனச் சுருதி
சொல்லாண்டு வாழ்த்தினேன்
தொடர்ந்து வாழ்ந்திருக்கவே

முதுபெரும் புலவர் கலாபூஷணம், புலவர்மணி,
நல்லாசிரியர் வை.க.சிற்றம்பலம் (இப்போது வயது 96+)

**வாழ்த்துவோர்:**

திருவருள்மிகு நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் அருளால் வாழுகின்ற
எங்கள் குடும்பப் பெரியவர்கள்,
என்றென்றும் நீடூழி வாழும்படி ஏத்தும்

**பிள்ளைகள்:** திருமதி பவானி கலாநிதி இ.விக்கினேஸ்வரன்
திருமதி கல்யாணி தயாளன் U.S.A
திரு.நடராசா வாகீசன், கனடா
திருமதி தாரணி இராதாகிருஷ்ணன் U.S.A

**மருகர்:** கலாநிதி இ.விக்னேஸ்வரன்
திரு.தியாகராசா தயாளன் U.S.A
திருமதி வாகீசன் சுபாஜினி கனடா
திரு.வெற்றிவேலு இராதாகிருஷ்ணன் U.S.A

**பேரப்பிள்ளைகள்:**
விசாகன், வாசனா விக்னேஸ்வரன்
தாமரா, அபிரா தயாளன் U.S.A, தென்றல், மாதுளன் வாகீசன் - கனடா,
சாம்பவி, வருண், ஜீவன் இராதாகிருஷ்ணன் U.S.A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WORK & STUDY IN UK

துரிதகதியில் Student visa பெறுவதற்கான வழிகாட்டல், College & Universities அனுமதி (CAS Letter) பெற்றுக் கொடுத்தல், Forms Fill up செய்தல், Financial Sponsorship செய்தல் மற்றும் (Free English Classes)

தொடர்பு: 077 9218444, 011 3042949 (செ/567937)



## காணி விற்பனைக்கு

புலோலி பாடசாலைக்கு அருகாமையில் (கொடிகாமம் வீதி) வெட்டுக் கிணற்றுடன் கூடிய 4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 3975195


## இதய அஞ்சலி



அமரர்

### சண்முகநாதன் சுஜீவன்

(பொறியியல்பீட இரண்டாம் வருட மாணவன்- பேராதனைப் பல்கலைக்கழகம்)

எமது சங்கத்தின் களஞ்சிய முகாமையாளர் திரு. த. சண்முகநாதன் அவர்களது அன்புப் புதல்வன் சுஜீவன் அவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கெடுத்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கரைச்சி தெற்கு பல நோ.கூ.சங்கம், கிளிநொச்சி. (98889)


## நெற்காணி விற்பனைக்குண்டு

நல்ல விளைச்சல் தரக்கூடிய நெற்காணி 55பரப்பு (வண்ணா ஏணி) மறவன்புலோவில் கேரதீவு வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு. பகுதியாகப் பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு:- திருநீலகண்டன்
(S.K.ஆறுமுகம் வீடு), கைதடி நாவற்குழி,
தொலைபேசி:- 6660367 (98860)



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977, கார்த்திகை நட்சத்திரம், 1ஆம் பாதம் செவ்வாய் தோஷமற்ற கிரகபாவம் 18 ஐ உடைய பொறியியலாளர் (Electronic Engineer) கலாநிதிப் பட்டம் பெற்றுக்கொண்டு தொழில் புரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு:
0213218014,0777117030
E- mail - thivakaran 1984 @ gmail.Com. (98763)



## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லக்கினத்தில் செவ்வாய் உடைய 41 ¾ கிரகபாவம் கொண்டவரும் பூராடம் 1ஆம் பாதம் நட்சத்திரமும் B.sc எஞ்சினியர் (எலக்ரோனிக்) ஆக அரச நிறுவனத்தில் பணி புரியும் 25 வயது நிரம்பிய பெண்ணுக்கு மணமகன் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0779915042 (93635)



## தேவை

யாழ்.பிரதான வீதியில் இயங்கும் பிலிப்ஸ் நேசிங் ஹோமிற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை

1) தாதிய உதவியாளர் (சுற்றாடலில் இருப்பவர்கள். விரும்பத்தக்கது)
2) ஒப்பரேசன் தியேட்டர் வேலை தெரிந்த தாதியர்/ தாதிய உதவியாளர்.
3) சுத்திகரிப்பாளர் பெண்
4) மேற்பார்வையாளர் - ஆண்
5) வரவேற்பாளர் - பெண்

நேர்முகத் தேர்வு - ஞாயிறு (30.05.2010 முற்பகல் 10 மணிக்கு)
இடம்:- பிலிப்ஸ் நேசிங் ஹோம் (98869)
(சிறைச்சாலை முன்பாக, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.)




## காணி விற்பனைக்கு

நாவற்குழி கோயிலாக்கண்டியில் 12 பரப்பு நெற்காணி விற்பனைக்கு. பரப்பு ரூபா 25,000/=

தொடர்பு: இராசலிங்கம், முதியோர் இல்லம், கைதடி.
தொ.பே - 077 6203909, 077 9177145, 021 3213526 (98893)


## மரண அறிவித்தல்

### தம்பு இராமசாமி கனகலிங்கம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராமசாமி கனகலிங்கம் இந்தியாவில் 26.05.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நவமணியின் அன்புக் கணவரும் சிவதாயினி (CF, Sri Lanka), கௌசலன் (Hoston,USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துலிங்கம் (Qatar), காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், யோகலிங்கம், அஞ்சலிங்கம் மற்றும் மகேஷ்வரி-இராஜசூரியர் (Canada), ஞானலிங்கம் (U.K), சோதிலிங்கம் (Canada), நவரட்ணலிங்கம் (Colombo), நாகேஷ்வரலிங்கம் (U.K) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராஜரட்ணம், இராசமணி, காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், சீவரட்ணம் மற்றும் அழகரட்ணம், விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் 32, கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Mount Lavania பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(செ/5678668)


## வேலைவாய்ப்புக்கள்

TOKYO SUPER MIX
READY MIXED CONCRETE

### கொங்கிறீற் உடன் கலவை ஆலை-யாழ்ப்பாணம்

கொங்கிறீற் உடன் கலவை ஆலை-யாழ்ப்பாணம் வெளிநாட்டு ஒருங்கிணைப்புடனான இலங்கையின் பிரதான சீமெந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களான புகழ்பெற்ற டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சி. பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகிறது.

### ரெடி மிக்ஸ்ட் கொங்கிறீற் ஆலை இயக்குபவர்

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு பின்வரும் செயற்பாடுகளை கையாளக் கூடிய சுறுசுறுப்பான இளைஞர்களை தேடுகிறோம்.

- ரெடி மிக்ஸ்ட் கொங்கிறீற் ஆலையை திறமையாக இயக்குதல்.
- ஆலையின் செயற்பாடு தொடர்பாக எழக்கூடிய அவசரகால நிலைமைகளை சுயமாக கையாளும் ஆற்றல். (Automation pneumatic & Mechanical Aspects).
- இதே வேலையில் 2 வருட அனுபவம்.

### தர கட்டுப்பாட்டு உதவியாளர்

30 வயதிற்கு உட்பட்ட, விஞ்ஞானப்பிரிவில் க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தவர்கள் மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

### ட்ரக் மிக்ஷர் சாரதிகள்

45 வயதிற்கு உட்பட்ட, நல்லாரோக்கியமும் கனரகவாகனம் ஓட்டுவதில் 5 வருட அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

### லோடர் இயக்குபவர்கள்

லோடர் இயக்குவதில் 3 வருட அனுபவமும் நல்லாரோக்கியமும் உள்ள 35 வயதிற்குட்பட்டவர்கள்

### ட்ரக் மிக்ஷர் உதவியாளர்கள்

35 வயதிற்கு உட்பட்ட உறுதியும் ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் கொண்ட இளைஞர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

உறவினர்கள் அல்லாத நற்சான்று பகரக்கூடிய இருவரின் பெயர், முகவரி விவரங்களுடன் விண்ணப்பங்கள் தபால் அல்லது மின்னஞ்சல் மூலம் கீழே ஒப்பமிட்டவருக்கு 7 நாட்களுக்குள் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

முகாமையாளர் - மனிதவள & நிருவாகம்
TOKYO CEMENT CO. (LANKA) PLC.
No. 469 1/1, Galle Road, Colombo 03.
Fax: 0112 500897
E-mail: jeyaraj@tokyocement.lk


## மரண அறிவித்தல்

### திருமதி தையலாம்பாள் சுந்தரமூர்த்தி (அம்பிகா)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தாவும் உரிமையாளருமாகிய அமரர் கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் - அமரர் கண்ணம்மாளாச்சி ஆகியோரின் அருமைப் புதல்வியும் அமரர் சீனிவாசபிள்ளை- அமரர் செங்கம்மாளாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பேராசிரியர் சுந்தரமூர்த்தியின் (மதுரை) அருமை மனைவியுமாகிய தையலாம்பாள் (அம்பிகா) 25.05.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அனுசியா, கண்ணன் (முன்னாள் விரிவுரையாளர், கணனி விஞ்ஞானத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் வைத்திலிங்கம் செட்டியார் (பரம்பரை தர்மகர்த்தா, வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், பொறியியலாளர் - பூரோவில்); தயாமதி ஆகியோரின் அன்பு மாமியும் கந்தப்பா (பாபு), மதுரா ஆகியோரின் அன்புப் பாட்டியும் அமரர்களான கந்தப்பச்செட்டியார், முத்துக்காயரோகணம் செட்டியார், ஜெகதாம்பாள் மற்றும் மங்களாம்பாள் (இந்தியா), சுந்தரலிங்கம் செட்டியார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரோஜா ஆச்சி (கஸ்தூரி), சக்குபாய் (இந்தியா), இராஜேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்றவர்களான சுவாமிநாதபிள்ளை, சீனுவாசபிள்ளை, சண்முகசுந்தரம்பிள்ளை, நடராஜபிள்ளை, பேராசிரியர் ராஜகோபாலன், கனகாம்பாள் மற்றும் சொக்கலிங்கம்( இளைப்பாறிய நீதிபதி, வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

160, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
0212223264 (98885)

தகவல்:
கந்தப்பச்செட்டியார் வைத்திலிங்கம் செட்டியார்,
கந்தப்பச்செட்டியார் ரமேஷ்,
(வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பணி எப்போதுமே சவால்கள் நிறைந்தவை
# நாம், எமது என்ற வட்டத்துக்குள் சேவையாற்றின் அவற்றை வெல்லலாம்

**கியூடெக் - கரித்தாஸ் நிறுவனங்களின் பணிப்பாளராக பதின்மூன்று ஆண்டு காலமாக தொடர்ச்சியாக சேவை மனப்பாங்குடன் - மக்கள் தொண்டாற்றி தற்போது அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அருட்திரு. சி. ஜெ. ஜெயக்குமார் அடிகளார் தமது வாழ்க்கை மற்றும் சேவை அனுபவங்களை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.**

வடமராட்சி, கரவெட்டி எனது பிறந்த இடம். எனது தந்தையாரின் பெயர் கிறிஸ்ரோபர். அவர் பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றினார். தாயார் சின்னப்பு திரேசா. அவர் ஓர் ஆசிரியை. இவர்கள் இருவரும் தற்போது அமரர்களாகி விட்டார்கள். எனது பெற்றோருக்கு எட்டு பிள்ளைகள். அவர்களில் நான் இரண்டாவது பிள்ளை.

அச்சுவேலி, புனித திரேசா கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் எனது இளமைக் காலக் கல்வியைப் பெற்றேன்.

ரோமானியப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பாடத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றிருக்கின்றேன். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அபிவிருத்திக் கற்கை நெறியில் இணைந்து முதுகலைமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளேன். கண்டி அலம்பிட்டிய குருத்துவக்கல்லூரியில் எனது குருத்துவப் படிப்பினைப் பூர்த்தி செய்தேன்.

மன்னார், பெரியவிளான், பண்டத்தரிப்பு, பாசையூர், இரணைப்பாலை, வட்டக்கச்சி ஆகிய பங்குகளின் தந்தையாகவும் இருந்திருக்கிறேன்.

பதின்மூன்று வருடங்களாகக் கியூடெக் மற்றும் கரித்தாஸ் நிறுவனங்களின் பணிப்பாளராக இருந்து அல்லற்படும் தமிழ்மக்களுக்கு எனது சக்திக்கு உட்பட்ட திருப்திகரமான சேவைகளை வழங்கியுள்ளேன்.

### சமூகப் பணியில் ஈடுபாடு

எனக்கு பல்வேறு வசதிகள், வாய்ப்புக்கள் இருந்தும் மக்களுக்கு சேவை செய்யவேண்டும், அவர்களை துன்பத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற விருப்பின் காரணமாகவே மக்களுடன் மக்களாக இருந்து அவர்களுக்கு என்னால் முடிந்த அளவுக்குச் சேவை ஆற்றி வருகின்றேன்.

எனது தாயாரின் முன் மாதிரியான செயற்பாடுகளின்பால் ஏற்பட்ட ஈர்ப்பின் காரணமாகவே நான் என்னை ஒரு சமூகப் பணியாளனாக நிலை நிறுத்திக் கொண்டேன். ஏழைகள், கஷ்டமுறும் மக்களுக்கு உதவி செய்வதில் எனது தாயார் காட்டிவந்த தீவிர அக்கறையே என்னையும் அந்த வழியில் செல்லத் தூண்டியது.

ஒரு சமயம் மிகுந்த கஷ்ட நிலையிலிருந்த குடும்பம் ஒன்றுக்கு அவசர பணத்தேவை ஏற்பட்டபோது எனது தாயார் சிறிதளவாகவும் தயக்கமின்றி தான் அணிந்திருந்த தங்க நகைகளைக் கழற்றிக் கொடுத்து, அதை அடகு வைத்துப் பணம் பெற்றுக் கொள்ளுமாறு கூறிய அந்த நல்லெண்ண மனப்பாங்கு இப்போதும் எனது மனதில் பசுமை நினைவாக இருக்கின்றது. இது எனது ஏழு வயதில் இடம் பெற்ற சம்பவம். எனது அம்மா இந்த விதமாக கஷ்டமுறும் மக்களுக்கு உதவுவதில் முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார். எனது தாயாரின் அத்தகைய மனப்பாங்குடன் நானும் வாழவேண்டுமென்ற மன உந்துதலை எனக்குள் ஏற்படுத்தி வைத்தது.

இதுவே நான் சமூகப் பணியில் தீவிரமாகச் ஈடுபட வழி வகுத்தது.

### கியூடெக், கரித்தாஸ் தொண்டு நிறுவனங்களுடான பணி

ஆண்டவர் கிருபையால் மக்களுக்குப் பணிபுரிவதற்கான நல்ல சந்தர்ப்பத்தை கியூடெக் நிறுவனம் ஏற்படுத்தித் தந்தது. அதன் மூலம் கரித்தாஸ் நிறுவனத்துடன் எமது உறவுகளைப் பேண முடிந்தது. இந்த இரண்டு தொண்டு நிறுவனங்களதும் பணிப்பாளராக இருந்து பல்வேறு சமூக சேவைகளை முன்னெடுக்க என்னால் முடிந்தது.

கியூடெக், கரித்தாஸ் நிறுவனங்கள் ஆரம்பத்தில் கஷ்டமுறுவோருக்கான நிவாரணப் பணிகளையே மேற்கொண்டன. பின்னர் அந் நிறுவனங்களால் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த வகையில் முக்கியமாக பெண்களுக்கான வலுவூட்டும் செயற்பாடுகள், நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக விதவைப் பெண்களை உள்ளடக்கிய குழுக்களை அமைத்து



அவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் நுண் கருத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றோம். அதே போன்று விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலாளர் சங்கங்களையும் வலுப்படுத்தி வருகின்றோம்.

### சேவை மனப்பான்மைக்குக் கிடைத்த வெற்றி

குருநகரில் அமைக்கப்பட்டு செயற்படும் குழுவின் தலைவியான விதவைப் பெண்ணொருவர் அவரது ஆக்கபூர்வமான - சிறப்பான தலைமைத்துவ செயற்பாடுகள் காரணமாக, கடந்த மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இது எமது சேவைமனப்பாங்குடன் கூடிய செய்ற்பாடுகளுக்குக் கிடைத்த பலாபலன் - வெற்றி என்றே கூறலாம். இதே போன்று நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகவும் கூடப் பெண்கள் தெரிவு செய்யப்பட வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. எமது பெண்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலவேண்டும் என்பதும் எமது இலக்காகும்.

விவசாயத்துறையிலிருந்து அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து கைத்தொழில் துறை, சேவைத்துறைகளாக மாறும் போதே நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்பதனைப் புரிந்து கொண்டிருக்கிறோம்.

அதன் வெளிப்பாடாகவே குருநகரில் மீன்பிடிவலை உருவாக்கத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்தும் இவ்வாறான திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

### 8 வருடங்களுக்கு மேலாக வன்னியில் சேவை

சுமார் எட்டு வருடங்களுக்கு மேலாக வன்னிப் பகுதிக்கு சென்று சமூகப் பணியை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாம் அங்கு சென்று வந்துள்ளோம். 2009 ஆம் ஆண்டு தை மாதம் வரையும் குறிப்பிட்ட காலம் தொடர்ச்சியாக கிளிநொச்சி, தருமபுரம் வைத்தியசாலையில் தங்கியிருந்து சேவை வழங்கினோம். பன்னிரண்டாயிரம் பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கி வந்தோம். ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவர் அல்லது குடும்பத் தலைவியை இழந்த உறுப்பினர்களுக்கு நிவாரணமும் வழங்கி வருகின்றோம். மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் பார்த்து அவர்களது உரிமைகள் தொடர்பாகவும் குரல் எழுப்பியுள்ளோம்.

மீள்குடியமர்ந்த, முகாம்களில் வாழும் மக்களுக்கு பல்வேறு வழிகளில் சேவை புரிந்திருக்கிறோம்.

செட்டிக்குளம் நலன்புரி முகாமிலிருந்த மக்களுக்கும் யாழ்ப்பாணம் முகாமிலிருந்த மக்களுக்கும் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வரையும் தினமும் போசாக்குணவு வழங்கி வந்தோம். வன்னியிலிருந்து மீண்டும் வந்து உயர் கல்வி பெறும் 350 மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி வருகின்றோம். அத்துடன் 150 குடும்பங்கள் குடியிருக்க தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றோம்.

வலைப்பாடு, வேரவில் இரணைமாதா நகர் ஆகிய பகுதிகளில் மீளக் குடியமரும் மக்களுக்கு மொத்தமாக நாலரை (41/2) இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைத்துக்கொடுத்து வாழ்வாதார உதவிகளை வழங்கும் திட்டமும் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆயிரம் குடும்பங்களுக்கு சூரிய மின் கலமும் சைக்கிளும் வழங்கியிருக்கிறோம்.

2004ஆம் ஆண்டின் சுனாமிப் பேரலைத் தாக்கத்தின் பின்னர் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். யாழ்ப்பாணம் முதல் முல்லைத்தீவு வரையும் எம்மால் 1,300 நிரந்தர வீடுகள் அமைத்து, தகுதியுடையோருக்கு அவை கையளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் எட்டரை இலட்சம் ரூபா பெறுமதியில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. அல்லைப் பிட்டியில் 65 வீடுகளும், நல்லூரில் 50 வீடுகளும் யாழ். நகரப்பகுதியில் 60 வீடுகளும் அமைத்து தற்போது அவை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கையளிக்கப் படவுள்ளன.

மேலும் மானிப்பாயில் எமது நிறவனத்தால் அமைக்கப்பட்டுள்ள 'நல்லாயன்' இல்லத்தினூடாக திருமணம் செய்யாது குழந்தைகள் பெற்றடுத்த தாய்மார்களின் குழந்தைகளை பராமரித்து வருகின்றோம்.

அது மட்டுமன்றி 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடும்பத்தலைவர்களை அநியாயமாகப் பறிகொடுத்த 270 விதவைத் தாய்மாரின் குடும்பங்களுக்குமாதாந்தம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டாயிரம் ரூபா வழங்கி வருகின்றோம்.

மக்களுக்கான எனது சேவையில் என்னால் பல அனுபவங்களைப் பெறமுடிந்தது. துன்பப்படும் மக்களே தொடர்ந்தும் துன்பப்படுகின்றார்கள். வசதியாக வாழ்ந்தவர்கள் மேலும் மேலும் வசதிகளைப் பெருக்கி வருகின்றனர். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். இதற்கான மிகக் காத்திரமான பங்களிப்பை எம்மால் வழங்க முடிந்தது. அனைவரதும் பங்களிப்புகள் கிடைக்கும் போது இந்த நிலைமையை நிச்சயமாக மாற்ற முடியும்.

துன்பப்படும் மக்களுக்கு உதவுபவர்களது சமூகப்பணி என்பது போராட்டம் நிறைந்ததொன்றாகும். அது பல சவால்கள் நிறைந்தது. சவால்கள், பேணுவோர், அதற்காகக் குரல் கொடுப்பவர்கள் ஒருபக்கமும் மனிதஉரிமைகளை மீறுவோர் இன்னொரு பக்கமாக இருக்கும் நிலையில் இந்த இரண்டு பிரிவினர்களுக்கும் இடையிலே செயற்படவேண்டிய எமது பணி சவால்கள் நிறைந்தது. எமது பணிகள் குறித்துக் குறைகூறும் ஒரு

## எனது தாயாரின் முன்மாதிரிகளே என்னை சமூகப் பணியாளனாக நிலைநிறுத்தியது

தரப்பினரும் பாராட்டும் ஒரு தரப்பினரும் எம் மத்தியில் உள்ளனர். இருந்த போதிலும் எந்த வழி நியாயமானது என நாம் தீர்மானித்து அதன்படி எமது சேவைகளைப் பாரபட்சமின்றி முன்னொடுத்தோம்.

மக்களிடையேயும் தாராள மனம் படைத்தவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் சேவைகள் பிறருக்குத் தெரிவதில்லை. தாம் தன்னலம் கருதாது, மேற்கொள்ளும் இத்தகைய சேவைகள் குறித்து விளம்பரப்படுத்திக் கொள்வதை அவர்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை.

### இலக்கில் வெற்றி

எம்மால் முன்னெடுக்கப்பட்டுவரும் நலத் திட்டங்கள் குறித்த இலக்கில் வெற்றி கண்டுள்ளன. இதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடமுடியும். பாரபட்சமின்றி சரியான தரப்பினரை இனங்கண்டு அவர்களுக்காக எமது சேவைகளை வழங்கியமையே இதற்கான காரணம் எனக் குறிப்பிட இயலும்.

நான் மதகுருவானதால் ஆண்டவர் மீது அதீத நம்பிக்கை கொண்டிருக்கிறேன். ஆண்டவரே என்னை வழி நடத்துகிறார். எனவே ஆண்டவருக்கு நான் நன்றி கூறவேண்டும். அத்துடன் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌவுந்தரநாயகம் அடிகளாரது வழிப்படுத்தல்கள் எனக்கும் கிட்டியமை நான் செய்த பாக்கியமே.

எமது பணியாளர்கள் இன, மத வேறுபாடின்றி மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வுடனும் நேர்மையுடனும், வெளிப்படையாகவும் திறனுடனும் தமது பணியை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக பாரபட்சம், ஊழல் மற்றும் கையாடல்களுக்கு எமது செயற் பாடுகளில் எள்ளளவும் இடமிருக்கவில்லை. அத்துடன் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் அரச நிறுவன உயரதிகாரிகளும் எமது சேவைகளுக்குப் போதிய ஒத்துழைப்பை வழங்கி உதவியுள்ளனர். யாழ்.அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள் வழங்கிய ஒத்துழைப்புகள் எமக்கு மிகுந்த பக்க பலமாக இருந்தன.

### சமூக வளர்ச்சிக்கு கூட்டுமுயற்சி அவசியம்

தனிமனித முயற்சி என்பதனை விடக் கூட்டு முயற்சி மற்றும் கூட்டு உழைப்பானது சமூகத்தின் வளர்ச்சிக்கு மிக அவசியமானது. இதுவே வெற்றிக்கும் வழிவகுக்கிறது. 'நான்', 'எனது' என்ற குறுகிய வட்டத்துக்குள் மட்டும் நின்றுவிடாது 'நாம்', 'எமது' என்னும் பரந்த வட்டத்துக்குள் நின்று சிந்தித்துச் சேவையாற்ற நாம் சகலரும் முன்வர வேண்டும். அப்போதுதான் சமூக சேவையாளனது பணி மகத்தானதாக, வெற்றிகரமானதாக, திருப்திதருவதொன்றாக அமையும்,

நாம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள், திட்டங்களை அறிந்த பல வெளிநாட்டு நிறுவனங்களும், புலம் பெயர்ந்த மற்றும் உள்ளூர் பொது மக்களும் எமக்குப் பலவழிகளில் பக்கபலமாக இருந்து வருகின்றனர்.

புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் நமது மக்களில், பலர் அவர்கள் மதத்தால் இந்துக்களான போதிலும்கூட தாமாக முன்வந்து எமக்குத் தம்மாலான நிதியுதவி வழங்கி உதவி வருகின்றனர்.

கரித்தாஸ் நிறுவனம் வழங்கிவரும் நிதியுதவி மிகக் காத்திரமானதாகும். உலகில் 195 நாடுகளில் கரித்தாஸ் நிறுவனம் அந்தந்த நாட்டு மொழிகளுக்கு ஏற்ப பெயரைத் தாங்கிச் செயற்பட்டு வருகிறது. அந்த நாடுகளிலுள்ள அத்தகைய நிறுவனங்கள் எம்மீது நம்பிக்கை வைத்து எமக்குக் குறிப்பிடத்தக்க நிதியுதவிகளை வழங்கி வருகின்றன.

### சவால்களுக்கு முகம்கொடுத்தோம்

பல்வேறு சவால்கள், சோதனைகள், வேதனைகள் மத்தியில் எமது சமூகப் பணி இடையீடின்றி இடம்பெற்றது; இடம்பெற்று வருகிறது. 1996 களில் மனித உரிமைகள் தொடர்பாக நாம் குரல் கொடுத்த போது பல அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. மிக ஆபத்தான சூழ்நிலையிலும் எமது பணியைக் கைவிடாது தொடர்ந்து சேவையாற்றிய எம்மைச் சந்தேகக் கண்களுடன் நோக்கிய நிலைமையும் இருந்தது.

இவ்விதம் மக்கள் பணியில் ஈடுபட்ட எமது சக ஊழியர்கள் இருவரை நாம் இழந்திருக்கிறோம். வசந்தசீலன் என்ற அருட்தந்தை தனது வலது காலை இழக்க வேண்டி நேர்ந்தது.

இலங்கை அரச படைகளாலும், விடுதலைப்புலிகளாலும் எமக்குப் பெரியளவில் இடைஞ்சல் ஏற்பட்டதில்லை. விடுதலைப் புலிகளுக்கு எமது நிதி சென்றடைகிறதா என்பது குறித்து நாம் அரச தரப்பால் விழிப்பாக அவதானிக்கப்பட்டோம். எத்தனை தான் இடர்கள் வந்தபோதும் எமது சமூகப் பணி தங்குதடை யின்றித் தொடர்ந்து இடம்பெற்றது. எதிர்காலத்திலும் அவ் விதம் தொடர்ந்தும் தொண்டு நிறுவனங் களின் பணி முன்னெடுக்கப்படும். ******

நேர்காணல்: உமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலைசிறந்த
ஸ்தாபனம்....

# குமரன் சில்க்ஸ்

ஆண்களுக்கான...
★ சேட்டிங்
★ சூட்டிங் ★ கோட்சூட்
★ குருத்தா ★ டெனிம்
★ ரி.சேட்ஸ்
★ சேட்வகைகள்

பெண்களுக்கான...
★ திருமண சாறிவகைகள்
★ சல்வார் வகைகள்
★ திருமணப் பட்டுச்சாறிகள்,
புடைவைகள்
★ சிக்குன்ஸ் சாறிவகைகள்
★ கொட்டன் சாறி வகைகள்
★ பிறின்ட் சாறிவகைகள்
★ சல்வார் வகைகள் ★சோலி கிட்

சிறுவர்களுக்கான..
நவீன டிசைன்களில்
உடுபுடைவைகள்

இவை அனைத்தையும்
எண்ணம்போல் தெரிவுசெய்து
மகிழ்வுடன் அள்ளிச்செல்ல



K.S
குமரன்
சில்க்ஸ்
இல.291,
பிரதான வீதி,
கொழும்பு-11.

T.P:
0114717574
0112441701
Fax:
0112441702


## வடிகால் திருத்தியமைப்பு

குருநகர்,மே 30

குருநகர் அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள படையினரின் காவலரணுக்கு அருகில் சென்.பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள கழிவுநீர் செல்லும் வடிகால் யாழ்.வீதி அதிகாரத்துவ சபையால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பாதையூடான மக்கள் போக்குவரத்து இவ்வடிகால் திருத்தம் காரணமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

(50-51)

## யாகப்பர் ஆலயத்தில் முதல் திருப்பலி

குருநகர்,மே 30

யாழ்.தூய மரியன்னை பேராலயத்தில் கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை புதிய குருக்களில் ஒருவராக யாழ். ஆயரால் திருநிலைப்படுத்தப்பட்ட வண. பிதா அ.ஜெ.அன்ரனி ஜெயரஞ்சன் அடிகளார் எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் தனது முதல் நன்றித் திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

இவர் முல்லைத்தீவு, அளம்பில் புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்த திரு. திருமதி ம.அன்ரனி ஜெயரட்ணம் தம்பதிகளின் மகனாவார்.

(50-51)

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



### அமரர் சிவராசா புஸ்பவதி

அன்னை மடியில்: 07.03.1928
இறைவன் அடியில்: 30.04.2010

கடந்த 30.04.2010 அன்று சிவபதம் எய்திய எமது குடும்பத்தலைவி சிவராசா புஸ்பவதி அவர்களின் சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (29.05.2010) சனிக்கிழமை வில்லூன்றி மடத்தில் நடைபெற்றது. இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"பூபதி"
கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (98861)

தகவல்:
சி.பிரதாபன் (சிமெந்து ஆலை)
சி.பரந்தாமன் (வவுனியா தமிழ் ம.ம.வி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்.



### அமரர் கணேசரத்தினம் பவளமலர்

அன்னையின் மடியில்:
06.12.1946

ஆண்டவன் அடியில்:
30.04.2010

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
நேசத்துடன் வாழ்ந்த அம்மாவே ஆலமரமாய் இருந்து அறிவுரைகள் கூறிய அம்மாவே!
நித்தமும் உங்கள் நினைவால் தவிக்கின்றோம்
அம்மாவே கணப்பொழுதில் கணபதி திருவடி சேர்ந்துவிட்டார்.
பெற்றிடுக சாந்தி.


30.04.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியாளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனநிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (98785)

பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
12. 09.1941

மறைவு:
10.06.2009

### அமரர்
### கந்தையா இரத்தினம்
(இரத்தினம் ஸ்ரோர், ஓட்டுமடம் சந்தி)

திதி: 30.05.2010
அபரபட்ச திருதியை

நெஞ்சோடு கலந்த இனிய உறவே!
பாசப் பறவையே பண்போடு வாழ்ந்த தெய்வமே!
பண்பின் சிகரமாய் பாசத்தின் ஊற்றாய்
எம்மை இந்நிலைக்குயர்த்தி முன்மாதிரியான
வாழ்க்கை வாழ்ந்து வந்தீர்

காலன் செய்த வேலையினால்
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டாலும்
நிலைத்துவிட்ட உம் அன்பால்
ஆண்டொன்று என்ன பலநூறு கழிந்தாலும்
எங்கள் உள்ளத்தில் உங்கள் நினைவுகள்
என்றும் மறையாதிருக்கும்.

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

*234/10, சென்.செபஸ்ரியன் லேன்,*
*ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயற்கை மனிதனுக்குத் தந்த கொடை மரவளம்

# அதனை அழிக்குமுன் சூழல் தாக்கத்தின் மதிப்பீடு தேவை

கடந்த 09.05.2010 ஞாயிற்றுக் கிழமை உதயன் பத்திரிகையில் வெளிவந்த ''தண்ணீர் விட்டா வளர்த்தோம். கண்ணீர் விட்டு அழுவதற்கு'' என்ற எனது கட்டுரையை வாசித்த பின்னர், இலங்கை யிலிருந்தும் வெளிநாடு களிலிருந்தும் ஏராளமான உதயன் வாசகர்கள் எனக்கு குறுஞ் செய்திகளை யும்(SMS), மின் அஞ்சல்களையும் (Emails) அனுப்பிக் கொண்டிருப்பதோடு, வீதி அகலிப்புக்காக பாரிய மரங்களை வெட்டி அகற்றும் விடயம் குறித்து. தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று அறிவுறுத்தி வருகின்றனர். இவற்றுள், வீதியில் இறங்கிப் போராடுவது, நீதிமன்றம் செல்வது போன்ற கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. எனவே எனது கட்டுரையின் நோக்கத்தைத் தெளிவாகக் கூற வேண்டிய கடமை எனக்குண்டு. எனது கட்டுரையின் நோக்கம் அதிகாரிகளின் செயற்பாடுகளில் குற்றம் காண்பதோ அல்லது அபிவிருத்தியை எதிர்ப்பதோ அல்ல. மாறாக மரங்கள் தறிக்கப்படுவதால் எமது எதிர் காலச் சந்ததியினருக்கும், எமது சூழலுக்கும் ஏற்படப் போகும் தாக்கம் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதேயாகும்.

''எமக்கு யாரும் எடுத்துக் கூறவில்லை'', ''எமக்கு இதனால் ஏற்படத்தக்க பாதிப்புகள் தெரிந் திருக்கவில்லை'' என்றெல்லாம் எதிர்காலத்தில் எவரும் காரணங்கள் கூறக்கூடாது என்பதற்காகவே குறிப்பிட்ட அக் கட்டுரையை வரைந்திருந்தேன்.

ஆயினும் துரதிஷ்டவசமாக அந்தக் கட்டுரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மனதில் மாற்றங்கள் எதையும் ஏற்படுத்தவில்லை. மாறாக மர அழிப்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது. 14.05.2010 திகதிய உதயனில் எஸ்.கரன் என்ற உதயன் வாசகர் மரங்கள் தறிக்கப்படுவது குறித்து மேலதிக தகவல்கள் பலவற்றைக் கொடுத்திருந்தார். வீதியால் செல்வது பாலைவனத்தினூடாகச் செல்வது போலுள்ளது எனவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் 12.05.2010 வெளிவந்த உதயனின் 7ஆம் பக்கத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் வீதியை அகல மாக்கிப் புனரமைக்கும் போது அப்பணிக்கு இடையூறாகக் காணப்படும் மரங்கள் மட்டுமே வெட்டப் பட்டு வருகின்றன என்றும் எமது சரித்திரத்தையே அழிக்கலாமா? அந்த ஆலமரத் தைக் காப்பாற்ற வேண்டும். யாராவது உதவுங்கள் என்று கேட்டிருந்தால் ஏராளமானோர் பணம் கொடுக்க முன்வந்து இருப்பார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு அதன் அருகிலிருக்கும் காணியை வாங்கி யிருந்தால் ஆலமரத்தை மையமாக வைத்து வட்டப்பாதை அமைத்து வீதியை அகலமாக்கியிருக்கலாம். தற்போதும் மூத்த விநாயகர் ஆலய முன்றிலிலுள்ள வீதியின் இருபுறமும் இருக்கும் மரங்கள் இரண்டும் தறிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. மனமிருந்தால் இதில் ஒன்றையாவது காப் பாற்றியிருக்கலாம். இவற்றையெல்லாம் பார்க்கும்போது மரங்களைப் பாதுக்காக்க வேண்டும் என்ற எண்ணம் மருந்துக்கேனும் இருந்ததாகத் தெரியவில்லை.

மேலும் அந்த உயர் அதிகாரியின் கருத்துப்படி பிரதேச செயலகத்திலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையிலும் அனுமதி பெறப்பட்டதாக கூறியிருக்கிறார். மரங்களை வெட்ட அனுமதி கொடுக்க இவர்கள் யார் என்பதே எனது கேள்வியாகும்.

எந்த அபிவிருத்தித் திட்டமும் முத லில் சுற்றுச் சூழல் தாக்கத்தின் மதிப்பீடு (Environmetal Impact Assessment, EIA) செய்து சான்றிதழ் பெறப்பட்ட பின்பே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமாகும். எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தை யும் முதலில் வரையும்போது முதலாவதாக ஆரம்ப சுற்றுச் சூழல் தாக்கத்தின் மதிப்பீடு (Initial Environmetal Impact Examination) செய்யப்பட்டு செயற்றிட்ட அறிக்கையுடன் அனுமதி கொடுக்கும் (Approving) அல்லது பணம் கொடுக்கும் (Funding) நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இதன் போது மரங்களைத் தறிப்பதால் ஏதாவது பாரிய தாக்கம் ஏற்படுமா என்பதற்கு புள்ளி விபரச் சான்றுகள் கொடுக்கப்பட வேண்டும். உதாரண மாக 100 இலிருந்து 150 வருடங்களுக்கு மேல் வயதுடைய மரங்களின் எண்ணிக்கை, மரங்களால் எவ்வளவு நிலம் எடுக்கப்படுகிறது, அம்மரங்களால் எத்தனை மக்கள் பயன் பெறுகிறார்கள், அம் மரங்களில் எத்தனை உயிரினங்கள் குடியிருக்கின்றன. எத்தனை குருவிக் கூடுகள் உள்ளன. என்ற விபரங்கள் எல்லாம் கொடுக்கப்பட வேண்டும். பொது மக்களிடமிருந்து ஆலோசனைகளும் பெறப்பட வேண்டும். இவை அனைத்தும் துறைசார் நிபுணர் ஒருவரின் (Consultant) மேல் நீளமுடைய வீதி அபிவிருத்திக்கு EIA பெறப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறெல்லாம் சட்டங்கள் இருக்கும்போது அரசாங்கமே அதை மீறிச் செயற்படலாமா? தமிழ்ப் பிரதேசங்களில் போரினாலும், இயற்கை அழிவினாலும் தப்பிப் பிழைத்தவற்றை அழித்தாலும் கவலை இல்லை என்ற திட்டங்களுக்கு இங்குள்ள தமிழ் அதிகாரிகளும் துணை போகலாமா?

சரி, இந்த மரங்களை வெட்டுவதுடன் மட்டும் பிரச்சினை முடிந்து விடுமா என்றால் அதுவும் இல்லை. வீதி அகலிப்பு முடிந்த பின்னர் மின்சாரக் கம்பிகள் மீளமைக்கப்படும். இலங்கை மின்சார சபையினர் மீண்டும் பாதையின் விளிம்பில் இருந்து 15 அடி தூரம் வரையுள்ள மரங்கள் அனைத்தையுமே வெட்டித் தள்ளப் போகிறார்கள். அக்கறை உள்ள அதிகாரிகள் இந்த இழப்பையாவது தடுக்கத் திட்டம் ஏதாவது போட்டார்களா? தற்போது புனரமைக்கப் படும் வீதி தார் ஊற்றிச் செப்பனிட முன்னராவது வீதியின் நடுவில் நிலத்தின்கீழ் குழாய்கள் புதைத்து மின்சாரக்கம்பிகள் (தொலை பேசிக் கம்பிகளும்) புதைக்கப்பட்டால் இந்த 15 அடி அகலத்தினுள் இருக்கும் மரங்களாவது தப்பிப் பிழைக்கும் அல்லவா? ஆனால் இதற்கான திட்டம் ஏன் போடப்படவில்லை.

வெட்டும் மரங்களுக்கு ஈடுசெய்யும் வகையில் மரநடுகைத் திட்டங்கள் கூட வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. முன்னர் வீதி ஓரத்திற்கும் வீடு களின் சுவர்களுக்கும் இடையே இடைவெளிகள் இருந் தன. ஆனால் தற்போதைய அகலிப்பினால் வீட்டுச் சுவர்கள் வீதி எல்லையிலேயே கட்டப்படுகின்றன. இதன் மூலம் மர மீள் நடுகைக்கு இடம் இல்லாமல் போகிறது. இவற்றைவிட கடைகளின் முன்னால் வாக னங்களை நிறுத்தவோ அல்லது பயணிகள் பேருந்துக் குக் காத்து இருக்கும் தங்குமடங்களோ அமைப்பதற்குக் கூட இடங்கள் விடப்படவில்லை. ஏன் இனிமேல் வீதி ஓர மாக யாருமே நடந்து செல்லக்கூட முடியாது. ஏனெனில் வீதிக்கு ஓரங்களே இருக்காது. அவ்வளவு தெளிவான நோக்கோடு ''அபிவிருத்தி'' முன்னெடுக்கப்படுகிறது.

மேலும் வாகனங்களின் இயந்திரங்களிலிருந்து காபன் ஒரொக்சைட்டு (CO) எனும் இராசாயனப் பொருள் வெளியிடப்படுகிறது. இது பொதுவாக வீதி ஓரங்களி

## மாற்றுவழி கண்டறிந்து இலக்கை அடைய முடியாதா?

அதற்கு பிரதேச செயலகம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இது ஒருவகையில் கண்ணாமூச்சி காட்டும் கதையாகவே உள் ளது. இதில் வீதியை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிக்கு இடையூறாக இருக்கும் மரங்கள் மட்டுமே வெட்டப்படுவதாகக் கூறாமல், இலகுவாக வீதி ஓரங் களில் நிற்கும் மரங்கள் அனைத்துமே வெட்டப்படு வதாக வெளிப்படையாகக் கூறியிருக்கலாம். ''எதை யென்றாலும் அதை வெட்டிக் கொட்டி, இடித்து அழித்து வீதியை அகலமாக்க வேண்டும்'' என்ற ஒரே நோக்கத்தை மாத்திரம் மனதில் வைத்திருப்பவர் களுக்கு மரங்கள் நிற்பது கண்ணுக்குத் தெரியாது. வீதியை அகலமாக்கவும் வேண்டும். மரங்களைப் பாதுகாக்கவும் வேண்டும் என்பதே எனது நிலைப் பாடாகும். எவ்வாறு மரங்களைப் பாதுகாக்கலாம் என்பதற்கு ஏராளமான வழிமுறைகள் உள்ளன. தற்போது புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியிருக்கும் பிர தேசத்தினுள் வல்லை வெளியும் அடக்கும். வல்லை வெளியில் மரங்களைக் காப்பாற்ற வழியா இல்லை! எமது மண்ணுக்கே உரிய பாரம்பரிய மரம் பூவரசு ஆகும். வல்லை வெளியில் ஒரே பக்கத்தில் 10 அடி சுற்றளவுள்ள 5 பாரிய பூவரசு மரங்கள் இருந்தன. அவற்றைக் காப்பாற்றும் எண்ணம் இருந்திருந்தால் இலகுவாக மறுபக்கத்தால் அகலிப்புச் செய்திருக் கலாம். மேலும் பூவரசு இலகுவாகப் புரட்டி வைக்கக் கூடிய மரம்; எனவே அவைகளை மீள் நடுகை செய்திருக்கலாம்.

புத்தூர், சோமாஸ்கந்தா கல்லூரிக்கு முன்னால் நின்ற ''மழவராயர்'' காலத்து அரசமரம் ஒரு முச்சந்தி யில் நின்ற மரமாகும். இதைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணியிருந்தால் அந்த மரத்தை மையமாக வைத்து வட்டப் பாதை யொன்றை அமைத்திருக் கலாம். இதற்கு அவ்விடத்திலிருந்த பேருந்து தரிப்பு மண்டபத்தை அகற்றியிருந்தாலே போதுமானதாக இருந்திருக்கும். வல்லை முனியப்பர் கோயிலடியில் நிற்கும் மரமும் புறாப்பொறுக்கி ஆலமரமும் சரித் திரப் பிரசித்தி பெற்ற மரங்களாகும். நல்லூர் இராச தானியை ஆண்ட சங்கிலிக் குமரன் என்ற அரசன் 1621 ஆம் ஆண்டு தப்பி ஓடி வந்து தும்பளை மேற்கில் ஒளித் திருந்து பின்னர் ஆழ்வான் என்ற படகோட்டியின் உதவி யுடன் கற்கோவளத்தில் இருந்து இந்தியாவிற்கு சென்றதாகச் சரித்திரம் கூறுகிறது. தப்பி வரும் வழியில் இம்மரங்கள் அருகே முதலில் ஒளித்திருந்ததாகவும் பலர் கூறக்கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே அவ் வாறான சரித்திரப் பிரசித்தி பெற்ற மரங்களை அழித்து உதவியுடன் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆரம்ப திட்ட வரைபு கிடைத்தவுடன் பணம் அல் லது அனுமதி கொடுக்கும் நிறுவனத்தினர் சுற்றுச் சூழ லில் ஏற்படும் தாக்கம் பற்றி வேறாக தனிப்பட்ட ஆய்வு செய்ய வேண்டும். இதற்கு துறைசார் வல்லுநர் கள், கல்வியியலாளர்கள், சுற்றுச் சூழலியலாளர்கள், திட்டத்தால் பயன்பெறும் மற்றும் பாதிப்புறும் மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட குழுவினரை நியமிப்பார்கள். இக்குழுவினர் ஏற்கனவே கொடுக்கப்பட்ட மரங்கள் பற்றிய புள்ளி விபரங்களை ஆய்வு செய்வதோடு மரங்களை வெட்டாமல் விடுவதற்கு மாற்று வழி உண்டா என்றும் ஆய்வு செய்வார்கள். மரங்களை வெட்டுவதால் ஏற்படும் நன்மை தீமைகளை எடை போடுவார்கள். வெட் டப்படும் மரங்களுக்குப் பதிலாக எங்கெங்கு எவ்வாறு எத்தனை மரங்கள் மீண்டும் நடப்பட வேண்டும் என்றும் ஆய்வு செய்வார்கள். இவற்றைவிட முக்கியமாக மாற்று வழிகள் இருந்தபோதும் என்னென்ன காரணங் களால் அவை ஏற்றுக்கொள்ளப்பட முடியவில்லை என்பதையும் ஆய்வு செய்து EIA அறிக்கையில் கொடுப் பார்கள். இவ்வளவும் செய்து முடிக்கப்பட்ட பின்னரே மரம் வெட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண் டும். இவ்வாறு அனைத்துக் காரியங்களும் சட்டப்படி செய்து முடிக்கப்பட்டதா? இவ்வாறு ஆராயப்படும் போது மூன்று விடயங்களை முக்கியமாகக் கவனித்து இருக்க வேண்டும்.

அவையாவன:

✱சூழல் தாக்கம், சமூகத்தாக்கம், பொருளாதாரத் தாக்கம். இங்கு சூழல் தாக்கம் $y = -mx+c$ எனும் நேர்கோடு வழியே குறைந்து செல்லும்.

✱பொருளாதாரத் தாக்கம். $y = mx+c$ எனும் வடிவில் அதிகரித்துச் செல்ல வேண்டும்.

✱ சமூகத் தாக்கம் கூடிக்குறையக் கூடியது.

இவற்றிலிருந்து அதிக பயன் தரக்கூடிய சமநிலைப் புள்ளி பெறப்பட்டிருக்க வேண்டும். பின்னர் இந்த ஆய்வை விருத்தி செய்து இனிவரப்போகும் 50,100, 150 வருடங்களின் பின் எவ்வாறான தாக்கம் இருக்கும் என்பதைத் தரக்கூடிய சமன்பாடும் பெறப்பட்டிருக்க வேண்டும். எனவே இவற்றின் ஒட்டு மொத்த மதிப்பீடு யாருக்காவது தெரியுமா? இவை ஆராயப்பட்டனவா? மக்களுக்குக் கணக்குக் காட்ட முடியுமா?

தேசிய சுற்றுச் சூழல் சட்டம் இல.47 (National Environmental Act) 1980 ஆம் ஆண்டு நாடாளு மன்றத்தால் அங்கீகரிப்பட்டுள்ளது. இதில் 5 பிரிவுகள் உள்ளன. நான்காம் பிரிவில் எந்தெந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு EIA பெறப்பட வேண்டியது அவசியம் என்றும் பட்டியலிடப்பட்டுள்ளது. இதில் 10km இற்கு லுள்ள மரங்களால் உறிஞ்சப்படுவதால் அவ் இரசாய னப் பதார்த்தத்தின் தாக்கம் அவ்வளவாகத் தெரிவ தில்லை. எனவே மரங்கள் வெட்டி அழிக்கப்பட்ட சூழலில் (CO) இன் அளவு கூடிச் செல்ல அது கண் எரிச்சல், தோல் வியாதிகள், மயக்கம் என்பவற்றைத் தோற்றுவிக்கும். அத்துடன் வாகனங்களால் ஏற்படும் புழுதியும் வளிமண்டலத்தில் பரவி சுவாசம் சம்பந்த மான வருத்தங்களைத் தோற்றுவிக்கும். இதனால் குறிப் பாக அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு நடந்து செல்லும் சிறுவர்களே அதிக பாதிப்புக்கு உள்ளாகப் போகிறார்கள். இது மறைமுகமாக எமது எதிர்காலச் சந்ததியினரை வலுவிழக்கச் செய்துவிடும்.

சூழல் தாக்கம் பற்றி மதிப்பீடு செய்யப்பட வேண் டும் என்ற எண்ணம் ''பூமி மாநாடு'' (Earth Summit) என்றழைப்பட்ட சுற்றுச் சூழலுக்கும் அபிவிருத்திக்கு மான ஐக்கிய நாடுகளின் மாநாடு 1992 ஆம் ஆண்டு ரியோ (Rio) நகரில் நடந்த போதே முதலில் இவை இனங்காணப்பட்டன. அதற்கு முன்னோடியாக, 1991 ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட ஆசிய மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பேசும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்த மகாநாட்டில் கூட இலங்கை யின் உள்நாட்டுப் போரால் மரங்களும், வன விலங்குகளும் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளா கின்றன என்பது பற்றியே பேசினேன். இன்றும் அதற் காகவே குரல் கொடுக்கின்றேன். எமது எதிர்காலச் சந்ததியினருக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்ற சமூகப் பொறுப்புடன் சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத் துவதே எனது நோக்கம். எனது கட்டுரையில் உள்ள விட யங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்பதும் எனக்கு நன்கு தெரியும். ஐக்கிய நாடுகள் சாசனத்தில் அபிவிருத்தித் திட்டங்களில் வெளிப்படைத் தன்மை இருப்பதோடு மக்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி அறிய அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் கூறப்பட் டுள்ளது. அந்த உரிமையின் அடிப்படையிலே இக் கட்டு ரையை வரைந்துள்ளேன். அதிகாரிகளில் குறை காணும் நோக்கம் துளியளவும் எனக் கில்லை. தெரிந்தவற்றைத் தெரிவித்து விட்டேன். மக்களே, தீர்மானம் உங்கள் கையில்! உங்கள் சந்ததியினருக்கு எதனைச் சேமித்துக் கொடுக்கப் போகிறீர்கள்? - சிந்தியுங்கள். ✱✱✱




கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதிகவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே இருக்கிறா

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பிரச்சினை ஒரு புறம் என்றால், வன்னி மண்ணை அச்சுறுத்தி வரும் மற்றொரு பெரும் பிரச்சினை காணாமல் போனவர்கள்.

கடும் சண்டைக்கு மத்தியில் தப்பி வெளியேறிய மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பில்லாமல் சிதறி ஓடியதில் உறவுகள் திக்குக்கு ஒன்றாகப் பிரிந்தன. முகாம்களில் அவர்களை ஒன்றிணைக்க



நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எல்லா முயற்சிகளுக்கும் பின்னர், இப்போது மக்கள் தமது கிராமங்களுக்குத் திரும்பிஉள்ள நிலையில் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது 10 முதல் 15 பேர் வரையிலானோரைக் காணோம்.

இறுதி யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் காணாமல் போனவர்கள் குறித்த மொத்த விவரம் எந்த அரசு அலுவலகத்திலும் இல்லை என்பது அதைவிடச் சோகம். காணாமல் போனோரின் விவரங்களைச் சேகரிப்பதற்கும் இதுவரை உத்தியோகபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

''ஐஞ்சு பேரைப் பறிகொடுத்துப் போட்டு நிக்கிறன். ஒருத்தரும் என்ர குஞ்சுகள கண்டுபிடிச்சுத் தரமாட்டம் என்டினம்'' என்கிற பொன்னம்மாவின் (வயது - 58) கதை உயிரை உருக்குகிறது.

அவரது மகள் கிருஷ்ணகுமாரி (வயது -31), மருமகன் நடேசு முரளிதரன் (வயது - 38), பேரப்பிள்ளைகள் சாருஜன் (வயது -5), அபிதா (வயது -4) ஆகியோர் வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போய்விட்டனர் என்கிறார் பொன்னம்மா.

அதற்கு முன்னதாக ரவிச்சந்திரன் என்கிற அவரது மற்றொரு மகனும் காணாமல் போயுள்ளார். வவுனியா சென்றபோது 2006ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 25ஆம் திகதி இராணுவத்தின ரால் அவர் கைது செய்யப்பட்டார் என்றும் அதன் பின்னர் அவர் பற்றிய தகவல் எதுவும் இல்லை என்றும் சொல்கிறார் அந்த வயதான தாய்.

''வட்டுவாகல்ல நாங்கள் வரேக்க, மருமகன் போராளி எண்டதால குடும்பத்தோட தனியாப்போய் சரணடைஞ்சவை. பிரான்ஸிஸ் பாதரோடதான் போனவை. மகளுக்கு காயம்பட்டு தலையில 'பீஸ்' இருக்குது. இப்ப என்ர பிள்ளையள் எங்க இருக்குதுகள் எண்டே தெரியேல்லை.'' கண்கள் குளமாக அந்தத் தாயின் குரல் தளதளக்கிறது.

போராளியாக இருந்த மருமகனையும் அவரது மனைவி என்ற நிலையில் மகளையும் பிடித்து வைத்திருந்தால்கூட தனது பேரக் குழந்தைகளை ஏன் பிடிச்சு வைத்திருக்கிறார்கள் என்பது அந்தப் பேத்தியாருக்குப் புரியவில்லை. வேறு 'மனிதர்கள்' எவருக்காவது விளங்குமா என்பதும் தெரியவில்லை.

''என்ர குஞ்சுகளைக் கண்டே மாசக் கணக்காப் போட்டுது. அதுகளையாவது என்ட கண்ணில காட்டினாங்கள் எண்டாப் பறவாயில்லை. அவரும் வருத்தக்காரர்; ஓடியாடித் தேடவும் முடியாது. நான் எந்தக் கடவுளிட்டப் போய் என்ட பிள்ளையக் கேப்பன்?''

பிள்ளைகளைத் தேடித் தரச்சொல்லி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் பொன்னம்மா பதிந்து வைத்திருந்தாலும் இதுவரைக்கும் அவருக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

4

''எலக்ஷன் வரேக்க, இந்தா உடன எல்லாம் செய்யிறம் எண்டு சொல்லிக்கொண்டு கனபேர் வந்து போச்சினம். ஆனா இப்ப ஒருத்தரையும் காணேல்ல. என்ர பிள்ளையளையும் காணேல்ல'' பொன்னம்மாவின் துயரத்தை எப்படி




ஆற்றுவது என்று அங்கிருந்த யாருக்கும் தெரியவில்லை.

ஒவ்வொரு கிராமங்களிலும் இதுபோன்ற சோகக் கதைகளுக்குப் பஞ்சமே இல்லை. தடுப்பில் உள்ளவர்களை மீட்டுத் தாருங்கள்,



காணாமல் போனவர்களை கண்டுபிடித்துத் தாருங்கள் என்பதே எல்லா மக்களதும் முதல் கோரிக்கையாக இருக்கிறது.

முருகேசு தனபாலசிங்கம் (வயது - 59) ஒரு நோயாளி. தொய்வு நோய் அவரை வாட்டுகிறது. ஆனாலும் காணாமல்போன தனது இரண்டு பிள்ளைகளையும் தேடி அவர் அலையாத இடம் இல்லை.

கந்தவேள் (வயது - 21), அனுஷன் (வயது -19) இருவரும் இப்போது அவருடன் இல்லை. வட்டுவாகல் வரைக்கும் அவருடன் வந்த அவர்களைப் பின்னர் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதன் பின்னர் இன்று வரைக்கும் தனது பி[illegible] தொடர்பில்லை என்று கலங்குகிறார் அவர். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சிங்களத்தில் கடிதங்களை எழுதி வைத்துக் கொண்டு, தபாலில் அனுப்புவதிலும் பார்க்க நேரில் அவற்றை யாராவது அவர்களிடம் சேர்ப்பித்தால் நல்லது என்று அலைந்து கொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு குடும்பத்திடமும் ஒவ்வொரு கிராமங்களிலும் இது போன்ற மனதை உருக்கும் சம்பவங்கள் ஏராளம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தச் சோகங்களையும் வேதனைகளையும் மக்களிடம் இருந்து நேரில் கண்டும் கேட்டும் அறிந்து கொண்டார்கள்.

இந்த மக்களுக்கு நாங்கள் விரைவில் ஏதாவது செய்யவேண்டும் என்று சம்பந்தன் ஐயா மீண்டும் மீண்டும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்திக் கொண்டே இருந்தார். மக்களின் அனுபவங்களால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடைந்த மனக்கவலை அவர்களது முகங்களில் தெரிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் 23ஆம் திகதிப் பயணம் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தேரங்கண்டல் பிரதேசத்திற்குச் சென்றதுடன் ஆரம்பமானது. இவர்கள் சென்றபோது அங்கு மக்கள் 50 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலைச் சுற்றாடலைத் துப்புரவு செய்து கொண்டிருந்தார்கள்.

இந்தக் கிராமத்தில் 50 நாள் வேலைத் திட்டத்திற்கான பணம் 15 நாள்கள் முடிந்ததும் வழங்கப்படுகிறது. ஆனால் வேறு சில கிராமங்களில் 25 நாள்களுக்கு மேலாக வேலை செய்த பின்னரும் மக்களுக்குப் பணம் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அதிகாரிகளின் இந்த ஒழுங்கற்ற நடவடிக்கைகளுக்கான காரணம் என்னவெனத் தெரியவில்லை.

சந்திப்பின்போது பெண்களே அதிகம் இருந்தனர். ஏனெனில் கிராமத்தின் ஆண்களில் பெரும்பாலானவர்கள் தடுப்புக் காவலில் இருக்கிறார்கள். ''90 வீதமான கணவர்கள் தடுப்பில்தான் இருக்கிறார்கள்'' என்றார் பெண் ஒருவர்.

மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தாலும் யானைகளாலும் பன்றிகளாலும் அதிக தொல்லை ஏற்படுகிறது. ''ரண்டு வருசமா ஆள் நடமாட்டம் இல்லாததால மிருகங்களின்ட நடமாட்டம் இந்தப் பகுதியில கூடிப் போச்சு. காணியளுக்கு வேலியும் இல்லாததால விதைச்ச பயிரையும் கிளறித்திண்டு போட்டுப் போகுதுகள்'' என்றார் தெய்வேந்திரம் (வயது - 36).

[illegible] நகர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயிலங்குளம் கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன் மக்களுடன் பேசினர்.

ஐயங்கன்குளம் கிராமத்தில் மக்கள்



வேறொரு பிரச்சினையை முன்வைத்தார்கள். அங்கே இருக்கும் பல காணிகளில் 25 வருடமாக வசித்து, விவசாயம் செய்து வருபவர்களுக்கு அந்தக் காணிகள் உரித்துடையன அல்ல.

காணிகளின் பெர்மிட்டுக்கள் வேறு மாவட்டங்களில் அல்லது வேறு நாடுகளில் உள்ளவர்களின் பெயர்களில் உள்ளன. இதுவரை காலமும் அதனால் பிரச்சினைகள் ஏற்படவில்லை. ஆனால், இனிவரும் காலத்தில் அந்தக் காணிகளின் பெர்மிட்டுக்கள் தங்கள் பெயர்களுக்கு மாற்றப்படாவிட்டால் பிரச்சினைகள் எழும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

அதிகாரிகள் நிவாரணப் பொருள்களை வழங்கும்போது பாரபட்சம் பார்ப்பதாகவும் மக்கள்

**- செழியன் -**

குறைப்பட்டார்கள். சிலருக்கு ஒரு சைக்கிள்கூடக் கொடுக்கப்படாத நிலையில், சில வீடுகளுக்கு பல சைக்கிள்கள் கொடுக்கப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அவ்வாறு பல சைக்கிள்கள் பெற்றவர்கள் அவற்றை விற்க, எந்த வாகனமும் அற்றவர்கள் அத்தியாவசியத் தேவைக்குக்கூட சைக்கிள் இல்லாத நிலை காணப்படுகின்றது. ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது அதிகாரிகளுக்கே வெளிச்சம்.

அங்கிருந்து புறப்பட்ட நாடாளுமன்றக் குழுவினர் சிவபுரம், வவுனிக்குளம் சிவன் கோயிலுக்குச் சென்று, வரலாற்றுப் புகழ் மிக்க அந்த ஆலயத்தைத்தரிசித்து விட்டு பாண்டியன்குளம் சென்றனர்.

ஏனைய கிராமங்களைப் போலவே அங்கும் மக்கள் தமது குறைகளை அடுக்கடுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கொட்டினர். இவற்றுக்கெல்லாம் உங்களால் என்ன செய்துவிட முடியும் என்றும் கேள்வி எழுப்பினர்.

இன்னும் ஒரு வருட காலத்திற்குள் வன்னியின் கிராமங்களில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயமாகப் பாடுபடும் என்றும் மக்களுக்கு உதவிகளைப் பெற்றுத் தருவதற்காக வெளிநாடுகளுடனும் அனைத்துலகத் தொண்டு அமைப்புக்களுடனும் அரசுடனும் கூட்டமைப்பு பேசி நடவடிக்கை எடுக்கும் எனவும் சம்பந்தன் ஐயா மக்களுக்கு உறுதி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1960துகளில் ஈழத்துச் சிறுகதைத்துறையில் காலடி வைத்த க.செபரத்தினம் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராகவும் கல்லூரி அதிபராகவும் தொழில்புரிந்தவர்.

ஆரம்பத்தில் இலக்கியக் கட்டுரைகளை எழுதிவந்த செபரத்தினம் நாடகம், சிறுகதை ஆகிய துறைகளிலும் ஈடுபாடு காட்டி வந்தார்.

இலங்கை கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு 1967 இல் நடத்திய ஓரங்க நாடக எழுத்துப் போட்டியில் பரிசில் பெற்றவர்.

'வாழையடி வாழை' (1962) 'விபுலானந்த அடிகளாரின் வாழ்வும் வளமும்' (1994) என்பவை இவர் எழுதி வெளியிட்ட நூல்களாகும். இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் 'தமிழ் ஒளி' என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

இவரது சிறுகதைகள் ஈழத்துப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், சுதந்திரன் ஆகியவற்றிலும் கனேடியப் பத்திரிகைகளான உதயன், செந்தாமரை என்பவற்றிலும் பிரசுரமாகியுள்ளன.

தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் இவரது 'நயனங்கள் பேசுகின்றன' முதலாவது சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'சங்கமம்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.★★★

சிறுகதை

# சங்கமம்

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 151

அதிர்ச்சியும் ஆச்சரியமும் முகங்களை விழுங்கி நிற்க, அதன் பிரதிபலிப்பை அவர்களின் முகங்கள் கோடு கிழித்துக்காட்டின. பார்த்தது பார்த்தபடி பிரமித்து நின்றார்கள். சத்தியமாக அஃதோர் எதிர்பாராத சந்திப்புத்தான். கனடாவில், அகதிகள் கோரிக்கைகளை விசாரிக்கும் நீதிமன்றத்திலே இப்படிச் சந்தித்துக் கொள்வோமென பஞ்சாட்சரக் குருக்களோ அல்லது இயேசுதாசன் போதகரோ கனவிற் தானும் நினைத்திருப் பார்களா?

பிரமிப்பு நீங்கித் தங்களைச் சுதாகரித்துக் கொண்டதும், சத்தியத்தின் நிதர்சனத்தை உணர்ந்தவர்களாக ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டனர். அந்த அணைப்பிலே போலித்தனம் இருக்கவில்லை. உதடுகள் உணர்ச்சியால் மௌனித்து நிற்க, கண்ணீர் திரைபோட்டு பார்வையை மறைத்துவிட்டது. திறந்திருந்த மனத்திரைகளில் இறந்த காலம் படம் விரித்து நின்றது.

நெருங்கிய உறவினர்களான அவர்கள் இருவருக்கும் சொந்த இடம் புங்குடுதீவு. போதகரின் இளமைப்பெயர் சிவனடியான். இருவரும் ஊர்ப்பள்ளியில் ஒன்றாகவே படித்தார்கள். எட்டாம் வகுப்பில் இருக்கும் போது, சிவனடியானின் பெற்றோர் ஒருவர் பின் ஒருவராக இறந்து போனதால், அவர் அனாதையாகி விட்டார். உறவினர் ஒருவரால் யாழ்ப்பாணத்தில் இருந்த கிறிஸ்தவ அனாதை விடுதியிற் சேர்க்கப்பட்ட சிவனடியான், உயர் கல்விகற்று, கிறிஸ்தவராகி இயேசுதாசன் என்ற பெயரோடு கிறிஸ்தவமதப் போதகராகிவிட, ஊர்ப்பள்ளியிலே பத்தாம் வகுப்புவரை படித்த பஞ்சாட்சரம், முறையான சமய தீட்சைகள் பெற்று, உரிய காலத்திலே சைவ மதக்குருக்களாகிவிட்டார்.

வன்னிப் பகுதியின் வளமிக்க கிராமங்களுள் பூவரசங்குளமும் ஒன்று. அதன் தென்கோடியில், புகழ் பரப்பிநிற்கும் சித்தி விநாயகர் ஆலயத்தின், பூசகராகப் பொறுப்பேற்று அங்குவந்து சேர்ந்த பஞ்சாட்சரக்குருக்கள், வெகுவிரைவில் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிட்டார். குருக்களுக்கு ஒரேயொரு மகள், பெயர் பாரதி.

குருக்கள் பூவரசங்குளத்துக்கு வந்து ஒருசில வருடங்களுள், கிராமத்தின் வட எல்லையில் புதிதாகக் கட்டப்பட்ட கிறிஸ்தவ ஆலயத்தின் குருவாக, இயேசுதாசன் போதகர் அனுப்பப்பட்டார். அவர் அங்கு வந்ததும் செய்த முதல் வேலை, தமது உறவினரான பஞ்சாட்சரக் குருக்களைப் போய் பார்த்ததுதான். இதனைத் தொடர்ந்து அடிக்கடி அவர்கள் சந்தித்துக் கொண்டனர். எதிர்பார்த்திருக்காத நேரத்தில், குருக்களின் மனைவி மாரடைப்பால் இறந்து போனபோது, தேவையான சகல உதவிகளையும் போதகரே முன்னின்று செய்தார். குருக்களின் மகள் பாரதியை, குருக்கள் விரும்பியபடி, கொழும்பிலிருந்த அவரின் சகோதரியின் வீட்டியிருந்து படிப்பதற்கும், போதகரே உதவி செய்தார். இவற்றுக்கெல்லாம் மதபேதம் தடையாயிருக்கவில்லை. மனித நேயம், உண்மையில் மகத்தானதுதான்.

பூவரசங்குளத்துக்கு வரும்போது போதகர் தனிக்கட்டையாகவே வந்தார். மனைவி இளம் வயதிலேயே இறந்து போனார். ஒரேயோரு மகளாகிய கிறிஸ்ரி,கொழும்பிலே படித்துக்கொண்டிருந்தாள். சமயப் பணியிலீடுபடப் போதகருக்கு வசதியும் நேரமுமிருந்தன. கிராம மக்களுடைய சுகதுக்கங்களிற் கலந்து கொண்டும், அவர்களின் தேவைகளிற் தாராளமாக உதவியும், அவர் மேற்கொண்ட பணிகள் காலப்போக்கிலே பலன்தர ஆரம்பித்தன. ஏற்கனவே அங்கிருந்த கிறிஸ்தவர்களுடன், புதியவர்களும் கிறிஸ்தவ சமயத்தில் இணையத் தொடங்கினர். இதனால் உற்சாகமடைந்த போதகர், தமது ஆயரின் அங்கீகாரத்தோடு, வெளி இடங்களிலிருந்து சிறந்த மதப் பிரசாரகர்களை அழைப்பித்து, கூட்டங்களை நடத்தத் தொடங்கினார். சைவ மதத்தைக் கீழ்த்தரமாகத் தாக்கியும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. கிறிஸ்தவ சபை துரித வளர்ச்சியடைந்தது.

தமது உறவினரான போதகர் மதமாற்றத்துக்குக் கையாண்ட வழி முறைகளையும், அதன் விளைவையும் அவதானித்த குருக்கள், ஆபத்தை உணர்ந்து கொண்டவராய், அதற்கொரு முடிவு கட்டப்பட வேண்டுமென்னும் முடிவுக்கு வந்துவிட்டார். மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்துவது தமது கடமை எனக் கொண்டு அதற்கான முயற்சியில் இறங்கினார். தலைசிறந்த ஓதுவார்களை அழைப்பித்து, அவர்கள் மூலம் தமது மக்கள் தேவார திருவாசகங்களை ஓதி உணரச் செய்தார்; சைவப்பெரியார்கள் மூலம், சைவ மதத்தின் சிறப்பை மக்கள் உணர்ந்துகொள்ளச் செய்தார். கிறிஸ்தவ சமயத்தின் குறைகளையும், மதமாற்றத்துக்காக கிறிஸ்தவர்கள் கையாளும் இழிவான முறைகளையும் மக்கள் அறிந்திட வழி செய்தார். குருக்கள் கையாண்ட எதிர் நடவடிக்கைகளால் போதகரின் செயற்பாடுகள் பெருமளவு முடங்கிப் போயின.

சமயப் போட்டா போட்டிகள் தீவிரமடைந்ததால், பூவரசங்குளத்தின் அமைதி பெரிதும் பாதிக்கப்பட்டது. சமாதானமாக வாழ்ந்த மக்களிடையே சமய வெறியானது பகை உணர்வைத் தீவிரமாக வளர்த்துவிட்டது. சைவர்களும், கிறிஸ்தவர்களும் தங்கள் சொந்த பந்தங்களைத் துண்டித்துக்கொண்டனர். சுகதுக்கங்களிற் பங்கெடுக்க முடியாதபடி, மதபேதம் மக்களைத் தடுத்து நின்றது.

சைவ சமயப்பாதுகாவலரெனத் தம்மை வரிந்துகொண்ட குருக்களும், கிறிஸ்தவ சமயப் பிரசாரகரெனத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட போதகரும், தங்கள் சொந்த பந்தங்களைத் துறந்துவிட்னர். இப்போ அவர்கள் எதிரிகள். ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுவதையே அவர்கள் தவிர்த்துக் கொண்டனர். மதபேதம் மனித நேயத்தை விழுங்கிவிட்டது.

அன்றொருநாள், பூவரசங்குளத்துக்கூடாகச் சென்ற இராணுவ வாகனமொன்று, நிலக்கண்ணி வெடியிலகப்பட்டு, அதிலிருந்த இராணுவத்தினர் அனைவரும் பலியாகிவிட்டனர். செய்தியறிந்து அங்கு விரைந்து வந்த இராணுவத்தினரால், கிராமம் அல்லோல கல்லோலப்பட்டது. எங்கும் வெடிச்சத்தம். மக்கள் நாலா திசைகளிலும் பாதுகாப்புத் தேடி ஓடினர். சைவ மக்களுடன் கிறிஸ்தவர்களும் அருகிலிருந்த சித்தி விநாயகர் ஆலயத்தில் அடைக்கலம் தேடினர்.

(16 ஆம் பக்கம் பார்க்க....)

# கானல் வரியும் கோவலன்தன் காதற் குழப்பமும்



மதுரையை அண்மித்த ஆயர்பாடியில் மாதரி என்பாள் மனையில் கண்ணகியை அடைக்கலம் வைத்திருந்த நாள்களில், கோவலன் கண்ணகி தன் கைப்படச் சமைத்த உணவுண்டு களித்திருக்கிறான். அப்போது அவன்,

"நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னொடு போந்து ஈங்கு
என்துயர்களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீள் நில விளக்கே!
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி...."

எனக் கண்ணகியைப் புகழ்ந்து பாராட்டுகிறான் என்பது இளங்கோவடிகள் கூற்று.

ஆயினும், முன்னர், பொருள் தேடச் சென்று, பூம்புகார் நகரில் மாதவி என்னும் மங்கை நல்லாளின் கலையழகிலும் உடல் வனப்பிலும் கட்டுண்டு, கண்ணகியின் நினைப்பிழந்து, கைப்பொருள் இழந்து,

"மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு மாதவிதன்னொடு
அணைவுறு வைகலின் அமர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆகி
வடு நீங்கு சிறப்பின் தன் மனையறம்மறந்தேன்...." வாழ்ந்து வருகின்றான்.

ஆடல் பாடல்களில் கலைமகளாக அவதாரம் பெற்ற மாதவி,

"எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் பண் நான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவி, தன்
வாக்கினால் ஆடரங்கின் வந்து"

அரச சபையில் ஆடல் செய்தபோது, இந்தக் கலைகளின் நுட்பந்தெரிந்த கோவலன், தன் மனதைப் பறிகொடுக்கிறான் என்பதில் அதிசயம் இல்லை. ''பெண்கள் முகம் போல ஒளிவீச வல்லவளாக, காதலை உடையவளாகி மதியே! நீ வாழ்வாயாக'' என்ற வள்ளுவர் கூறும் இலக்கணத்துக்கேற்ப மாதவி நினைப்பில் வாழ்கிறான் கோவலன்.

"மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" என்பது குறள்.

அந்நாள்களில் ஒருமுறை, இந்திரவிழாக்காண இருவரும் செல்கின்றனர். அங்கே, பொழுது போக்குக்காக, மாதவி கையிலிருந்த யாழைவாங்கி மீட்டிக் கோவலன் பாடுகிறான்.

"கோவலன் கை யாழ் நீட்ட, அவனும்
காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்
மாதவிதன் மனம் மகிழ வாசித்தல் தொடங்குமன்"

என்பதாகக் கோவலன் பாடலைக் குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள்.

இவ்வாறு கோவலன் கானல் வரி பாடக்கேட்ட மாதவி அவன் வேறொரு பெண்ணின் மேற்காதல் கொண்டுவிட்டதாகப் பொருள் செய்து தானும்,

"கலவியால் மகிழ்ந்தாள் போல புலவியால் யாழ் வாங்கித்
தானும் ஓர் குறிப்பினள் போல் கானல்வரிப் பாடல் பாணி"

பாடத் தொடங்குகிறாள்.

ஆனால், அந்த நாள்களில், மாதவி எல்லாவிதத்திலும் தனக்கே சொந்தமானவள்; அவள் பலர் காணத் திரியவும் கூடாது என்ற மனப்பாங்குடன் வாழ்கின்ற ஒருவனாகக் கோவலன் இருக்கின்றான். இந்த [illegible]

[illegible]
பலர் காணத் தோன்றல் மதி" எனக் கூறிச் செல்கிறார்.

கோவலன் எண்ணுவதுபோல, கோவலனே தஞ்சமென மாதவி அவன் காலடியிற் கிடந்தாலும், ''நிலத்தெய்வம் வியப்பெய்த, நீள் நிலத்தோர் மனம் மகிழ'' புகழ் ஏணியின் உச்சிக்கு உயர்ந்து, கலை மகளாக நின்ற மாதவி, வெறுங்காதலுக்காக மட்டும் வாழ முடியுமா என்ன? தன் கலைத்திறனைக் காட்ட வாய்ப்பு வந்தபோது, அதுவும் கலைத்துறையில் சிறந்த தன் காதற்கணவன் முன் போட்டியாக மாதவி பாடிய ஆற்றுவரிப்பாட்டு கோவலனுக்கு அவள் மீது சந்தேகத்தைக் கொடுத்துவிடுகிறது!

அதனால் கோவலன்,

"கானல்வரி யான்பாடத் தான் ஒன்றின் மேல் மனம் வைத்து
மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என"

மாதவியை விட்டுப் பிரிந்து செல்கிறான்.

ஆனால் மாதவியோ,

''நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோமால்'' எனக் கலங்கிய மனத்தினளாய்த் தனியே தன் மனைக்குச் செல்கிறாள்!

இவ்வாறு கானல்வரிப் பாடலால், கோவலனிடத்தில் உண்டான காதற்குழப்பம், மாதவி - கோவலன் இருவரையும் பிரித்துவிடுகின்றது. பிரிந்து சென்ற கோவலன் கண்ணகியோடு சேர்ந்து விடுகிறான். ஆனால் மாதவி,

''தெய்வமே! நின் மலரடி தொழுதேன்
நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டோமால்'' என்று

கோவலன் நினைவாகவே தன் மனைபுக்கு வாழ்கிறாள்.

இலக்கியக் காட்சி 43

பின்னர், ஊழ்வினைப் பயனாய் கோவலன் அநியாயமாக அரசனால் கொல்லப்படுகிறான். அதனால், கண்ணகி தெய்வமாகி, வழக்குரைத்துக் கோவலனோடு வானவர் உலகம் செல்கிறாள்.

மாதவியும் தன் மகள் மணிமேலையோடு துறவு பூணுகின்றாள். தமிழ் அன்னைக்கு நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கிடைக்கிறது!

மட்டுவில் நா. நல்லதம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் நட்சத்திரங்கள்



பூமியில் உள்ள பல்வேறு கூறுகளும் தமக்கென பிரேத்தியேகமான ஒலி எழுப்பும் இயல்பைக் கொண்டிருப்பது போல விண்வெளியில் உள்ள நட்சத்திரங்களும் தமக்கெனப் பிரேத்தியேகமான( சூரியன் உட்பட) ஒலிகளை எழுப்புகின்றன என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

நட்சத்திரங்கள் எழுப்பும் ஒலிகள் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் அவற்றின் வயது, பருமன் மற்றும் இரசாயனக்கட்டமைப்புக்கள் குறித்து வேறுபடுகின்ற அதே நேரம் அவ்வொலிகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு சீரான சந்த ஒழுங்கைக் காண்பிப்பனவாகவும் இருக்கின்றன.

விண்வெளியில் சஞ்சரிக்கும், பிரான்ஸ் நாட்டின் கரோட் விண்வெளி தொலைநோக்கியின் உதவி கொண்டு விஞ்ஞானிகள் நட்சத்திரங்களில் இருந்து எழுப்பப்படும் ஒலிகள் குறித்த தகவல்களைப் பெற்றிருப்பதுடன் அவற்றை நாம் கேட்கக்கூடிய வகைக்கும் ஒலிப்பதிவு செய்து இணைப்பில் தந்துள்ளனர்.

இவ்வாறு நட்சத்திரங்கள் தமக்கெனப் பிரேத்தியமாக எழுப்பும் ஒலியின் இயல்புகளைக் கொண்டு நட்சத்திரங்களில் நிகழும் செயற்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்கள் பலவற்றை அறிவியல் ரீதியாக அணுகிக் கண்டறிய வாய்ப்பிருப்பதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். ★★★













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 115



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. ஆம்பல்.
4. காலம் தாழ்த்து.
7. தாரம்.
8. விசாலமான.
9. சார்பானது, பாதகமற்றது.
11. ஜன்னல்.
13. உள்ளீடு அற்றது. சப்பி.
14. அரைச் சந்திரன்.
17. ஒரு தானியவகை.
18. கல் வைத்து வீசும் கருவி.
19. உடல் சீவனற்றது.
20. மேளக் கச்சேரியின் போது நடப்பது.
21. நிலத்துக்குக் கீழிருந்து கிடைக்கும் பொக்கிஷம்.
22. விடை.

### மேலிருந்து கீழ்

1. திருமணமாகாத இளம் பெண்.
2. கூரிய எல்லை. முயற்சி செய் என்றும் பொருள் படும்.
3. தலைமை வகிப்பவர்.
4. விடாய்.
5. நிலத்தில் காணப்படுவது. கல்லுக்குப் பின் வந்தது.
6. மண் குன்று/ மேடு/ களம்.
8. செருக்கு.
10. பெருக்கல் குறி.
11. உச்சப் பெறுபேற்றை எட்டுதல்/ நிலைநாட்டுதல்.
12. ஒரேயளவான.
13. அச்சிடுகை.
15. வலிமை/ பலம்.
16. விஷ்ணுவுக்கு இப்படியும் ஒரு பெயர்.
18. சமுத்திரம்.
19. கழித்தல் குறி.
20. மறைவில் தீட்டுவது.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 113 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)தேசவழமை. (5) மாசி. (7)கடைசி. (8)தாராளம். (10) யவனம். (12) வம்சம். (13) தம். (14) நீலி (15)அலை. (16) சோதரன். (18)பவளம். (20) பதவி. (22) திடம். (23) அன்றில்.

**மேலிருந்து கீழ்**

(1) தேகம். (2)சடை. (3) வசியம். (4) மைதானம். (5) மாஎ. (6) சிம்மம். (9) ராம். (11) வசந்தம். (12) வலி. (13) தலை. (14) நீதிபதி. (15) அன்பன். (16)சோளம். (17) தவில். (19) வட. (21) தறி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 113 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — யோ.யோ.யோகராஜா, வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானை.

2 ஆம் பரிசு — ராதா அருணானந்தம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

3 ஆம் பரிசு — பா.உதயனிக்கினன், க.பொ.த. (உயர்தரம்) 2011 யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

4 ஆம் பரிசு — ர.பிரியதர்சன் சர்மா, முருகன் கோவிலடி, அனலைதீவு தெற்கு, அனலைதீவு.

5 ஆம் பரிசு — மதுஷா சத்தியசீலன், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*

*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*

*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*

*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*

*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 115**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 09 .06.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.115 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 13.06.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### பாராட்டுப் பெறுவோர்

(1) பொ.கிரித்திகா, விஜயா அகம், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(2) திருமதி த.நாகரத்தினம், மாப்பாணவூரி, காரைநகர்.

(3) அ.ரதீஸ்கந்தராஜா, இல. 15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர்க்கிழக்கு, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# சங்கமம்

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

அவ்வாறே கிறிஸ்தவ மக்களுடன் சைவர்களும் அருகில் இருந்த கிறிஸ்தவ ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். மதபேதங்களைப் பாராட்டாமல் ஆலயங்களிலே சங்கமித்திருந்த மக்களிடமிருந்த பகவானே, ஈஸ்வரனே! சித்தி விநாயகனே! ஆண்டவனே! இயேசுவே! என எழுப்பப்பட்ட கடவுளின் நாமங்கள் பல அங்கு சங்கமித்து, மதங்களின் பேரால் ஏற்பட்டிருந்த பகை உணர்வை இல்லாதொழித்தது.

பூவரசங்குளத்திலிருந்த அனைத்து வீடுகளும் இராணுவத்தினரால் சல்லடை போட்டுச் சோதிக்கப்பட்டன. பிள்ளையார் ஆலயத்துக்குள் புகுந்த இராணுவத்தினரில் ஒருவன், கதவடியிலே அவர்களைத் தடுத்து நின்ற குருக்களைக் குடுமியிற் பிடித்து, சுவரில் மோதி எறிந்தான். அத்தோடு சரி இராணுவத்தினர் என்ன நினைத்தார்களோ தெரியாது. ஆலயத்துக்கு எந்த விதமான சேதத்தையும் செய்யாது, வேறு திசையாகப் போய்விட்டார்கள். உணர்விழந்தவராகக் குருக்கள் கிடந்தது போலவே, பயத்தில் உறைந்திருந்த மக்களும் உணர்விழந்தவர்களாகக் காணப்பட்டனர்.

கிறிஸ்தவ ஆலயத்திலும் இதே கதைதான். அங்கு சென்ற இராணுவத்தினரால் உடைமைகள் சில சேதமாக்கப் பட்ட போதிலும், மக்கள் தாக்கப்படவில்லை. இராணுவத்தினரோடு கதைப்பதற்காகச் சென்ற போதகர் மட்டுமே, துப்பாக்கிப் பிடியினால் தாக்கப்பட்டார். தடுமாறிக்கீழே விழுந்த அவரின் வலது கையிலே முறிவேற்பட்டுவிட்டது. அவர் மூர்ச்சையாகி நிலத்திலே கிடந்தார்.

இராணுவத்தினரால் கட்டடங்கள் சேதமாக்கப்பட்டு, உடைமைகள் சூறையாடப்பட்டு மக்கள் சிலர் தாக்குதலுக்குள்ளான போதிலும், உயிரிழப்புக்கள் ஏதும் அங்கு ஏற்படாதது உண்மையில் அதிசயமே. ஆலயங்களில் தஞ்சம் புகுந்து மக்கள் பாதுகாக்கப்பட்டமை, பெரிதாகப் பேசிக்கொள்ளப்பட்டதோடு, நம்ப முடியாததாகவும் இருந்தது.

பூவரசங்குளத்தை விட்டு இராணுவத்தினர் வெளியேறி சிறிது நேரத்தில், தொண்டு நிறுவன அதிகாரிகளும், அரச அதிகாரிகளும் அங்கு வந்து சேர்ந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வவுனியா வைத்தியசாலையிற் சேர்க்கப்பட்டனர். மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த குருக்களும், போதகரும் விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர். குருக்கள் கொழும்புப் பெரியாஸ் பத்திரியிலும், போதகர், கிறிஸ்தவ சமய ஆயர் கேட்டுக்கொண்டபடி நவலோகா வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

குருக்களும் போதகரும் இதன் பின்னர் சந்தித்துக் கொள்ளவே இல்லை! சந்திக்க அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏறக்குறைய ஒரு வருடத்தின் பின் அன்றுதான் கனடா மண்ணிற் சந்தித்துக் கொண்டனர்.

மனத்திரைகளில் படம் விரித்து நின்ற இறந்தகால நிகழ்வுகளிலிருந்து, தங்களை விடுவித்துக்கொண்டு, வாழ்வின் உண்மையைத் தரிசிக்க அவர்கள் இருவரும் ஆயத்தமாகிவிட்டனர்.

குருக்கள்தான் முதலிற் பேசினார்.

''நான் [illegible] சாலை[illegible] பூவரசங்குளத்துக்குப் போகவே இல்லை. எந்த முகத்தோடு அங்கு போவது? மதவெறியை விதைத்து, பகைமையை வளர்த்துவிட்ட நான், பூசகராக கடமையாற்றும் தகைமையை இழந்தேவிட்டேன். நான் இப்போ சாதாரண பஞ்சாட்சரம். அவ்வளவுதான். தத்துவம் பேசுகிறேனென்றோ, நாத்திகனாக மாறிவிட்டேனென்றோ இதற்குப் பொருளில்லை.

அன்பே வடிவான பகவானில் சாமனியன் பிழை கற்பிக்கலாமோ? சாதிகள் என்றும், சமயங்கள் என்றும் ஓராயிரம் பேதங்களை ஏற்படுத்திக் கொண்டு நமக்குள் மோதிக்கொள்வதற்கு எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஈஸ்வரன் எவ்வாறு பொறுப்பாவான்? வினை விதைத்த நாம் வினையை அறுத்துள்ளோம். இந்த அளவிலாகுதல் பிழைத்திருக்கிறோமே... உண்மையாகவே இறைவன் அருளாளன்தான்! என்னால் இலங்கையிலே தொடர்ந்து வாழமுடியவில்லை. தெரிந்தவர்கள் சிலரின் உதவியோடு மகளையும் கூட்டிக்கொண்டு கனடா வந்துவிட்டேன்'' உணர்ச்சி மேலீட்டால் குருக்களின் பேச்சு இடையிடையே தடைப்பட்ட போதிலும் தம்மைச் சுதாகரித்துக்கொண்டு நடந்தவற்றைக் கூறிமுடித்தார்.

குருக்கள் கூறியவற்றை அக்கறையுடன் உள்வாங்கிக்கொண்ட போதகர், தமக்கு நடந்தவற்றையும் கூறத்தொடங்கினார்.

''நவலோகாவிற் சேர்க்கப்பட்ட நான் இரண்டு மாதங்கள் வரை அங்கு தங்க வேண்டியதாயிற்று. செலவு முழுவதும் எங்கள் ஆயரின் பொறுப்புத்தான். உடல் ஓரளவு தேறிவிட்டாலும், மனதில் ஏற்பட்ட தாக்கம் அப்படியே இருக்கிறது. பூவரசங்குளச் சம்பவங்கள் இலகுவில் [illegible]வையா? நீங்கள் கூறியது [illegible] வினை விதைத்து, வினையை அறுத்துள்ளோம். என் நிலையும் உங்கள் நிலையைப் போன்றது தான். கடவுளின் அன்பை உள்ளபடி அறியாமல் இருந்துவிட்டோம். ஒரே கடவுளை நமக்குள் பங்குபோட்டுக் கொண்டு, மதம் என்னும் சிறைக்குள் அவரை அடைத்து வைத்து, மதவெறியை வளர்த்துவிட்ட நம்மை அந்தக் கடவுள்கூட மன்னிக்க மாட்டார்.

எனது பணியை பழையபடி மேற்கொள்ளும் பக்குவத்தை நானும் இழந்துவிட்டேன். கொழும்பிலே எனது பணியைத் தொடரலாமென ஆயர் கூறிய போதிலும், என்னால் அதனை ஏற்கமுடியாது போய்விட்டது. என் மகளையும் அழைத்துக்கொண்டு கனடா வருவதைத்தவிர, எனக்கு வேறுவழி இருக்கவில்லை.'' போதகர் அமைதியாகக் கூறிமுடித்தார்.

நீதிமன்றத்துக்கு நேரகாலத்தோடு அவர்கள் வந்திருந்ததால், இவ்வாறு மனந்திறந்து பேசிக்கொள்வதற்கு, போதிய அவகாசமிருந்தது. அவர்கள் தங்கள் பேச்சை முடித்துத் திம்பிப்பார்த்தபோது, குருக்களோடு வந்திருந்த மகள் பாரதியும், போதகரோடு வந்திருந்த மகள் கிறிஸ்ரியும் சற்றுத்தூரத்தில், தங்கள் உறவைப் புதுப்பித்துக்கொள்பவர்களைப்போல வாஞ்சையுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். கொழும்பிலே படித்துக்கொண்டிருந்த நாள்களில், உறவினர்கள் வீடுகளிலே ஓரிரு தடவைகள் சந்தித்துத் தங்கள் உறவை அறிந்து வைத்திருந்த அவர்களின் முகங்களிலே, புதுப்பொலிவு நிறைந்திருப்பதை, குருக்களாலும், போதகராலும் கண்டு கொள்ள முடிந்தது. மதத்தடைகளைக் கடந்து மனிதநேயம் சங்கமித்து நிற்கும் இக்காட்சியானது, மனத்தெளிவுபெற்று நின்ற தந்தையர் இருவரின் உள்ளங்களை நிறைத்து நின்றது. ★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ங்கள் எம் பிள்ளைகள் ?

## நம்பிக்கையுடன் நாளை நோக்கி....




தருமபுரம் பகுதியில் மீளக்குடியமர்வதற்காக வந்த மக்கள் அங்குள்ள மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினரின் பதிவுக்காகக் காத்திருக்கிறார்கள்.



ஈச்சலவத்தையில் மீண்டும் ஓர் இடைத் தங்கல் முகாமைத் தமக்காக ஏற்படுத்தும் பெண்கள்.




எத்தனை இடங்கள் பெயர்ந்து நகர்ந்தாலும் கல்வியே எங்கள் சொத்து ...சிலவத்தை முகாமில் கற்கும் மும்முரத்தில் சிறுமி




தமது சொந்தக் கிராமத்துக்குத் திரும்ப முடியாத நிலையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கியுள்ள முறிகண்டி பகுதி மக்கள்.



பட்டிப்புலம் கிராமத்தில் குடியிருக்க வீடில்லாததால் மரத்தில் துணி கட்டி உறங்கும் குழந்தை.



இடிபாடுகளுக்கு இடையில் மீண்டெழ முயலும் பட்டிபுலம் மக்கள்.





முற்றிலும் [illegible] குடியிருப்பு நகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவாகக் கையாளவும் நெடுநாள் பேணவும் முடிவதால் தகவல் சேகரிப்பில் நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன

நூலகங்கள் மக்களுக்கு எழுச்சி தரும் சாதனங்களில் முதன்மையானதெனக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் தன்னைத் தகுதியாளன் ஆக்குவதற்குத் துணை செய்வன அந்த நூலகங்கள் கொண்டிருக்கும் தகவல் சாதனங்களேயாகும். செய்திகளையும் அறிவுத் தகவல்களை வெளிக்கொணரும் வெளியீடுகளையும் நிரந்தர, ஆழமான அமிசங்களைக் கொண்டிருக்கும் நூல்களும் நல்ல நூலகங்களிலே முதலில் வந்து சேரும். மேலும், தகுதிபெற்ற நூலகர் ஒருவரினால் தொழில் நூல்களை வழங்குவது மட்டுமல்லாது எம்மை வழிநடத்தவும் இயலும். ஆதலாலும் நூல்கள் முதன்மையானவை. எமது நாட்டைப் பொறுத்தவரையில் - பிரதேசத்தைப் பொறுத்த வரையில் மக்கள் ஒன்று சேரக் களம் அமைத்தவை சனசமூக நிலையங்களாகும். அவை சமூகத்தின் கண்களாகும்.

முரசறைந்து மக்களை ஒன்று கூட்டிய ஒரு காலமிருந்தது. பால் கட்டுதல், தடுப்பூசி போடுதல், கட்டாக்காலி மிருகங்களைப் பிடித்தல் போன்றவற்றுக்கு மக்களை அழைக்கும் முகமாக, முரசறைபவர்களைத் தெருத் தெருவாகச் செல்லவைப்பர். முரசினை (மேளத்தை)த் தட்டியும், செய்தி, செய்தி எனக் கூவியும் முரசறைவோன் மக்களை அழைப்பான். மக்களும் செய்தியறியும் ஆவலில் கூடுவார்கள். முரசறைவோனும் மக்கள் வந்து சேரவேண்டிய இடத்தைக் குறிப்பிடுவான். இவ்வாறு ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு பொது இடத்தைத் தேர்ந்தெடுத்து அத்தகைய அறிவிப்புகளை வெளியிட்டனர்.

பின்னர் நாளாவட்டத்தில் மக்கள் ஒன்று கூடும் அவ்விடங்களில் மக்களைப் பொறுமையாக இருத்துவதற்கும், செய்திகளைப் பரப்புவதற்கும், பத்திரிகைகள் போடப்பட்டன. தொழிலாளர் கூடுமிடங்களில் இலவச செய்தித்தாள்கள் விநியோகிக்கப்பட்டன. அங்கு பத்திரிகை வாசிக்க ஒருவர் நியமிக்கப்பட்டார். (உ+ம்: சுருட்டுக் கொட்டகைகளில் இன்றும் அத்தகைய வழக்கத்தைக் காணலாம்) மெல்ல மெல்லப் பத்திரிகைகளுக்குட் பிரபல்யம் ஏற்படலாயிற்று. பத்திரிகைத் துறையும் வளர்ந்தது. மக்கள் கூடிய அந்தப் பொது இடங்கள், சனங்கள் சமுகமளிக்கும் இடமாக உறுதிப்படுத்தப்பட்டது. சமூகத்தினர் சேர்ந்த அந்த இடங்கள் சனசமூக நிலையங்களாகின. ஒவ்வொரு ஊரிலும் இவற்றை நிறுவிய அரசு அவற்றுக்கு மானியமும் வழங்கியது. கால ஓட்டத்தில் மக்கள் இந்நிலையங்களை சனசமூக நிலையத்தோடு நூல் நிலையங்களாகவும் வளர்த்தனர். பெரும்பாலான இடங்களில் இன்றுங்கூட சனசமூக நிலையமாக மட்டும் இருத்தலையும் நூலகம் மட்டும் (பொது நூலகம்) தனித்திருத்தலையும் காணலாம்.

சனசமூக நிலையம் வேறு, நூல் நிலையம் வேறு. இரண்டிற்கும் பாரிய வேறுபாடுண்டு. இது உணரப்படுவதில்லை. நூலகங்களிற் பலவகையுண்டு. பாடசாலை நூலகம், ஆராய்ச்சி



முதுகலைமாணி
**ம.க.கடம்பேசுவரன்**

நூலகம், மொழி ஆய்வு நூலகம், பொது நூலகம், தகவல் நூலகம் என்றிவ்வாறு இவை பல வகைப்படுத்தப் படலாம். அவற்றின் தன்மைகளை அறிந்து, பயிற்சி பெற்ற - நூலக விஞ்ஞானத்தில் தேர்ந்த நூலகர்களின் வழி காட்டலோடு பயன் பெறுதல் வேண்டும். நூலகர் தகவல்களை வழங்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவர் கல்வி அத்தகையது.

அவ்வாறு பயன் பெற்றால் ஒருவர் தன்னைத் தகுதியாக்கிக் குறித்த இலக்கை எய்த இயலும்.

"ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்கும் கந்தாகும்
வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன் தான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்"

ஒரு சிறுமரக்கூறு வளர்ந்து காழ்ப் படைந்து களிறை (யானையை)ப் பிணைத்துக் கட்டும் கந்தாவது எவ்வாறோ, அவ்வாறே ஒருவனைத் தகுதியாளனாக்குவது நல்ல நூல்களே யாகும். அவனை அது அறிஞனாக்கும்.

நூலகங்கள் தோற்றம் பெறமுன் - குரு சீட முறைக் கல்வி இருந்த காலத்தில் - எழுத்தும் வாசிப்பும் முறையாக இல்லாத அக்காலத்தில், மடாலயங்கள் செவிவழிச் செய்திகளாகவே அறிவைப் பரப்பின. அந்த அறிவின் துணையுடனே - அது தந்த அனுபவத்தை - செவிவழி அறிவை - உலக நடைமுறையை அடிப்படையாக்கியே மக்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைப் பாதையை அடியொற்றி அடுத்த பரம்பரை நடந்து வந்தது. இவ்வாறு அறிவுக் களஞ்சியத்தைப் பெற்றுக் கொண்டே வந்த சமூகம், செவிவழிப் பாடல், செவிவழிச் செய்தி, சோதிடம், மருத்துவம் முதலானவற்றோடு தாம் பெற்ற அனுபவத்தையும், பதிவு செய்ய ஓலைச் சுவடி (பனையின் குருத் தோலை)கள் துணை செய்தன. கடதாசித் தாள், அச்சு இயந்திரம் ஆகியவற்றின் வருகை ஓலைச் சுவடிகளாக இருந்தவற்றை - அந்த ஏடுகளை நூல்களாகப் பல்லாயிரக் கணக்கான பிரதிகளாகப் பெருகவும், பெருக்கவும் உதவின. அவை விரைந்த வளர்ச்சிக்கும், விரைந்த தேடுதலுக்கும் வித்திட்டன. அந்த அறிவுத் தேடல்களின் அடிப்படையிலேயே மனித இனம் இயங்கியது; முன்னேறியது ; முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கிறது. ஆதலால் நூல்கள் நல்லதோர் ஆவணங்களாகின. அதனால் அவை பாதுகாக்கப்பட்டன.

முன்னேற்றத்துக்கான தேடுதல்களை நாடுமிடத்து எல்லாப் பரம்பரையினரும் முன்னையதைச் சீர்தூக்காமல் விட்டு விட்டு, ஆரம்பத்தில் இருந்தே தேட ஆரம்பித்தால், பரம்பரை யாகவந்த அறிவு விடுபட்டுப்போகும். எழுத்து வடிவில் முன்னையோரது அறிவும் அனுபவமும் காக்கப்படுமானால், அந்த ஆவணங்களை, நூல்களை வாசித்துப் பயன் செய்வார்க்கு எழுத்து வடிவிலான அவை, அவர்களது வளர்ச்சிக்குத் தளமாகும்.

இவ்வாறு பரம்பரை பரம்பரையாகச் சேகரித்துக் கொண்ட அறிவின் தளங்கள் பல. அத் தளங்களிலிருந்து பெற்ற அறிவினது வளர்ச்சியே மனித சமூகத்தினது உயர்வைக் காட்டுகிறது - சமூகத்தை உயர்த்துகிறது.

உயர்வைத்தரும் வாசித்தலை ஒழித்து விட்டுச் செவிவழிச் செய்தியோடு மட்டும் நின்று விடுவோமானால், அல்லது புதிதாக ஒன்றை ஆரம்பிப்போமானால், புல்வெளியில் கட்டையொன்றில் கட்டப்பெற்ற மாடொன்று மீண்டும் மீண்டும் ஓரிடத்தையே சுற்றிச் சுற்றி வருவதுபோல, முன்னேற்றமில்லாது போக நேரும். அல்லது முன்னைய பரிசோதனைகளையே மீண்டும் மீண்டும் செய்தது போல ஆகும். அதனாலேயே தீர்க்கமாக வரையறை செய்யப்பெற்ற நல்ல நூல்களை வாசித்தல் அவசியமாகின்றது. இன்று கற்றவர்கள் கூடத் தொடர்ந்து வாசித்தலை விட்டு விடுகிறார்கள். எழுதுவதைக் கூடச் சுருக்கி விட்டார்கள். மக்கள் வாழ்வில் கடிதம் கூட, பெரிதாக எழுதப்படுவதில்லை. தொலைபேசியில் கதைப்பதோடு சரி. கட்புல, செவிப்புல சாதனங்களைத் (Visuval +Audio) தேடிப்பயன் செய்வதுடனோ அல்லது பத்திரிகைகளை மேலெழுந்தவாறு பார்ப்பதுடனோ நின்று விடுகின்றார்கள். ஆழமான நல்ல நூல்களை அறிந்து ஆழமாக வாசிக்காமலே இருந்து விடுகின்றார்கள்.

எல்லா மின்னியல் சாதனங்களையும் விட நூல்களை நாம் இலகுவாக எடுத்த எடுப்பிலேயே கையாளலாம்.

அதேசமயம், அந்த நூல்களின் தகவல்கள் அழிவதில்லை. தொடர்ச்சியாக - இருந்தோ - படுத்தோ - சாய்ந்த நிலையிலோ வசதிக்கேற்றவாறு நூல்களைப் புரட்டிப் புரட்டிப் படிக்கலாம். மீண்டும் மீண்டும் வாசித்து மனதிலிருத்தலாம். நூலே அறிவனுபவப் பதிவுக்கு இலகுவானது. மனித சமுகத்தின் முன்னைய அனுபவங்கள், அவரவர் சார்ந்த மொழிகளிலேதான் உள்ளடங்கியுள்ளன. அவற்றை விலக்கியோ, ஒதுக்கி விட்டோ மீண்டும் மீண்டும் கடினப் பாதைக்குச் செல்லல் அறிவாகுமா? வாசிப்பதனாலேயே முன்னைய பரம்பரை பெற்றுக் கொண்ட அறிவின் தரத்தினை முதலீடாக வைத்து, மேலும் சிந்தித்து உயர்ந்த இடத்திற்குச் செல்லப் புதிய பரம்பரைக்கு முடியும். இந்த வாய்ப்பைக் கொடுப்பதும் தரமான நூல்களே!



விரைந்து வெளிவரும் நூல்களாலும் தொழில்நுட்பச் சாதனங்களாலும் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்கின்றோம். அவ்வாறு தகவல்களை மட்டும் பெற்றால் மட்டும் போதுமா? அந்தத் தகவல்களைப் பலரறிய வெளிக்கொணர்ந்து பயன்படுத்த ஆற்றல் தேவை. இன்னும் சொல்லப் போனால் பகுத்தாய்வு செய்து புதிய பரிமாணங்களோடு சிந்தனை வயப்படுத்தி புடமிட்டு சமுதாயத்துக்கு வழங்க வேண்டும்.

ஆழமான, அகலமான கல்வியுடையார் நல்ல நூல்களின் மூலம் சமூகத்துக்கு அறிவை வழங்கலாம் - வழங்கியமையாலேயே உலக புத்தக தினம் என வருடா வருடம் கொண்டாடப் பெறுகின்றது.

அறிஞராக விரும்பும் ஒருவர், என்றும் அறிந்து கொண்டே இருப்பவராக, வாழ்நாள் பூராகவும் வாசிப்பவராக, தேடுதலை விரும்புபவராக இருக்க வேண்டும்.

கேட்பதை, வாசிப்பதை "விரைந்து விளங்கிக் கொள்பவராக இருத்தலும், நினைவில் நிறத்துதலும் அறிவு" என்று பரிமேலழகர் கூறியுள்ளார். கேட்பதைவிட வாசித்தலே கருத்தூன்றிச் சிந்திக்க, விளங்கிக்கொள்ள உதவும்.

"நூலளவேயாகும் நுண்ணறிவு" என்பதற்கமைவாகக் கற்கும் நூலின் அளவால் அறிவு பெருகும். கடற்கரையில் அல்லது களர் நிலத்தினைத் தோண்ட நீர் நிறையவே சுரக்கும். அது பயன் தருமா? இன்று வெளிவரும் எல்லாக் குப்பைகளையும் கிளற வேண்டுமா? வேண்டாம். நன்னிலத்தில் - உண்ணும் நீர் சுரக்கும் இடத்தை - நல்ல நூல்களைத் தோண்ட வேண்டும். தம்மை அறிவாளராகச் செய்ய வேண்டும்.

"தொட்டனைத் தூறும் மணற் கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" "ஓதுவ தொழியேல்" என்பன சான்றோர் வாக்கு. எல்லாவற்றுக்கும் துணையாய் அமைவன நூல்களே! - நூலகங்களே! ***********

## அன்பின் இருப்பிடமே அமைதியின் பிறப்பிடம்

*"அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல." (யோவா:- 14:27).*

அமைதி - சாந்தி - சமாதானம் - நிம்மதி இதுதான் மனிதனின் இன்றைய தேடலும் எதிர்பார்ப்புமாக உள்ளது. இவற்றை நாம் அடைவதற்காகச் சுக்கானற்ற படகு போல மாயச் சுழிகளில் சிக்குண்டு பாதை மாறிச் சென்றுகொண்டிருக்கிறோம்.

மனித உயிர் ஒவ்வொன்றும் அமைதியின் உருவாகவே இறைவனால் படைக்கப்படுகின்றது. ஆனால் அவனது வளர்ச்சிப் பாதையில் ஏற்படும் குறுக்கீடுகள், சூழல் நிகழ்வுகளில் அமைதியீனத்தை ஏற்படுத்துகின்றது. பிறப்பிலும் இறப்பிலும் தோன்றும் அமைதி இடை யிலே தொலைந்துபோகக் காரணம் என்ன? அமைதி என்பது கடையில் வாங்கும் பொருளோ, அடுத்தவர் வழங் கும் பரிசோ அல்ல. உள்ளத்தில் இருந்து உள்ளத்திற்குப் பரிமாறப்படும் உன்னத அன்புதான் அதன் தோற்றுவாய் என்னும் யதார்த்தத்தை உணராமையே அதற்குக் காரணம் ஆகும்.

நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். (யோவா: 13 : 24) என்பதை மறந்து, சேர்த்துவைத்த சொத்து, சுகம், புகழ், பதவி, அதிகாரம், அமைதியைத் தருமா? பிறர் என்மீது அன்பு காட்ட வேண்டும், மதிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும், உறவாட வேண்டும், உதவ வேண்டும் என்ற மனநிலை மாறி இவற்றை நாமே பிரதிபலிக்கும்போது ஏற்படும் அன்பின் சமாதானமே அமைதிக்கு வழிவகுக்கும்.




'கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்' என்னும் எதிர்மறைச் செயற்பாடுகளை மாற்றி ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டு - உன் மேலாடையைக் கேட்பவனுக்கு உன் அங்கியையும் கொடு. தூற்றுவோருக்காகவும் மன்றாடு என அன்புக்குப் புதிய இலக்கணம் படைத்தார் இயேசு. இதுவே இறைமகன் விட்டுச்சென்ற அமைதியின் அடித்தளம்.

கல்வாரி மலையில் இயேசு தந்த அன்பு, மன்னிப்பு, தியாகம் மனித குல அமைதிக்கு வித்திட்டது. அவரது உயிர்ப்பின் வழியாக அந்த அமைதியின் பிரசன்னமே உலகெங்கும் வியாபித்துள்ளது. அமைதியை நிலைநாட்ட நாம் அனைவரும் சமாதானத்தின் கருவிகளாக மாறவேண்டும்.

போருக்குத் தீர்வும், பகைமைக்கு அன்பும், எதிரிக்கு மன்னிப்புமே அமைதியைத் தரவல்லன. அடிமைக்கு உரிமையும், பசிக்கு உணவும், தனிமைக்கு அரவணைப்பும், உடல், உள, ஊனத்திற்கு ஆற்றுப்படுத்தலுமே இறைமகன் விட்டுச் சென்ற அமைதியை முன்னெடுக்கும் பணிகளாகும்.

'அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். (மத்:- 5:9)

**- எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபணு மாற்றஞ் செய்த பயிர்களுக்கு வந்த புதிய தலையிடி விவசாயிகளின் வயிற்றிலும் அடிக்கிறதே..!

## மனிதன் ஒன்றை நினைக்க இயற்கை இன்னொன்றை நினைக்கும் பரிதாபம் கேளீர் !!

இயற்கையை மாற்றி புடம்போட்டு விந்தைகளை மரபணுவாகச் செயற்கையாகப் புகுத்தி, இயற்கைக்கே சவால் விடும் விஞ்ஞான உலகம் கவனிக்கத் தவறியதை - மேலும் அலட்சியப்படுத்தியதை, பல ஆண்டுகள் கழித்து இப்போது உணர வைத்திருக்கிறது. இது நடந்தது உலக சனத்தொகையை அதிகமாகக் கொண்ட சீனா நாட்டில். மக்கள் தொகை அதிகமாகக் கொண்டதால் வேறேதும் வழியின்றி பசுமைப்புரட்சியின் திறவுகோலான மரபணு மாற்றப் பொறியியல் (Genetic Engineering) மூலமாக மரபணு மாற்றம் செய்த பயிர்கள் பரந்துபட்ட பரப்பளவில் அங்கு பயிர் செய்யப்பட்டு வருகின்றன. உணவு உற்பத்திப் பெருக்கம் என்ற ஒன்றே குறிக்கோளாகியதால், பக்க விளைவுகள் பின்னர் தானே வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.



மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்திப் பயிர்ச்செய்கை

**பி.ரி பயிர்கள்**

பசிலசு துரெஞ்சியென்சிசு (Bacillus thuringiensis) என்னும் பக்றீறியாவினது, மரபணுவை பயிர்களுக்கு மாற்றஞ் செய்ததன் மூலம் இந்த பக்றீறியாவின் பூச்சி கொல்லும் அலகான என்டோரொக்சினுக்கு ஏற்புடையதான தாக்கத்தை பயிர்களில் அதிகரித்து வைப்பதே இந்தப் பொறிமுறையின் அடிப்படை நோக்கம். இவ்வாறான பூச்சியெதிர்ப்பு அல்லது பூச்சிகளைக் கொல்லும் பதார்த்தங்களின் மூலக்கூறுகள் பயிர்களினுள் செலுத்தப்பட்டதால், அப்பயிர்கள் புதிய மரபணுவைப் பெற்று பூச்சிப் பீடைகளிலிருந்து தப்பிப் பிழைத்திட வேண்டும். இந்தப் பொறிமுறை, அடிப்படையில் வெற்றியளித்தது என்னவோ உண்மை தான். பொதுவாக மண்வாழ் பக்றீறியாவாக இருப்பினும் இவ்வகை பக்றீறியாக்கள் பூச்சிப்பீடைகளில் நோயை ஏற்படுத்துவனவாக இருப்பதும் ஏனையவற்றை எதுவிதத்திலும் பாதிப்பது இல்லை என்பதும், இவற்றுக்கான முக்கியத்துவத்தை பிந்திய காலங்களில் அதிகரிக்கவே செய்திருக்கின்றன. ஆனால் எங்கும், எதிலும் நன்மையென்ற போதிலும் ஏதோ ஒரு பக்கத்தில் - எந்தப் பொறிமுறையிலும் ஒரு சறுக்கல் இருப்பது போல - இங்கும் அப்படியொரு சறுக்கலும் நெகிழ்வும் தெரிந்தும் தெரியாமலும் இருந்திருக்கின்றது. இது ஒன்றும் ஆச்சரியப்படும் செய்தியல்லவே என இதனை கற்றறிந்தவரும் ஆய்ந்தறிந்தவரும் கூறியபோதும் அதனது தாக்கம் பரவலாக விளைநிலத்தில் தோற்றுவிக்கப்படும் போது அதனை தற்போது உணரக் கூடியதாக உள்ளது. இதனையே 15 வருட நீண்ட ஆய்வின் முடிவாக சீன விஞ்ஞானிகள் இம்மாதம் 13ஆம் திகதி வெளியான Science Express என்னும் பிரபல்யமான விஞ்ஞான சஞ்சிகை மூலமாக வெளியுலகுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள். இந்த விடயத்தைச் சற்று விரிவாக ஆராய்வதற்கு முன்னர் பி.ரி பயிர்களில் ஏற்படுத்தப்பட்ட பி.ரி பொறிமுறை பற்றி விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. வாருங்கள், பி.ரி பொறிமுறை என்னும் பக்றீறியா ஒன்றினது ஆளுமையைப் பார்ப்போம்.

**பி.ரி பொறிமுறை**

இப்பொறிமுறை பற்றி ''உதயனில்'' இதற்கு முன்னரும் விரிவாக விளக்கியிருப்பினும், இக் கட்டுரைக்கு அவசியமென்பதனால் இப்போதும் சுருக்கமாக விளக்க வேண்டியுள்ளது.

பி.ரி எனப்படும் - **பசிலசு துரொன்சியென்சிசு** எனப்படும் பக்றீறியாவினால் ஒருவகை நச்சுப் பொருள் (இதனை 'டெல்ரா என்டோ ரொக்சின்' என்றும் 'Cry புரதம்' எனவும் அழைக்கின்றனர்) சுரக்கப்படுகின்றது. இந்த நச்சுத்தன்மையான பொருளைச் சுற்றி மெல்லிய ஒருவகை புரதப்படை ஒன்றுண்டு. இந்த புரதப்படை அதிகூடிய காரத்தன்மையிலேயே கரையும் தன்மையுடையது. இவ்வாறான காரத் தன்மையை உணவுக் கால்வாயில் கொண்டிருப்பவை பூச்சிகள் மட்டுந்தான். அதாவது உணவுடன் உள்ளெடுக்கப்படும் இவ்வாறான பக்றீறியா நஞ்சுக்கள், பூச்சிப் பீடைகளின் நடுக்குடலில் காணப்படும் காரத்தன்மையினால் அவற்றின் தோல் கரைய நஞ்சு வெளிக்கொணரப்பட்டு நடுக்குடலின் உள்ளக சுவர்களை இறக்கச் செய்து இறுதியில் பூச்சிப் பீடையின் உடலெங்கும் பக்றீறியா பரவி இறுதியில் ''செப்ரிசீமியா'' எனும் நிலைக்கு வந்து பூச்சிப்பீடையை அழித்துவிடும். இதில் ஒன்றைக் கவனித்தீர்களா?

உணவுடன் சமிபாட்டுக் குழாயினுள் உள்ளெடுக்கப்பட்டால் மட்டுமே பக்றிறீயாநஞ்சு வேலை செய்யும். அப்படியாயின் வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளுக்கு மட்டுமே இப்பொறிமுறை வேலை செய்யும். அப்படியாயின் இவ்வகை தவிர்ந்த மற்றைய வகையான குத்தியுறுஞ்சும் வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளுக்கு இந்த பி.ரி பொறிமுறை எந்த விதமான பாதிப்பினையும் உடனடியாக ஏற்படுத்தாது. இந்த உண்மையை ஆரம்ப காலங்களிலும் அறிந்திருந்தனர் பலர். ஆனால் உண்மை கசக்கத்தானே செய்யும். அது தான் இம்மாதத்து 13ஆம் திகதிய ஆய்வறிக்கையின் இரத்தினச் சுருக்கமான அறிவிப்பு, அபாயச் சங்கொலி எல்லாம். இனி அந்த அறிவிப்பு என்னவென்று பார்க்கலாமா?

**சீனாவில் பி.ரி பயிர்கள்**

சீனா உட்பட இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பி.ரி மரபணு மாற்றப் பயிர்ச்செய்கை செய்யப்பட்டு வருகின்றது. 1997ஆம் ஆண்டில் பி.ரி பயிர்களை பயிரிடுவதற்கான உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து பருத்தியில் காய்துளைப்பானை (கெலிக்கோவேப்பா ஆமியீறா) கட்டுப்படுத்துவதற்காகவே இப்பயிர்கள் பயிரிடப்பட்டன. வடக்குச் சீனாவில் 10 மில்லியன் சிறுவிவசாயிகள் 3 மில்லியன் கெக்டரில் பி.ரி பருத்தியையும், 26 மில்லியன் கெக்டரில் ஏனைய பயிர்களையும் பயிரிடுகின்றார்கள். இந்த பி.ரி பருத்தியில் ஒருவகைச் சாறு உறுஞ்சும் பூச்சியான 'மிரிட்டு பூச்சி' (Mirid Bug) யினது தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக ஆய்ந்தறிந்து தெரிவித்துள்ளார்கள்.

உலகளாவியரீதியில் பருத்தி 16 மில்லியன் கெக்டரில் பயிர் செய்யப்படுவதில் 50 வீதம் பருத்தி பி.ரி பருத்தியாகும். அதாவது மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட பருத்திக்கு இந்நிலை வந்திருக்கிறது. அதிலும் வடக்குச் சீனாவில் 95 வீதம் பருத்தியை பி.ரி பருத்தியாகவே பயிரிடுகின்றனர். சீனாவினது விவசாய விஞ்ஞான அக்கடமி விஞ்ஞானிகள் தொடர்ச்சியாக 15 வருட கள நிலை ஆய்வுகளைச் செய்தபின் திடுக்கிடும் தகவலைத் தந்திருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் மிரிட்டு பூச்சியின் தாக்கம் மிகக் குறைவாகவே இருந்திருக்கின்றது. நாள்கள் செல்லச் செல்ல வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளின் எண்ணிக்கை பி.ரி பொறிமுறை இருந்த காரணத்தினால் குறைவாகத் தொடங்கியது. இதனால் பூச்சிப் பீடைகளுக்கிடையில் போட்டி குறைந்திருக்க வாய்ப்புண்டல்லவா? இந்த வசதி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சாறு உறிஞ்சும் பூச்சி வகையினதான மிரிட்டு பூச்சி மெல்ல மெல்லப் பெருகத் தொடங்கியிருக்கிறது. மொத்தமாக, கடந்த 15 ஆண்டுகளாக இந்தப் பெருக்கம் நடைபெற்று, தற்போது இதனது தாக்கம் புதிய, பெரிய தலையிடியாக பி.ரி பருத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்தத் தலையிடி விவசாயிகளின் வயிற்றிலுமடித்துள்ளது. ஒன்றைக் கட்டுப்படுத்த இன்னொன்று வந்த கதையல்லவா இது. இதிலே இன்னும் அதிசயம் என்னவென்றால், பி.ரி பருத்தி தவிர சீன பேரீந்து, திராட்சை, அப்பிள் இன்னும் பல பயிர்களைத் தனக்கு மாற்றுவிருந்து வழங்கிகளாக மாற்றிக் கொண்டதும் தான். இவ்வளவுக்கும் பி.ரி பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சி பீடைகளுக்கெதிரான பொறிமுறை எதுவும் அறவே இல்லையென்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. நீங்கள் யோசிப்பதும் அனுமானிப்பதும் சரியாகவே உள்ளது. மிரிட்டுப் பூச்சி ஒன்றினது சேதத்தைத் தானே தற்போது கண்டு, ஆய்ந்து உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் பல வகைகளாக உள்ள வேறு சாறு உறிஞ்சிப் பூச்சிப் பீடைகளும் மிரட்டு பீச்சி போல படையெடுக்கத் தொடங்கினால் என்னவாவது? பி.ரி மரபணு மாற்றப் பொறிமுறை இதில் கையாலாகாத் தனமாகி விட்டது. இதுதான் இயற்கையின் விபரீதமன்றோ? ஒன்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததால் சமநிலை குழம்பி இன்னொன்று கட்டுப்பாடே இல்லாமலாகிவிட்டது. இயற்கையின் சமநிலையைக் குழப்பும் போது இவ்வாறான விளைவுகளை அனுமானித்திருக்க வேண்டும். இப்படியொரு சம்பவம் எமது விவசாய செயல்முறைகளுக்கும் நல்லதொரு பாடமாகும்.

**எமது நாட்டில்......**

எமது நாட்டில் பி.ரி மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட பயிர்கள் இதுவரை விளைவிக்கப்படாத போதிலும், இது போன்றதொரு நிகழ்வு சாதாரண விவசாயச் செய்கையில் தவிர்க்கப்பட வேண்டியதே. பசுமைப் புரட்சியின் பக்க விளைவுகளாக இவ்வாறான துன்பியல் நிகழ்வுகள் ஏற்பட்டது இது தான் முதல் தடவையு மல்ல. பீடைக் கட்டுப்பாட்டு பொறி முறைகளை இயற்கை விவசாயத்தின் வரையறைகளுக்கப்பால், விஞ்ஞா னத்தின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு சித்து விளையாட்டுக்களை காட்டுவதால் உடனடி விளைவுகள் நன்மையாகிடினும், காலப்போக்கில் இயற்கையின் சித்து விளையாட்டுக் கள் மேலே கூறியதைப் போல நடக்கவே செய்யும். இதையே எம் மொழி - செம்மொழியில் ''அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்'' என்றார்களோ?

**சாறு உறுஞ்சுவனவுக்கெதிரான மரபணு**

பி.ரி பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிப் பீடைகளுக்கெதிரான மரபணுவையும் சேர்த்துவிட்டால் பரிகாரமுண்டா என சிந்தித்திப் பார்ப்பவர்களுமுண்டு. இதிலே பூச்சிப் பீடைகளில் நோயை ஏற்படுத்தும் பூஞ்சணம் ஒன்றின் மரபணுவை மாற்றினால் சிலவேளை 'களில் இரு பொறிமுறைகளும் இணைந்து வெட்டியுண்ணும் மற்றும் சாறு உறுஞ்சும் பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்தக் கூடும். கணக்கைக் கூட்டிக் கழிக்க இப்படித்தானே வருகி றது. ஆனால் விளைவு எதிர்மறை யானால்..... நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் (இயற்கை) இன்னொன்றை நினைக்கும்.... என்ற கதையாகி விடும் - ஆனால் மேலே கூறியவை கதையல்ல. சமகால உண்மைச் சம்பவங்களே!



-கலாநிதி: கு.மிகுந்தன்-
தலைவர் விவசாய உயிரியற்றுறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பிரதான வீதிகளின் பெயர்கள்



- A1 : கொழும்பு - கண்டி
- A2 : கொழும்பு - வெள்ளவாய
- A3 : பேலியகொட - புத்தளம்
- A4 : கொழும்பு - மட்டக்களப்பு
- A5 : பேராதனை - செங்கலடி
- A6 : அம்பேபுஸ்ஸ - திருகோணமலை
- A7 : அவிஸாவெல - இரத்தினபுரி
- A8 : பாணந்துறை - இரத்தினபுரி
- A9 : கண்டி - யாழ்ப்பாணம்
- A10: கண்டி - புத்தளம்

ஞா. லிவேந்தன், தரம் 8A சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்



- ★ ஆத்திசூடி - ஔவையார்
- ★ சீறாப்புராணம் - உமறுப்புலவர்
- ★ பெரியபுராணம் - சேக்கிழார்
- ★ பாஞ்சாலி சபதம் - பாரதியார்
- ★ சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
- ★ சத்திய சோதனை - காந்தியடிகள்
- ★ கம்பராமாயணம் - கம்பர்
- ★ அரிச்சந்திர புராணம் - வீரகவிராயர்
- ★ மணிமேகலை - சீத்தலைச்சாத்தனர்.

ப. அனுஷா, தரம் 9C யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.

## உலகின் எரிமலைகள்

| எரிமலைகளின் பெயர் | நிலையம் |
|---|---|
| கொட்டோபக்சி | இக்வடோர் |
| மவுன்ற்வறங்கல் | அலாஸ்கா |
| மவுனாலோவா | ஹவாய் |
| எரிபஸ் | அந்தாட்டிக்கா |
| எற்னா | சிலி |
| சில்லன் | சிலி |
| வில்லாறிக்கா | சிலி |
| நுவாபெரு | நியூசிலாந்து |
| அசாமா | ஜப்பான் |
| ஹக்லா | இத்தாலி |

ஞா.விவேந்தன், தரம் - 8A, J/C/H/C




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 57

01. தற்போது சிம்பாபேயில் நடைபெறும் முக்கோணக் கிரிக்கெட் தொடரில் பங்குபற்றும் அணிகள் எவை?
02. வெசாக் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது.
03. உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்படும் நாள் எது?
04. சில நாள்களுக்கு முன்னர் இந்தியாவிலுள்ள எந்த ஆலயத்தின் கோபுரம் இடிந்து வீழ்ந்தது.
05. சீன நாட்டின் ஜனாதிபதியின் பெயர் என்ன?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 10.06.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா? - 56 இற்கான விடைகள், பரிசுபெறுவோர் விவரம் அடுத்தவாரம்**

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!


'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


மாணவர் பெயர்:-..........................................
தரம் :-..........................................
பாடசாலை :-..........................................
..........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.





ஜெ. முருகதாஸ், தரம் -4B,
யா/சென். பெனடிற் றோ.க.த.க. வித்தி.



ந.நிலக்ஷனி, தரம் -4B,
யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.




சு. மீரா, தரம் -8 B,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.



க. தணிகன், தரம் -7,
யா/சுதுமலை வடக்குத் தமிழ் கலவன் வித்தி.



வலன்ரீனா,
யா/ஆனைக்கோட்டை சென்.ஹென்றிஸ் கல்லூரி



க. அனித்தா, தரம் -6 B,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



ஏ. கேசவன், தரம் -8c,
நரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.



க.சிவாமநூரன், தரம் -8 A,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டேடன்ஸ் ஆய்வுகூடம்-DURDANS

சகலவித குருதி,சல, உடற்கூற்றியல் மற்றும் ஈ.சீ.ஜீ பரிசோதனைகளுக்கு சர்வதேச தர நிர்ணயம் உள்ள ஒரே ஆய்வு கூடம். துரிதமான, நம்பிக்கையான டேடன்ஸ் கொழும்பு நிறுவனத்தின் யாழ்.கிளை.

514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

0212229727 (98903)


## பலிக்களங்களாகும் ஆலயங்கள்

கைதடி,மே 30

கைதடியிலுள்ள கிராமிய ஆலயங்கள் பலவற்றிலும் அண்மைக் காலமாக ஆடுகள், கோழிகள் பலிகொடுக்கும் நிகழ்வுகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.

பெரும் திரளான மக்கள் கலந்துகொள்ளும் இந்நிகழ்வுகளில் வெட்டப்படும் ஆட்டுக் கடாக்கள் பல ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் வாங்குபவர்கள் அவற்றை ஆலயங்களுக்கு அருகிலேயே பங்குபோட்டு எடுத்துச் செல்வதாகவும் தெரியவருகின்றது. (க-288)


## UK SPONSOR

வசதி UK EMBASSY மற்றும் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியினூடாக மூன்றே நாட்களில்

Call-Rizan 0729295367

## வடக்கில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியவற்றுக்கு பிரதிநிதி ஒருவரை எதிர்பார்க்கின்றோம்

ஆவியாகும் காற்றைக் குளிர்ப்படுத்தும் அமைப்பு, புழுதியைக் கட்டுப்படுத்தும் அமைப்பு, மற்றும் தண்ணீர் முகாமைத்துவ அமைப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் வகிப்பவர்கள் நாம். எமது முகவராக வடக்கில் செயல்படுவதற்கான சுறுசுறுப்பும் புதுமைபடைக்கும் தன்னார்வமும்கொண்ட ஆங்கிலம் அல்லது சிங்கள அறிவுள்ள இளம் நபரை எதிர்பார்க்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு :

*UNT Engineering (Pvt) Ltd,*
*No, 255/B, Kolonnawa Road,*
*Gothatuwa New town*
T.P: 0112531157, 0777764823, 0777286665

## 60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.Iயின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலவச T.Shirt ஒன்றும் Tigo Sim English Book என்பன இலவசம்

இலவச Phone Sim

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

The ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

## மணமகள் தேவை

யாழ். இந்து சைவப் போசனம், 1976 பரணி நட்சத்திரம், செவ்வாய் தோஷம் இல்லாத, உயர் நிலையில் உள்ள, எதுவித தீய பழக்கங்களும் அற்ற மகனுக்கு படித்த நற்பண்புகள் உள்ள அதே தராதரத்தில் சைவ போசன (Pure Vegetarian) பெண்ணைத் தேடுகின்றார்கள். சீதனம் முக்கியமில்லை. குறிப்பு மற்றும் முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

e-mail- redparrot 3541@yahoo.com
Fax No - 0212229502 (98780)

## வேலையாள் தேவை

எலெற்றிக், வெல்டர்,லேத்மென் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

தொடர்பு: லிங்கோ நாண்பாட்டறை
சட்டநாதர் வீதி,நல்லூர்.
தொ.பே.0773760594 (98748)

## வீடு/காணி விலைக்கு வாங்குவதற்குத் தேவை



யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கும் அல்லது தாவடி கொக்குவிலுக்கும் இடையிலான பிரதான வீதிகளில் அல்லது கிளை வீதிகளில் 150 யார் அண்மையில் அமைந்துள்ள ஐந்து பரப்புக்கு உட்பட்ட வெறும் நிலப்பரப்பு அல்லது 3/5 அறையுடன் உடனடியாக குடியிருக்கக்கூடிய நிலையில் உள்ள வீடு விலைக்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிலத்தின் உண்மையான உறுதியின் உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

077 2646576 தொடர்பு நேரம் மாலை 06.30 - 10.30 வரை

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகர்ப் பகுதியில் இருந்து 5 கி.மீக்கு உட்பட்ட பகுதியில் யாழ்.நகரில் தொழில் புரியும் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0777215005

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக்காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்கு. சேவாலங்கா விற்கு அருகில்.

தொடர்பு: 0777111400

## BUS விற்பனைக்கு

ISUZU JOURNEY (M) MODEL 60-XXXX மிகவும் நல்லநிலையில் உடன் விற்பனைக்குண்டு. டொல்பினுக்கும் மாற்றலாம்.

N.ஆனந்தராஜா
88,குருசோ வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (98873)

## கைகொடுக்கும் சொந்தத் தொழில்


சிறு கைத்தொழிற்சாலையொன்று விற்பனைக்கு

புதிய உரிமையாளருக்கு தொழில் முறை கற்றுத் தருவதுடன் முழு ஒத்துழைப்பும் செய்து தரப்படும். அதை நாமே எக்ஸ்போர்ட் செய்து தரப்படும். மற்றும் பல வியாபாரத்துக்கு முதலீட்டாளர்கள் தேவை.

BUSINESS DEVELOPMENT (PVT)
077 5267655

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:க.பிரபாகரன்
52/2, வைமன் றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 2157



## விற்பனைக்கு

பலாலி றோட் 5ஆம் கட்டை ஊரெழு அம்மன் கோயில் அயலில் 5¾ பரப்பு தோட்டக்காணியும் 1420 சதுரஅடியில் சகல வசதிகளையும் கொண்ட கிணற்றுடன் கூடிய வீடு தற்போதைய நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு 071 8015678, 077 7032967

## வயல்காணி விற்பனைக்கு

மறவன்புலோவில் கேரதீவு வீதி முன்பாக 55 பரப்பு அதி உன்னதமான விளைச்சலைத் தரக்கூடிய நெற்காணி (மயிலங்கட்டு) உடன் விற்பனைக்கு உண்டு. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

67,கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 4611322 (சி/567937)

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் வெள்ளாள 1962ல் பிறந்த B.Sc Computer Science Software Engineering, HND கல்வித்தகைமையுடன் London (UK) பிரஜாவுரிமையுடன் பெரிய தாபனத்தில் வேலை செய்பவர் ... 40 வயதிற்குட்பட்ட மணமகளை எதிர்பார்க்கிறார்.

011 2361830

## வசீகரத் தோற்றத்திற்கு! சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

சந்தனாலேப

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## இந்தியாவில் உயர்கல்வி (Bangalore)

EAST POINT GROUP OF INSTITUTIONS



COURSES OFFERED
- Engineering - Co Education (NBA Accredited)
- Engineering College for Women
- Management, Pharmacy, Nursing
- PUC
- BBM / BCA / Bcom / Bsc
- B. Pharma / M. Pharma

BE - Computer Science Engineering
- Electronics and Communication Engineering
- Electrical and Electronics Engineering
- Civil Engineering
- Information Science Engineering
- Mechanical Engineering
- M Tech / MBA

East Point Infotech
strategic outsourcing partners

East Point revolves around the tenet' earn while you learn and in this context, the East Point Infotech - Strategic outsoucing partners to companies world-wide, help us in this endeavour.

EASY ACCESS CONSULTANCY
புகையிரத நிலையவீதி,
கொக்குவில், கிழக்கு, கொக்குவில்.
0770767114 | 0729569933 | E-mail : candee01@hotmail.com

## மணமகள் தேவை

1975 கனடா, 1981 பிரான்ஸ் மணமகன்களுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்

075 2150146

## கலைமகள் அழகுநிலா

அழகுக்கலைப் பயிற்சி நிலையம்

நான்கு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் சிறப்பு மிக்க சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின்மூலம் ஒரு அழகுநிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பயிற்சிக்கு வயது கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். அனுமதிக்கு முந்துங்கள்.

பயிற்சிகள்
- ★ Facial (7வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Streching (2 வகை)
- ★ Hair Perming (2 வகை)
- ★ Hot oil massage
- ★ Hair Cutting
- ★ Hair Dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure manicure
- ★ Bleaching
- ★ Bridal makeup (5 வகை)



பயிற்சிக் கட்டணம் 4000/-
பயிற்சி ஆரம்பம் 01.06.2010
பயிற்சி நேரம் -9 மணி - பி.ப. 4மணி வரை
தொடர்புகள் : 077 3719071, 021 4908151

கலைமகள் அழகுநிலா
390. பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவயதினரின் மனவடுக்களின் பாரத்தைக் குறைப்பதற்கு...

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்ற ஆயுதப் போரின் விளைவுகளால் பாதிப்புற்று - உளவடு, உளத்தாக்கங்களுக்கு உள்ளான இளம் பராயத் தினரை அவர்களது மனப் பாதிப்புக் களிலிருந்து விடுபட உதவும் குறிக் கோளுடன் (வேல்ட் விஷன்) World vision அமைப்பின்கீழ் செயற்படுத்தப் படும் Child Friendly Space (குழந்தைகளுக்கான நட்புறவு அமைப்பு) செயற்றிட் டத்தின் நோக்கம் மற்றும் அதன் செயற்பாடுகளை முன்னெ டுக்கும் சேவையாளர்கள், உளவள உதவியாளர்கள், உளத்தாக் கங்களுக்கு உள் ளான சிறு பராயத்தினருடன் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்து மனோதத்துவச் செயற்பாட்டாளரும் சமூகசேவையாளருமான வைத்தியக் கலாநிதி திருமதி தயாளினி தியாகராஜா வெளியிட்டுள்ள 'போரின் விளை வுகளும் பிள்ளைகளின் பாதிப்பும்' என்ற கையேட்டில் அடங்கியுள்ள தக வல்களை அடிப்படையாகக் கொண்டது இந்தக் கட்டுரை.

## ... அவர்களுக்கு உண்டாகும் உணர்வுகளிலிருந்து தாமாக விடுபட அரவணைத்து வழிகாட்டுங்கள்

கடந்த மூன்று தாசாப்த காலமாக இந்த நாட்டில் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த ஆயுதப் போர் முடிவுக்கு வந்துள் ளது. ஆனால் ஆயுதப் போரும் போர் கார ணமான அனர்த்தங்களும் அவற்றால் ஏற் பட்ட பலதரப்பட்ட இழப்புக்களும், தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும், இந்த நாட்டின் தமிழ் மக்களது உடல், உள்ளம், சிந்தனை, உறவுமுறை, பொருளா தாரம், கலாசாரம், பண்பாடு மற்றும் கல்வி என்ற சகல அம்சங்களையும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கியுள்ளன. போரின் பாதிப்புக்கள் காரணமாக உடல், உளநிலை பாதிக்கப்பட்டு எம்மில் பலர் மனநோயாளி களாகியிருக்கிறார்கள்.

நலிவடைந்து போய்விட்ட எமது சமு தாயம் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் எம் மத்தியில் விழிப்புணர்வும், அன்பு காட்டும், ஆதரவு வழங்கும் மனப்பாங்கும் வளர வேண்டியது அவசியமாகும். அதிலும் குறிப்பாக ஆசிரியர்கள், மாணவர்கள், புத்தி ஜீவிகள், தாதிமார், சமூக சேவையாளர்கள் போன்றோ ருக்கு இவை மிகமிக அவசியமாகிறது.

சாதாரணமாக, சாதகமான சூழ்நிலையில் வளரமுடியாத பிள்ளைகள் உளவடு, நெருக்கீடு, அச்ச உணர்வு, மனத்துயர், தாழ்வு மனப்பான்மை, விரக்தி போன்ற உணர்வுகளுக்கு உட்பட்டு பாதிக்கப்படுகின்றனர். இப்படியான தாக்கங்களிலிருந்து விடுபட்டு வாழ வழிவகுக்கும் நோக்கில் World Vision ஸ்தாபனம் Child Friendly Space என்ற செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

**அனர்த்தம் மற்றும் போர் நடக்கும் இடங்களில் இளம் பராயத்தினர் எதிர் நோக்கும் சவால்கள்**

எமது ஐம்புலன்களும் எமது சூழலைக் கணப்பொழுதில் புரிந்து கொண்டு ஆபத்து ஏற்படும் வேளையில் உசாரடைந்து அந்த ஆபத்தைத் தவிர்த்துக்கொள்ளும் திறன் கொண்டவை. உள்ளம், உடல் அங்கங்கள், உணர்வுகள் ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை. ஆபத்தொன்று ஏற்படும் வேளையில் ஐம் புலன்களும் அது குறித்த செய்தியை கானில் சுரப்பி மூலம் பரப்புவதால் உடல் அந்த ஆபத்திலிருந்து தப்புவதற்குத் தன்னைத் தயார் நிலையில் வைத்துக் கொள்கிறது. குறிப்பிட்ட அந்த ஆபத்தைக் கடந்ததும் சிறிது சிறிதாகப் பழைய நிலைக்குத் திரும்பும் மனப்போராட்டம் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள், பாதிப்புக்கள் என்பவை ஆபத்துக்கள் என்ற வகையில் கொள்ளத்தக்கவை. துப்பாக்கிச் சூடு, எறிகணைத் தாக்குதல், குண்டுத் தாக்குதல், ஆள் கடத்தல், கொலை போன்றவையும் அடிக்கடி இடம்பெயர நேர்தல், பெற்றோர் தொழில் வாய்ப்பிழத்தல், வறுமை, கல்வி சீர்குலைதல், கூட்டுக் குடும்ப அனுசரணை அற்றுப் போதல், இடம் பெயர்ந்து வாழும் இடங்களில் வசதிகள் கிட்டாத தன்மை போன் றவை இளம் பராயத்தினரைப் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன.

**Child Friendly Space**

**செயற்றிட்டத்தின் முக்கியத்துவம்**

மேற்குறிப்பிட்ட விதத்தில் பாதிப்புக்கு உள்ளாகும் இளம் பராயத்தினருக்கு உதவும் நோக்கில் செயற்படுத்தப்படும் இச்செயற் றிட்டம் பின்வரும் வகைகளில் திட்ட மிட்டுச் செயற்படுத்தப்படுகிறது.

குறிப்பிட்ட சம்பவங்களால் பாதிக்கப்படும் பிள்ளைகள் தமது உணர்ச்சிகளை வெளிக் கொணரத்தக்க சூழலை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம் பிள்ளைகள் மத்தியில் புரிந்துணர்வுடனான நட்புணர்வொன்று ஏற்பட உதவுதல் இவற்றில் முக்கியமான தாகும்.

ஆடல், பாடல், சித்திரம் வரைதல் போன்ற ஆக்கபூர்வ செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்பேற்படுத்திக் கொடுத்து அவர்கள் மகிழ்ச்சியடைய வழிவகை செய்தல், நேரான மற்றும் மறைமுகமான கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூக, கலாசார, கலை நிகழ்ச் சிகளில்



இள வயதினர் பங்குகொள்ள வழியமைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களது மனவடுவின் பாரம் குறைவடைய வழியேற்படுத்தல், விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்து அவற்றில் இளவயதினரை மட்டுமன்றி, அவர்களது பெற்றோரையும் பங்குகொள்ள வைத்தல், அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலையிலுள்ள இள வயதினரை இனங்கண்டு (Vulnerable Children) அவர் களது தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுத்தல் போன்றவையும் இச் செயற்திட்டத் தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏனைய அம்சங்களில் சிலவாகும்.

**உளவள உதவியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள்**

இத்தகைய பாதிப்புக்களுக்கு உள்ளாகும் பிள்ளைகளுடன் நேரடியான தொடர்பு பேணிச்செயற்படும் தரப்பினர் கீழ்க்காணும் செயற்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்பட வேண்டியுள்ளது.

பிள்ளைகளின் தன்நம்பிக்கை மற்றும் சுயமரியாதையை விருத்தி செய்யும் வகை யில், பிள்ளைகள் உங்களது பிரசன்னத்தை நாடுவார்களாயின் அவர்களுடன் கூட இருந்து உதவுவதுடன், அவர்களது கருத்துக் களையும் அக்கறை காட்டிச் செவிமடுத்தல் வேண்டும். அத்தகைய நிலையிலுள்ள பிள்ளைகள் தாம் மற்றவர்களுக்கு வேண்டப் படுபவர்கள் என்ற உணர்வை தம்முள் ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் (Self esteem) அவர்கள் ஒவ்வொருவரது பெயர் களை நினைவில் வைத்து அவர்களைப் பெயர் கூறி அழைப்பதால் அவர்கள் மனதில் தன்னம்பிக்கையும் திருப்தியும் உருவாகும். நீங்கள் அவர்களுக்கு ஆணையிடுபவர்கள் என்ற விதத்திலல்லாது அவர்களை அரவணைத்து சிநேக பாவத்துடன் பழக முயலுதல் வேண்டும்.

இவை மட்டுமன்றி அத்தகைய பிள்ளைகள் கற்பனை பண்ணிக் கூறும் கதைகளை அசட்டை செய்யவோ, அல்லது உங்களது கோபம், சோகம் போன்ற உணர் வுகளை அவர்கள் மீது காட்ட முயற்சிக்கவோ கூடாது. அவர்கள் தவறு செய்வதாகத் தீர்மானித்துத் தண்டிக்க முயல்வதோ, பயமுறுத்துவதோ, அவர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதோ அல்லது அவர்களது நடத்தைகளைக் கேலிசெய்து விமர்சிப்பதோ எதிர்மறையான விளைவு களை உண்டாக்கக்கூடும்.

அந்த வகையில், அத்தகைய பிள்ளைகளுடன் சிநேகபூர்வமாகப் பழகவும், அவர்களது செயற்பாடுகளைப் பாராட்டித் தட்டிக் கொடுக்கவும் அவர்களிடம் எதிர்பார்ப்பு எதுவுமின்றி அவர்களுக்கு உதவுவதும் மிக அவசியமாகும். அவர்கள் விரும்பாத ஒன்றைச் செய்யுமாறு வற்புறுத்த முயல்வது தவறாகும். அத்துடன் உங்களது தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதுடன், அவர்கள் தமது அலுவல்களைத் தாமே மேற்கொள்ள இடமளித்து உற்சாகப் படுத்துதல் அவர்களது மனங் களில் உங்கள் மீதான நம்பிக்கைத் தன்மை மற்றும் தம்மீதான தன்னம்பிக்கை உருவாக வழிவகுக்கும்.

அத்தகைய நிலையிலுள்ள பிள்ளை கள் தமது கோபம், சோகம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை வெளிப்படுத்த இடமளித்து அவற்றை ஏற்றுக் கொள்வதுடன் அவர் களது அத்தகைய செயற்பாடுகள் தொடர்பான ஒத்த உணர்வுகளை வெளிப்படுத்துதல் நல்ல பலனளிக்கும்.

வளர்ந்தவர்கள் போன்றே சிறுபராயத்தினரும் அனர்த்தங்களின் பாதிப்பால் மன அழுத்தத்துக்கு உட்படக்கூடும். அத்தகைய நிலையில் உள்ளோரை அவர்களது நாளாந்த நடத்தைகள் மூலம் இனம் கண்டுகொள்ள இயலும். அத்தகைய நிலையில் உள்ள பிள்ளைகள் மற்றைய பிள்ளைகளிட மிருந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள முயல்வர். அத்துடன் ஒருசில பிள்ளைகள் அளவுக்கு அதிக கோபம், சோம்பல், ஏனைய பிள்ளைகளைத் தாக்க அல்லது இம்சைப்படுத்த முயல்தல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்த முயல்வர். இவை அவர்களது மனஅழுத்தத்தின் அறிகுறிகளாகும்.

இத்தகைய மன உணர்வுகள் காரணமாக மன அழுத்தங்களுக்கு உள்ளாகும் பிள்ளைகளுக்கு உதவும் விடயத்தில் அவர்களது உணர்வுகளின் வெளிப்பாடுகளை இனம் காண்பதுடன் அவர்களது அத்தகைய உணர்வுகள் சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்படுபவையே என்பதை அவர்கள் உணர வைக்க முயலுதல் அவசியமாகும். அவர்கள் தமக்கு ஏற்படும் உணர்வுகளிலிருந்து தாமாக விடுபட உதவும் விதத்தில் அரவணைத்து வழிகாட்டல் அவசியமாகும். இதனை விடுத்து அனர்த்தங்கள், போர் போன்றவை தொடர்பாக தவறான தகவல்களை அவர்களுக்கு வழங்குவதோ, மரணச் சடங்கு போன்ற துயர நிகழ்வுகளில் அவர்கள் பங்கெடுக்காது தடுக்க முயலுதலோ ஏற்புடையதல்ல. அத்து டன் வெட்கம், குற்ற உணர்வு, அச்சம் இது போன்ற காரணங்களால் தமது உணர்வுகளை வெளிப்படுத்த பிள்ளை களில் பலர் தயங்குவர். அவர்களுக் குக் கதைகள் கூறுவதன் மூலமும், சுவாசப்பயிற்சி, ஆடல், பாடல், உடற் பயிற்சி போன்றவற் றில் பங்கேற்க ஊக்குவிப்பதன் மூலமும் அவர்களது மனதில் தன்னம்பிக்கையையும் எதிர் பார்ப்பையும் உருவாக்கி அவர்களை அவர்களது மன அழுத் தத்தினின்றும் விடுபடச்செய்ய இயலும். அத்தகைய முயற்சிகளின் போதுகூட குறிப்பிட்ட பிள்ளை ஆர்வம் காட்டாத செயலொன் றைச் செய்யுமாறு வற்புறுத்துதல், போட்டி மனப்பான் மையை அவர்கள் மனங்களில் உரு வாக்கி வைத்தல் என்பவற்றைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.



************

-வைத்திய கலாநிதி:
தயாளினி தியாகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியை இழக்கும் .......

(07 பக்கத் தொடர்ச்சி)

போரால் பாதிக்கப்பட்ட வேறுபலநாடுகள் அதில் இருந்து மீண்டு வருவதற்கு பல ஆண்டுகள் எடுத்தமையை நாம் நினைவில் கொள்ளவேண்டும். வடக்கின் அபிவிருத்திக்கு அரசு நிறையவே செய்திருக்கிறது. இருப்பினும் அது போதுமானதாக இல்லை'' என்கிறார் அவர்.

மலேசியாவில் வாழும் சீனர்கள் எவ்வாறு அடக்கி ஆளப்பட்டார்களோ அதேபோல, தாங்களும் பெரும்பான்மைச் சிங்களவர்களால் திட்டமிட்ட வகையில் ஒடுக்கப்படுகின்றனர் எனத் தமிழர்கள் நீண்டகாலமாகவே முறையிட்டு வருகிறார்கள்.

போர் இடம்பெற்றகாலப் பகுதியில் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் தமிழர்கள் மறித்துச் சோதனைக்கு உள்படுத்தப்பட்டார்கள். துணை இராணுவக் குழுக்களும் இராணுவத்தினரும் தமிழர்களை துன்புறுத்துகிறார்கள் என்ற செய்திகள் அடிக்கடி வெளிவந்தன. போர் உக்கிரம் அடைந்திருந்த இறுதிமாதங்களில் இலங்கையின் அரசபடைகள் எந்தவிதமான தயவுதாட்சண்யம் இன்றி பொதுமக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டன எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இதன்போது பொதுமக்கள் இழப்புகள் அதிகரித்து காணப்பட்டமைக்கு விடுதலைப்புலிகள் அவர்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியதும் ஒரு காரணம் எனப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசு இதய சுத்தியுடன் இன நல்லிணக்க முனைப்புகளில் ஈடுபடும் என்ற நம்பிக்கை தமிழர்கள் மத்தியில் பெரிதாக இல்லை என அவுஸ்திரேலிய தமிழர்கள் அமைப்புகளின் கூட்டமைப்பினது செயலாளர் விக்ரர் ராஜகுலேந்திரன் கூறுகிறார்.

பாதுகாப்புச் செயலாளர் என்ற பதவிநிலை உள்ளிட்ட முக்கிய மூன்று பொறுப்புக்களை தனது சகோதரர்கள் மூவருக்கும் ஜனாதிபதி ராஜபக்ஷ வழங்கியுள்ளமையானது தமிழர்களை பொறுத்தவரையில் முக்கியமானது என இவர் கருதுகிறார்.

மகிந்த ராஜபக்ஷ அரசு சொல்லும் செய்தி தெளிவாகவுள்ளது. தான் எதனை வழங்கினாலும் அதனைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே அது. தமிழர்களது தாயகப்பகுதியில் சிங்களமயப்படுத்தல் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது என்கிறார் ராஜகுலேந்திரன்.

விடுதலைப் புலிகள் அமைப்பும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அடையமுடியாது போன இலக்கு எதுவோ அந்த இலக்கை நோக்கி புதிய தமிழ் ஆயுதக்குழுக்கள் முளைவிடும் அபாயம் அதிகம் இருப்பதனை ராஜகுலேந்திரன் ஏற்றுக்கொள்கிறார்.

இந்த நிலமை தொடர்ந்தால் புதிய ஆயுதப் போராட்டம் முளைவிடும் என்ற கருத்தை அவர் மட்டும் முன்வைக்கவில்லை.

வடக்கின் குக்கிராமம் ஒன்றைச் சேர்ந்த அந்தப் பெண் குறிப்பிட்டதைப் போல 'தமிழர்கள் மற்றவர்களிடம் கையேந்தி நிற்கும் நாதியற்ற நிலைமையைப் பார்ப்பதற்கு பிரபாகரன் ஒருபோதும் விரும்பியதில்லை' என்பதே உண்மை.

(நன்றி: புதினப்பலகை)

# மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம் தனபாக்கியலட்சுமி



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தனபாக்கியலட்சுமி (சின்னக்கா) நேற்று (29.05.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் (KR) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை- அன்னம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் பரமநாதன், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தங்கலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

தகவல்
க.நந்தினி (பேறாமகள்)
(பிரதேசசபை, பண்டத்தரிப்பு).

(இ/568003)

## சண்முகநாதன் சுஜீவன்

(பொறியியல்பீட இரண்டாம் வருட மாணவன்- பேராதனைப்பல்கலைக்கழகம்)



திருவையாறு, கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சுஜீவன் (27.05.2010) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சண்முகநாதன் (கிளி/ கரைச்சி ப.நோ. கூ. ச.களஞ்சியப் பொறுப்பாளர்)- இந்திராதேவி தம்பதியரின் பாசமிகு புத்திரனும், காலஞ்சென்ற தம்பையா- தெய்வானைப்பிள்ளை மற்றும் இரத்தினம் - பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் பார்த்தீபன் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன்), காலஞ்சென்ற சஞ்ஜீவன் மற்றும் தனுசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி, A/Lவிஞ்ஞானப் பிரிவு மாணவன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.மு: 66/2, திருவையாறு, கிளிநொச்சி.
த.மு: முருகன் வீதி,திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். தொ.பே-0212226664 (98895)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெண் வேலையாள் தேவை

கொழும்பில் புத்தகசாலையில் ஆசிரிய குடும்பம் ஒன்றுடன் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.

பாதுகாப்பாக வீட்டிலிருந்து கூட்டிச் செல்லப்படுவர்.

தொடர்பு:- 0714980324 (98910)

## இதோ யாழ்ப்பாணத்தில்

இறக்குமதி செய்யப்பட்ட (DALFOR BEAUTY Whitening Cream- ORIGINAL) முகத்தில் உள்ள அழுக்குகளைப்போக்கி வெண்மையாக மாற்றக் கூடியது. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள தொடர்பு:

0776048921, 0774613180

குறிப்பு: யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளுக்கு வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும்.

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பலாலி வீதி, தபாற்பெட்டி ஒழுங்கை முடிவிடத்தில் 3¼ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்:
தொ.பே.இல:- 0776535067

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு முழு சுற்று கிரகபாவம் 28 3/4, சுவாதி 4 ஆம் பாதம் சைவபோசனம் உள்ள மாகாண முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். முதல் தடவையிலேயே முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

விளம்பர இல: 4028, C\O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## T.V கள் விற்பனைக்கு

Sony - Wega 14"- 21" Panasonic Flat 21" உட்பட 25 T.Vகளும் Sony Japan ஸ்பீக்கர் வகைகளும் FH7, FH311, FH 414 டெக்ரேடியோ செற்களும் (Setup) வகைகளும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0771393670

ஆர். மகேஸ்வரன் அப்பளக் கொம்பனி, சீனிப்புளியடி,
[ஆரம்பபாடசாலை அருகில்] K.K.S. வீதி, இணுவில்.

## தேவை

யாழ்.நகரில் வசிக்கும் கௌரவமான சிறு குடும்பத்திற்கு வீட்டுப் பராமரிப்பாளராக ஒரு நடுத்தர நற்குணமுள்ள பெண் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர்.இ.தெய்வேந்திரன்,
சென்றல் நேசிங் ஹோம்,
350, பலாலி வீதி, திருநெல்வேலி.

## வீடு வாடகைக்குண்டு

வெள்ளவத்தையில் சந்தை, வங்கிகளுக்கருகில் வீட்டு உபகரணம், தளபாடம், சகல வசதிகளுடன் 2 அறை, வீடு வருட வாடகைக்குண்டு. 0777308475, 0113158140

## கார் விற்பனைக்கு

Toyoa Corella 11 Sri------ மோட்டார்க் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள: தொ.பே: 0776701626

## காணி விற்பனைக்கு

கச்சாய் வீதியில் (சாவகச்சேரி நகரத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில்) பயன்தரு மரங்களுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 9357779,
065 7912950
071 2108575

## வீடு வாடகைக்கு

சுதுமலை மத்தியில் இரண்டு வீடுகள் சகல வசதிகளுடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய

தொ.பே: இல. 0770220314 (98774)

## வீடு வாடகைக்கு

யாழ் பிறவுண் வீதியில், தொழில்நுட்ப கல்லூரிக்கு முன்பாக முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட 3 அறைகள் கொண்ட வீடு முதலாம் மாடியில் உள்ளது. நிறுவனங்கள், நிறுவன விடுதிகளாக பயன் படுத்துவதற்கு உகந்தது.

தொடர்பு: 0772336238 (98902)

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட 35+ வயதுடைய இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த, ஆயிலிய நட்சத்திரம், கிரகபாவம் குறைந்த மண மகளுக்கு மணமகன் தேவை.

விளம்பர இல.4027 C\O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (98894)

## வாழ்த்து மடல்



கணேசமூர்த்தி-சாரதாதேவி
தம்பதியரின் புதல்வன்

செல்வன் சயுறாபன் B.COM(Hons)

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (30.05.2010)ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் வணிகமாணி பட்டத்தை பெறுவதையிட்டு வாழ்த்துவதுடன் கொழும்பில் B.M. I.C.H. இல் 24.11.2008 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் Higher National Diploma in Accountancy (H.N.Dip.in.Acct) பட்டத்தைப் பெற்றதையிட்டும் பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் கல்வித்துறையில் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
குடும்பத்தினர், நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இன்று இடம்பெறுகின்ற வெளிவாரிப் பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வணிகமாணி பட்டத்தினைப் பெறும் எமது நண்பன்

இராசரத்தினம் ஸ்ரீகணேசன் (B.COM)

மென்மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

இ.தவக்குமார்,
தெ. கீதாம்பரன்.

உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

THE ART OF LIVING

அவர்களின்

## வாழும் கலை பயிற்சி

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப் பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

★ சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி

★ ஞாபகசக்தி அதிகரிக்க
★ நிகழ்காலத்தில் வாழ
★ மனதை ஒரு நிலைப்படுத்த
★ வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
★ ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### அறிமுக உரை

இடம்: வடிவேலர் மணிமண்டபம்,
அல்லையம்பதி, துன்னாலை.
காலம்: 31.05.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணிக்கு

பயிற்சி நாள்கள்: 01.06.2010 (செவ்வாய்க்கிழமை) முதல் 06.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) வரை.

மேலதிக விவரங்களுக்கு: வாழும் கலைக்குடும்பம்

(98908) T.P: 0770474757

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தேவசகாயம்அந்தோனிப்பிள்ளை

தோற்றம்
11.06.1933

மறைவு
30.05.2009

அன்பின் உறைவிடமாயிருந்து
எம்மையெல்லாம் வழிகாட்டிய தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை
உம் நினைவுகள்!
ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டு கின்றோம்.

ரி.ஜெயராணி
கரவெட்டி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## நன்றி கூறுகிறோம்



களுத்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து கடந்த (28.05.2010) வெள்ளிக்கிழமை காணாமல் போன சித்தசுவாதீனமற்ற வின்சென்ட் கொத்தலாவல அவர்களை யாழ். பொது மக்களின் உதவியுடன்யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரி (S.S.P) வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இராணுவத்தினர் தேடிக்கண்டுபிடித்து தந்தமைக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

ஜெயமின,
களுத்துறை தெற்கு.

S.I கொத்தலாவல
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.



10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று

Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை

Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லாம் வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 0817 918 981 / 0773 123 523


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 04 . 1958



மறைவு 14 . 06 . 2006

### திருமதி குணராசா விமலாதேவி

உறவின் முதன்மையே- என்
உயிரின் அர்த்தமே
நீங்கி ஆண்டுகள் நான்கானபோதும்
நீங்கா நினைவாய் நீங்கள் என்னில்
அர்த்தம் சொன்னீர்கள் வாழ்விற்கு
உங்கள் நினைவுதான் அர்த்தமானது என்வாழ்விற்கு



(ஓ-568013)

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர். கு.முரளிதாஸ் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி

எமது உடன்பிறவா சகோதரனும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் 2 ஆம் வருட மாணவனுமாகிய



### செல்வன் சண்முகநாதன் சுஜீவன்

அவர்களின் திடீர் மறைவினால் கவலையுறுவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


3 ஆம் வருட மாணவர்கள் (E/06)
பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

(98930)

## மரண அறிவித்தல்

### *தம்பிப்பிள்ளை ஸ்ரீ சண்முகன்*

(Retd. M.L.T. போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, தெல்லிப்பழை)



வாராம்பற்றை, கோப்பாயினைப் பிறப்பிடமாகவும் இராஜ வீதி, தோப்பு, அச்சுவேலியினை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை ஸ்ரீ சண்முகன் நேற்று (29.05.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதியரின் மகனும் அன்னபாக்கியத்தின் கணவரும், மலர்விழி (யாழ். சோமஸ்கந்தக் கல்லூரி), ஸ்ரீ விமலகாந்தன் (யாழ். மெடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கோகுலன்(கொ/ அல்ஹிக்மா கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தீஸ்வரன் (யா/ சைவ மகாஜன வித் தியாலயம்), ஜெயஸ்ரீ (யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), தேனுகா (இலங்கை வங்கி, கொள்ளுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமனும் அமரர் சகாதேவன், விஜயலட்சுமி, ஜாவஹர், ஜெகதாம்பாள் (அவுஸ்திரேலியா), விஜியராகவன் (லண்டன்), இராஜகோபால் (கொழும்பு), மங்களேஸ்வரி, அமரர் விமலேந்திரன் ஆகியோரின் சகோதரனும் Dr. இராஜலிங்கம், தர்மலிங்கம், அமரர் இரத்தினலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் பிரவீனன், ஜனனி, சஞ்ஜயன், டேரிகா, தீனசரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி, தோப்பு,*
*அச்சுவேலி.*
*தொ.பே.: 021 3211952* (96625)

தகவல்:
ஸ்ரீவிமலகாந்தன் (மகன்).

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 30

அகில இலங்கைத் திருமுறை மன்றம் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்ட நாதர் சுவாமி தேவஸ்தானத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து திருஞான சம்பந்தர் நாயனார் குருபூசையையொட்டி சம்பந்தப் பெருமானுக்கு அபிஷேகம், பூசை வழிபாடுகள் நடைபெற்று, அவர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதல் நிகழ்வு நடைபெறும். (ஓ-1)

* * *

யாழ்ப்பாணம், மே 30

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் ஏற்பாட்டில் திருஞான சம்பந்தர் குருபூசை இன்று சாவகச்சேரி வாரிவளநாத சிவன் கோயிலில் நடைபெறும்.

சங்கத்தினரால் தேவார பாராயணமும் புராண படனமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(ஓ- 207)


**படிவம்**

வட மாகாண பொதுச் சேவையின்

1) பாலர் பாடசாலை ஆசிரிய சேவை வகுப்பு III
2) நூலகப் பொறுப்பாளர் தரம் II, III

போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

**கொங்கிறீற் கற்கள் விற்பனை**

தரமான 4'' கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு. விலை 38/=
தேவையான இடத்துக்கு நேரடியாக கொண்டுவந்து தரப்படும். தொடர்பு: 0777531344

**விற்பனைக்கு**

கே.கே.எஸ். வீதி, இணுவிலில் (தியேட்டர் லேனில்) சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (3 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்). தொடர்பு: 0779419019

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By:ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.
Tel. 0776751649

**பணியாள்கள் தேவை**

எமது வியாபார நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர் தேவை. 3 வருட அனுபவம் விரும்பத்தக்கது.
★ சிட்டை எழுதுநர்
★ களஞ்சியக்காப்பாளர்
(தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாம்)
விண்ணபங்களை அனுப்ப வேண்டிய முகவரி
344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 0727768835

**சக்தி மனைப் பொருளியல் அக்கடமி**

- தையல், நிற்றிங், பூவேலை
- சிகை அலங்காரம்
- முத்துமாலை பின்னுதல் (நெக்லஸ்)
- பேசியல்
- மணப்பெண் அலங்காரம்
- கேக் ஐசிங்
  1) பிறந்த நாள்
  2) திருமண நாள்
  3) பூக்கள்
- சாறி வேலை

மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. விவரம் நேரில்.

துர்க்கா மணிமண்டபம், அருகில், கர்பன் கோட்டர் முன் ஒழுங்கை, நல்லலக்ஷ்மி அவனியு.

**காணி விற்பனைக்கு**

ஜெற்மோட்டார் சந்தி, மயிலணி வீதி, சுன்னாகத்தில் நல்ல சூழலில் குடியிருப்பு தேவைக்கு அல்லது வியாபார தேவைக்கு பொருத்தமான 2¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0213206596

**காணி விற்பனைக்குண்டு**

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்னால் சேர்ச் வீதியில் (பழைய நீதிமன்றத்துக்கு முன்னால்) 4 பரப்பு 2 குளி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777279691, 0212229951

**திருமண சேவை**

துரிதமான-சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறைபற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள்,புதன்,வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த-புகழ்பூத்த- சுயதெரிவுமுறை- முன்னோடி- தனி மனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!
தொலைபேசி: 2360488, 2360694, 4873929

**சீன மின்தறி ஆடை நெய்தல் இயந்திரம் (Brand New)**



புதிய ஆடை நெய்தல் தொழிற்துறையை ஆரம்பியுங்கள்
GA 615 A(1515) சட்டலூம். அன்டர்பிக் 56 அகலம் GA 611, பென்டேஜ் போன்ற Medical Fabric நெய்தலுக்கான விசேட மெசின்கள்
அடுத்த இறக்குமதிக்கான ஆடர்கள் ஏற்க்கப்படும் (எமது சீன பிரதிநிதியின் முழுமையான கண்காணிப்பில் தரக்கட்டுப்பாடு செய்வதால் தரத்தில் மிக உயர்ந்தது
MACROLINE HOLDINGS

**வேலையாள்கள் தேவை**

★ பயிலுநர் கணனி பதிவாளர்/வரவேற்பாளர்
(RECEPTIONIST/ DATA ENTRY OPERATOR (TRAINEE)
★ விடுதிச் சிப்பந்தி, விடுதிச் சிப்பந்தி மேற்பார்வையாளர்
★ காவலாளி
★ கணனி அறிவுள்ள தரவுப் பதிவாளர்

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு மேற்கூறிய வேலையாள்கள் தேவை. பயிற்சி வழங்கப்படும். ஆங்கிலம், சிங்கள மொழிஅறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

தொடர்பு: நேரில் வரவும்.
தொ.பே.இல: 021 222 9958 (98913)

BLUE HAVEN
70, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### திருமதி சறோஜா சாந்தலிங்கம்

கடந்த 30.04.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைப்பு வழங்கியும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுகொண்டு வருகைதரவும்.

தோற்றம்: 1965.07.23

மறைவு: 2010.04.30



குடும்பத்தினர்.
பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.
0213007875

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பையா கணபதிப்பிள்ளை
[முன்னாள் புலோலி எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்]
பிறப்பு: 20.12.1930
இறப்பு: 14.05.2002

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை பொன்னம்மா
பிறப்பு: 05.04.1924
இறப்பு: 23.05.2008

வையத்தில் எம்மை வாழ்வாங்கு வாழ வைத்த எம் தெய்வங்களே
நீங்கள் போன பாதை தெரியாது நாளும் நினைந்து ஏங்கி
வாடுகின்றோம். என்றும் உங்கள் நினைவுகள் சுமந்து நிற்கும்

சாயி இல்லம், புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி. (96624) பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### *செல்வராசா கணேசமூர்த்தி*



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பொறளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா கணேசமூர்த்தி நேற்று(29.05.2010) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் செல்வராசா - காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் றதிவாணியின் அன்புக் கணவரும் சகானா, யசோதரன், ஜெசிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற யசோதாவின் அன்புச் சகோதரனும் கிருஷ்ணர், தங்கரத்தினம், தம்பிராசா செல்வராணி, மகேந்திரா வீராசிங்கம், கெங்காதேவி வைரவநாதன், சிவநேசன் பொன்மலர் , கலைவாணி செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பண்டத்தரிப்பு விளாவெளி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோயில் சந்தி,*
*சுழிபுரம்.*
*தொ.பே.: 0776441615* (98917)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழு யாழ்ப்பாணத்தில் புதிதாக அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.மாவட்டத்தில் புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழு புதிதாக அங் குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை, சுகாதார அமைச்சுடன் இணைந்து மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழுவினை யாழ். மாவட்டத்தில் உருவாக்கியுள்ளது.

இக்குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகா மற்றும் திட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி பிரசன்ன கூரே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் செயற்படவுள்ள இக்குழுவில் சுகாதாரத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மதுவரித் திணைக்களம், கல்வித் திணைக்களம், சமுர்த்தி அதிகார சபை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவின் செயற்பாடுகளாக -

* புகையிலைப்பாவனை மற்றும் அவை தொடர்பிலான கைது நடவடிக்கைகள் வழக்குத் தொடர்பில் மற்றும் அபராதம் விதித்தல் போன்ற நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.
* புகைப்பவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் புகைத்தலால் ஏற்படும் அபாயத்தினை விளக்கும் அறிவூட்டல் நிகழ்வுகளை ஒருங்கமைத்தல்.
* புகையிலைப்பாவனை சிறுவர் மட்டத்தில் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
* புகையிலைப் பாவனையிலிருந்து விடுபட விரும்புபவர்களுக்கு உதவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
* புகையிலைப் பாவனைகளைக் குறைக்கும் நடத்தை மாற்ற செயற்பாடுகளை பிரதேச மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மட்டங்களில் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல்.
* புகையிலை தொடர்பான உற் பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பிலான விளம்பரங்களை, அனுசரணை வழங்குதலையும் தடை செய்தல்.
* புகையிலை தொடர்பான உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் மீதான வரிவிதிப்பு தொடர்பிலான நடவடிக்கைகளை ஆராய்தல்.
* புகையிலைப் பாவனை ஒழிப்பு தொடர்பிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அரச அதிகாரிகளை இணைக்கும் ஓர் அமையமாக செயற்படல்.
* புகையிலைக் கைத்தொழில் தொடர்பிலான நிறுவனங்கள், தமது உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளும் சட்டவிரோத நடவடிக்கைகளை தேசிய புகையிலை மற்றும் மதுசாரம் மீதான அதிகார சபைக்குத் தெரியப்படுத்துதல். என்பன அமைகின்றன.

மேலும் புகையிலைப் பாவனை ஒழிப்பு தொடர்பிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மற்றும் ஈடுபடத் திட்டமிட்டுள்ள நிறுவனங்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இயங்கிவரும் இக்குழுவின் இணைப்பாளரினூடாக தமது செயற்பாடுகளை மேற்படி அதிகார சபைக்குத் தெரியப்படுத்துதல் வேண்டுமென வும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (50-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று(30.05.2010) B.A பட்டம் பெறும்

**முருகையா கேசவன்**

அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று கல்விப் புலத்தில் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்

(சி/568017)

அப்பா, அம்மா, அண்ணன்மார், அண்ணிமார், மச்சான், அக்கா.

ச.முருகையா
தொல்புரம் மத்தி, சுழிபுரம்

## கண்ணீர் அஞ்சலி

பூரோவில் நிறுவன இயக்குநரும், பொறியிலாளருமாகிய வைத்திலிங்கம் செட்டியார் அவர்களின் அன்பு மாமியார்

**தையலாம்பாள் சுந்தரமூர்த்தி**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து கவலை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

(சி/568018) - பூரோவில் சமூகம்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 ★ 10 ★ 1948



உதிர்வு 05 ★ 06 ★ 2002

அமரர்

**இராசலிங்கம் அமரசோதி**

திதி : 07.06.2010

எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் எட்டு ஆனபோதும்
ஆறாது உம் பிரிவின் துயரம்
எம் உயர்வுக்கு உறுதுணையாய்
என்றும் எம் இதயத்தில் நிறைந்தவரே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

117A, கொழும்புத்துறை றோட், சுண்டிக்குளி. (90922)

மனைவி, மக்கள், மருமக்கள்.

# கிராம அபிவிருத்திக்கான கொத்தணிகளின் கூட்டங்கள்

நவாலி,மே30

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அபிவிருத்திக்கான கிராம கொத்தணிகளின் 'ஏ' பிரிவு கூட்டங்கள் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் திருமதி. பு.சிவலிங்கம் தலைமையில் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.2.30மணிக்கு இல 129, 130 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்திலும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு ஜே 131, 132,133 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு கூழாவடி அ.மி.த.க.பாடசாலையிலும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இக் கூட்டத்திற்கு மதத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஓய்வூதியர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோரை கலந்து கொண்டு தமது பகுதிக்கு வேண்டிய வேலைத்திட்டம் சம்பந்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு மேற்படி கொத்தணியின் தலைவர் எ.மனோகரன் கேட்டுள்ளார். (50-100)

## உதவியாளர் தேவை

**Royal Veterinary Clinic**

**றோயல் கால்நடை வைத்திய நிலையம்**

- பழைய தபால் நிலையம்
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 320 7561

* கால்நடை வைத்திய அதிகாரிக்கு (Veterinary Surgeon) உதவியாளர்(Attendant) தேவை. இத்துறையில் போதிய அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. அத்துடன் இளைப்பாறியவர்களும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.
* மேலும் வாகனம் செலுத்துவதில் அனுபவமும் சாரதி அனுமதிப்பத்திரமும் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
* நேர்முகத் தேர்வுக்கு உரிய ஆவணங்களுடன் இந்நிலையத்துக்கு திங்கட் கிழமை 31.05.2010 பிற்பகல் 3 மணிக்கு நேரில் வருகை தரவும். (90928)

# படுக்கையில் சிறுவனை தீண்டியது பாம்பு

யாழ்ப்பாணம்,மே29

சிறுவனை படுக்கையில் வைத்து பாம்பு தீண்டியது. நேற்று வெள்ளிக்கிழமை காலை மிருசுவில் வடக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் ஜங்கரன்(வயது 10) என்ற அந்தச் சிறுவன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-207)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி எமாஞானி கந்தையா

கோப்பாய், கிழுவானை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எமாஞானி கந்தையா(28.05.2010) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற J.திலகரட்ணம் கந்தையாவின் அன்பு மனைவியும்அருள்ஜீவி, ஞானோ, நிலாந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தி, சத்தியா டானியல், சுவேந்திரா ஆகியோரின் அன்பு மாமியும் சொயானா, ஜெரமி , பிரதீப், வானதி ஆகியோரின் ஆசை அப்பம்மாவும், ஜேசன், எரிக், ரமணன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் மொழி டானியல், காலஞ்சென்றவர்களான வண.பாலஅருட்பிரகாசம், சுந்தர் அருட்பிரகாசம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(31.05.2010) திங்கட்கிழமை மாலை 3 மணியிலிருந்து 6 மணிவரையும் (01.06.2010) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் 11 மணிவரையும் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பின்பு அடக்க ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானோ கந்தையா
தொ.பே. 0061889452978

கொழும்பு. (98926)

## ஞானப்பிரகாசம் அருளானந்தம்

(ஜஸ்ரின்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அருளானந்தம்(ஜஸ்ரின்) 28.05.2010 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் பிலோமினா தம்பதியரின் அன்பு மகனும் கொன்சியின் அன்புக் கணவரும் ஜஸ்மினின் (சாணுஜா - திருக்குடும்பக் கன்னியர் மடம்) பாசமிகு தந்தையும் தர்மசகாயம்பிள்ளை - றீற்றம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ரவி, அமரர் மேபிள் ஜெயமணி, அமரர் கிறிஸ்ரி, பெரியதம்பி மேசி, ஜெகன், செல்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் ஜான்சி, குட்டி, புனிதசீலி, கரன், சுபா, கசில்டா, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு புனித பேதுருவானவர் தேவாலயத்துக்கு நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம், மண்டைதீவு. (98929)

தகவல்: கொன்சி (மனைவி).

## சுந்தரம்பிள்ளை கதிரேசபிள்ளை

(ஓய்வுபெற்ற எழுதுநர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி, எழுதுநர் கட்டட நிர்மாணிகள் சங்கம், யாழ்ப்பாணம்)



பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கதிரேசபிள்ளை நேற்று(29.05.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிர்காமு (ஓய்வுபெற்ற அதிபர், யா/கல்வயல் சண்முகானந்த வித்தியாலயம்) மற்றும் சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் ஆதித்தன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், முல்லைத்தீவு பிராந்தியம்), சுதாமதி(ஆசிரியை,யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரனின் (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி) அன்பு மாமனும் ஹஜீதனின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நாகேந்திரம், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவி, பேரின்பநாதன்(சுவிஸ்), சிவகுமார்(ஜேர்மனி), காலஞ்சென்ற உமாமகேசன்(சுவிஸ்) மற்றும் உமாதேவி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரி. (98924)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இந்தியாவின் கற்பனையும் இலங்கையின் புலுமாசும்

அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. வன்னிப் போரில் தமிழ் மக்களுக்கு உயிரழிவும், உடைமை அழிவும் என்றுமில்லாதவாறு - நினைத்துப்பார்க்க நெஞ்சு பதறும் அளவுக்கு - பெரும் பேரழிவாக அமைந்திருந்தது. இந்தியாவும் இந்தப் பேரழிவுகளுக்கு மறைமுகமாகவோ நேரடியாகவோ உதவியது அல்லது முண்டுகொடுத்தது என்பதால் அங்கு செல்வதற்கு ஜனாதிபதிக்கு கூச்சம் இருக்காது.

ஆனால், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்று தெரிவிப்பதனை முக்கிய நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு புதுடில்லி செல்லும் ஜனாதிபதி, தமது தீர்வு இன்னதுதான் என்று சொல்லவேண்டிய தேவை கட்டாயமாகியுள்ளது.

இந்தியா, பதின்மூன்றாவது + என்ற வகையில் தீர்வு அமையவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இதனை ஜி-15 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்ற தெஹ்ரானில் வைத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மஹிந்தவிடம் கூறியதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. ஜனாதிபதி மஹிந்த அடுத்த சில நாள்களில் இந்தியத் தலைவர்களைச் சந்திக்கும்போது புதிதாக அப்படி என்ன புதுமையைச் செய்யப்போகிறார் என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

ஆனால் மஹிந்தா இந்தியா செல்லும்போது பதின்மூன்று + குறித்துப் பேசுகிறாரோ இல்லையோ, 1987ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத்தானும் அதன் எழுத்துக்கு எழுத்து நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டம் எதனைய்யும் கையில் எடுத்துச் செல்வார் என்று சொல்வதற்கில்லை.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான, பிரதான எடுகோளாக இருந்த வடக்கு - கிழக்கு இணைப்பு அடியோடு தகர்க்கப்பட்டுவிட்டது. ஆம்; ஒப்பந்தம் பிணைத்து வைத்திருந்த வடக்கையும், கிழக்கையும் உயர் நீதிமன்றம் உடைத்துவிட்டது. அதன் பின்னணியில் திரைக்குப் பின்னால் நின்று தூண்டியதும், செயற்பட்டதும் அரசாங்கத்தின் ஆளணிகளே என்பதில் இரகசியம் இருக்கமுடியாது.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் பயணத்தின் பாதையில் முதலாவது காலடி, வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைக்கப்படுவதாகவே இருக்கவேண்டும். அது சிங்களவர்களே இந்த நாட்டின் மேலோங்கிய இனத்தவர் என்ற அதிகாரத் தனம் அழியும்வரை சாத்தியமாகாது. வடக்கு - கிழக்கை மீண்டும் இணைப்பது என்பது உயர் நீதிமன்றத் தீர்ப்பை அத்துமீறும் செயல் என்று கூறுமாறு அரசாங்கமே சில குழுக்களை அல்லது கட்சிகளை ஏவிவிட்டுச் செய்விக்கலாம். இத்தகைய திரைமறைவான சூழ்ச்சிகள் ஏற்கனவே நடைபெறாத "சுத்தமான" நாடு இது என்று சொல்வதற்கில்லையே!

வடக்கு - கிழக்கை மீண்டும் இணைப்பதற்கு ஒரே ஒரு மார்க்கம்தான் உண்டு. ஜனாதிபதி தமக்குள்ள விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டும். ஆனால் அது நீதிமன்றத்தின் தீர்ப்புக்குள் அத்துமீறுவதாக ஆட்சேபிக்கப்படக்கூடிய சாத்தியமும் உண்டு என்று சொல்லப்படுகிறது. வடக்கு - கிழக்கு இணைப்புக்கு உயிரூட்டும் முயற்சிகள் புதிய சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் வழி செய்துவிடும் என்று எச்சரிப்போரும் உள்ளனர்.

அவ்வாறாயின் இந்தியாவிடம் ஜனாதிபதி மஹிந்த இனப்பிரச்சினைக்கான தீர்வாக எதனை ஒப்புவிப்பார் அல்லது சமர்ப்பிக்கப்போகிறார் என்பது பென்னம்பெரிய கேள்விக்குறியாக கிளம்பும் என்பது கண்கூடு.

எப்படியோ, சிங்களப் புத்திஜீவிகள் மத்தியில் புதிய கருத்தோட்டம் ஒன்று இருக்கவே செய்கிறது. விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் பிரச்சினைக்கான காரணி அல்ல. அந்த இயக்கம் தமிழ்மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதன் பெறுபேறே என்று அவர்கள் கூறத்தொடங்கியுள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்துவிட்டதால் அது தோன்றுவதற்கு ஏதுவாக இருந்த பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை என்ற யதார்த்தை மறந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையும் அந்தப் பக்கத்தில் இருந்து எழுந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

எது எப்படியோ, வடக்கு - கிழக்கு இணைப்பில்லாமல் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அடிக்கல் கூட நாட்ட முடியாது என்பதனைச் சிங்களப் புத்திஜீவிகள் என்ன, அரசாங்கம் கூட ஆழமாக உணரவேண்டும்.

இந்த நாட்டில் கடந்த பல தசாப்தங்களாக இனமோதலையும் பாரபட்சத்தையும் இன ஒடுக்கலையும் தோற்றுவித்த மூல வேர்களைக் கண்டறிந்து உய்த்துணர்ந்து அவற்றைக் களைந்து எறிவதற்கு உரிய நீதியான தீர்வை தமிழ்மக்களுக்கு வழங்கவேண்டும் என்பதில் எந்தத் திசை யிலும் சுதந்திரமான செயல் வடிவங்கள் இதுவரை முன் மொழியப்படவில்லை என்பது வெளிச்சம்.

இத்தகைய பின்னணியில் வடக்கு - கிழக்கையாவது மீண்டும் இணைப்பதற்கான திட்டம் எதுவும் மஹிந்த அரசிடம் இருந்து வெளிப்படுவதாகவும் இல்லை.

தமிழ்மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்த பின்னரும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு வெறும் புலுமாசு விட்டுக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி.

ஆகப்பிந்தி -

தமிழ் அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினை குறித்து இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அரசாங்கம் தயார். அதனாலேயே அவர்களை நாம் பேச்சுக்கு அழைத்துள்ளோம். நாம் அவர்களை நம்புகிறோம். அவர்களும் எம்மீது நம்பிக்கை கொண்டு பேச்சுக்கு 'வரவேண்டும் என்று அல் ஜெஸீரா ஊடகத்துக்குப் பேட்டியளித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கூறியபின்னரும் இவ்வாறு கூறுவது காலத்தைப் போக்கும் தந்திரம்.

ஆனால் இந்தியா செல்வதற்கு முன்னராவது அவர் பேச்சுக்களை இங்கு தொடங்காவிட்டால் இந்தியாவே மூக்குடைபட்டதாக முடியும். அரசமைப்பின் பதின்மூன்றாவது சரத்தை நிறைவேற்றச் செய்தல், பதின்மூன்று + நிலைக்கு முன்னேறுதல் என்பதெல்லாம் இந்தியாவின் கற்பனையாகவே இருக்கமுடியும்!!

# குடாநாட்டில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம்; பாதிக்கப்பட்ட சிலர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை

### அசட்டையாக நடந்தால் சட்டநடவடிக்கை என்கிறார் பணிப்பாளர் கேதீஸ்வரன்

யாழ்ப்பாணம்,மே30

அண்மையில் பெய்த மழையின் பின்னர் யாழ்.குடாநாட்டில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. அதனால் டெங்குக் காய்ச்சலும் தீவிரமாகப் பரவும் அபாயம் தென்படுகிறது.

டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் சிலர் கடந்த சில தினங்களில் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இனிவரும் நாள்களில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இதனால் உயிரிழப்புகள் ஏற்படும் ஆபத்தும் உண்டு என்று எச்சரித்திருகிறார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

இதுதொடர்பாக பணிப்பாளர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழைக்குப் பின்னர் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பரம்பல் பல இடங்களில் அதிகரித்துக் காணப்படுகிறது. கடந்த சில நாள்களாக யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் டெங்கு நோயுடன் சிலர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே எதிர்வரும் நாள்களில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இதனால் பல உயிரிழப்புகளும் ஏற்படலாம்.

எனவே உடனடியாக டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்படவேண்டும். இந் நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் அனைவரதும் பங்களிப்பும், பூரண ஒத்துழைப்பும் மிக அவசியம்

**உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய டெங்கு தடுப்பு நடவடிக் கைகள்**

* சகல வைத்தியசாலைகளிலும் நுளம்பு பெருகும் இடங்கள் சுத்திகரிக்கப்படவேண்டும்(பொறுப்பு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள்)
* சகல திணைக்கள நிறுவன வளவுகளில் சிரமதானம் மூலம் சுத்திகரிப்பு பணிகள் இடம்பெறவேண்டும் (பொறுப்பு - திணைக்கள/நிறுவன தலைவர்கள்)

பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் துப்புரவு செய்யவேண்டும்(பொறுப்பு - உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)

* திண்மக் கழிவுகள் உரியமுறையில் அகற்றப்படவேண்டும். (பொறுப்பு - உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)
* பாடசாலைகளில் சிரமதானப் பணி மூலம் நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் அழிக்கப்படவேண்டும். (பொறுப்பு - பாடசாலை அதிபர்கள்)
* ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருகக்கூடிய கொள்கலன்கள் அழிக்கப்பட்டு சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளப்படவேண்டும் (பொறுப்பு-வீட்டு உரிமையாளர்கள்/குடியிருப்பாளர்கள்)
* பராமரிப்பின்றிக் காணப்படும் காணிகள் உரிமையாளர்களால் அல்லது பராமரிப்பாளர்களால் துப்புரவு செய்யப்படவேண்டும் (பொறுப்பு - உரிமையாளர்கள்/பராமதிப்பாளர்கள்)

டெங்குநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் -என்றுள்ளது. (ஒ)

# குருநகர் இறங்குதுறை-பூநகரி இடையே விரைவில் பயணிகள் படகுச் சேவை

யாழ்ப்பாணம்,மே30

குருநகர் இறங்கு துறைக்கும் பூநகரி துறைக்கும் இடையே பயணிகள் படகுச்சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்காலிக ஏற்பாடாக இந்தப் படகுச் சேவையை ஆரம்பிப்பது குறித்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

தற்போது கேரதீவு - சங்குப்பிட்டி கடற்பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த கடற்பாலத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடையும் வரை குருநகர் - பூநகரி இடையேயான பயணிகள் படகுச் சேவையை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குருநகர் இறங்குதுறையில் இருந்து பூநகரித் துறைக்கு குறைந்தது அரை மணிநேரத்தில் படகு சென்றடையும் எனக் கூறப்பட்டது.

இப்படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் அரச ஊழியர்கள் மற் றும் பொதுமக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. (50-224)

## யாழ்.மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டில் 7ஆயிரத்து 519 குழந்தைகள் பிறந்துள்ளன

யாழ்ப்பாணம், மே30

யாழ்.மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 7,519 குழந்தைகள் புதிதாகப் பிறந்துள்ளன. இவர்களில் 77 குழந்தைகள் பிறக்கும் போது இறந்துள்ளன. தற்போது 7,442 குழந்தைகள் உயிர்வாழ்கின்றன என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக புள்ளிவிவர பிரிவு வெளியிட்டுள்ள தகவல்களில் தெரிய வந்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 5,451 குழந்தைகளும் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலைகளில் 452 குழந்தைகளும் வீடுகளில் 30 குழந்தைகளும், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் 1,586 குழந்தைகளும் பிறந்துள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் இயங்கும் வைத்தியசாலைகளில் 10 குழந்தைகளும்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 65 குழுந்தைகளும்

யாழ்.திருச்சிலுவை சுகநல நிலையத்தில் இரு குழந்தைகளும் பிரசவத்தின் போது மரணித்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலைகளான யாழ். திருச்சிலுவை சுகநல வைத்திய சாலையில் 397 குழந்தைகளும்

யாழ்.சென்றல் நேசிங் ஹோமில் 55 குழந்தைகளும் பிறந்துள்ளன. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இக்காலப் பகுதியில் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என இப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன. (50-300)

## நெல்லியடியில் இன்று இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மே30

'அபொட்' நிறுவனம் லாவா வைத்திய சாலையுடன் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 8.30 மணிக்கு நெல்லியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கு 'தைரொயிட்' நோய்க்கான இலவச இரத்தப் பரிசோதனையும் இடம் பெறும்.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத் தியர்களால் ஆலோசனையும் வழங்கப்படும் இந்த மருத்துவ முகாமில் தொண்டையில் வீக்கம், அதிகரித்த உடல் பருமன், மறதி, உடல் சோர்வு, மாதவிடாய் ஒழுங்கீனம், மலச் சிக்கல் சம்பந்தமான உபாதைகள், அதிகரித்த நித்திரை ஆகிய அறிகுறிகள் உள்ளவர்களை இதில் கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது.

## அளவெட்டியில் இன்று சைக்கிள், மரதன் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே30

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை ஒட்டி இன்று காலை 6.30 மணிக்கு சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் காலை 6 மணிக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வித் தியாலய அதிபர் கே.ஜெகநாதன் கேட்டுள்ளார். (ஒ-1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 17 | 31.05.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி | : திருதியை காலை 06.50 |
| நட்சத்திரம் | : பூராடம் பி.ப. 4.59 வரை |
| சுபநேரம் | : 11.52 - 01.22 |
| ராகுகாலம் | : 07.22 - 08.52 |

## பிரதேச வைத்தியசாலைகளில் சேவையாற்ற 12 பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் சேவை புரிவதற்காக பன்னிரண்டு பேருக்கு பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமனக் கடிதங்கள் யாழ்.பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனால் வழங்கப்பட்டுள்ளது.

என்.புவனேசன் - பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை, ஜெ. நிருபன்- தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும், ரி.தஜிகரன்- கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கும், ரி.ஜெயக்குமார்- ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கும், எஸ்.மயூரதாசன் - யாழ். மலேரியா தடை இயக்கப் பணிமனைக்கும், ரி.பிரணவன் - சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கும், ரி.மயூரன் - அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கும், வி.உமாசுதன் - அளவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கும், எஸ்.கோபிநாத் - சாவகச்சேரி நடைகண்டாய அலுவலகத்துக்கும், என்.அருளானந்தம் - கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கும், எம். வைகுந்தன் - வரணி பிரதேச வைத்தியசாலைக்கும், ரி.சரண்ராஜ் - கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கும் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களாக நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். (50-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்.

# புலிகள் குறித்த வீடியோக்காட்சிகளை செல்போனில் வைத்திருந்த மூவர் கைது

கொழும்பு, மே 30

விடுதலைப்புலிகள் தொடர்பான வீடியோக்காட்சிகளைத் தமது கையடக்கத் தொலைபேசிகளில் பதிவுசெய்து வைத்திருந்தனர் எனக் கூறப்படும் மேலும் மூன்று தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் மட்டக் களப்பு - வவுணதீவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு - நாவற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்கள் மூவரும் வவுணதீவுப் பொலிஸாரினால் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர் என மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, விடுதலைப்புலிகள் தொடர்பான வீடியோக்காட்சிகளைத் தமது கையடக்கத் தொலைபேசிகளில் பதிவுசெய்து வைத்திருந்தனர் எனக் கூறப்பட்ட இருவர் கடந்த புதன்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாவட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி, மீள் குடியேற்றம் உட்படப் பல விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.(ஓ-1)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை எழுதிய இந்த மாணவன் கடந்த 10ஆம் திகதியன்று வீட்டியில் இருந்து சென்று திரும்பிவரவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-1)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்து வருகிறது என்றும் அமைச்சரும் ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த வருமான சம்பிக்க ரணவக்க கூறுகிறார்.

இலங்கை அரசின் பயங்காரவாத ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எதிர்த்து வந்த மன்னிப்புச் சபையின் அறிக்கைகளையும் கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் செயற்பட்ட காரணத்தாலேயே நாடு விடுவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு இயங்கும் வேறுசில தன்னார்வ நிறுவனங்களும் பயங்கரவாதத்துக்கு உயிரூட்ட முனைவதாகவும் இதுகுறித்து அரசாங்கம் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடும் ரணவக்க, நாட்டு மக்களும் இந்த விடயத்தில் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் எச்சரித்துள்ளார். (ஓ-1)

# சித்தன்கேணி விற்பனை நிலையத்தில் எரிபொருள் கையிருப்பில் இல்லை

## இதனால் நுகர்வோர் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,மே30

சித்தன்கேணிச் சந்தியில் அமைந்திருக்கும் எரிபொருள் விற்பனை நிலையத்தில் எரிபொருள்களின் கையிருப்பு முற்றாகத் தீர்ந்துள்ளதால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த சில நாள்களாக எரிபொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவிவருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதனால் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நம்பி வரும் மக்களும் வாகனச் சாரதிகளும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.அலுவலக உயர் அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்போது -

எரிபொருள் கொள்வனவுக்கான காசுக் கட்டளைகள் கிடைத்தவுடனேயே சம்பந்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள்கள் அனுப்பி வைக்கப்படுவதாக உதயனுக்குக் கூறினார்.

சில விற்பனை நிலையங்கள் எரிபொருள் விநியோகத்துக்கான காசோலைகளை வங்கியில் வைப்பிடும் போது அவை திரும்புகின்றன. இவ்வாறு காசோலைகள் திரும்புவதால் எரிபொருள்களை சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு விநியோகிக்க முடியாது உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (50 - 224)

## வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் வன்னிக்குச் சென்றிருந்தோம். அந்த மக்களின் அவலங்களை நேரில் கண்டோம்.

சர்வதேசத்துக்கு அரசு கூறிவருவது போன்று அங்கு எதுவும் நடக்கவில்லை. மீள்குடியேற்றம் என்ற பெயரில் அரசு நடத்திவரும் ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றி வருகிறது. இதனை அம்பலப்படுத்தவும் அந்தத் தேர்தலைப் பயன்படுத்தலாம்.

அல்லற்படும் அந்த மக்களின் அவலங்களுக்கு ஏற்ற தீர்வைப் பெற்றுக் கொடுக்கவாவது வடக்கு மாகாண நிர்வாகத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியாக வேண்டும். அந்த நிர்வாகத்தைக் கைப்பற்றுவதன் மூலம் வன்னி மக்களின் அவலங்களுக்கு முடிவைக் காணலாம்.

சர்வதேசத்துக்கு அரசு அறிவித்து வருவது போன்று மக்கள் வன்னியில் மீளக் குடியமர்த்தப்படவில்லை. இன்னமும் அகதி நிலையிலேயே அந்த மக்கள் பசி, பட்டினியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த மக்களுக்கு விடிவு கிடைத்து சகஜ வாழ்வுக்கு அவர்கள் திரும்ப மாகாண சபைத் தேர்தலைப் பயன் படுத்தவேண் டிய தேவையுள்ளது. - என்றார் அவர். (ஓ-1)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கின் நிர்வாகத்தை பொதுமக்களிடம் கையளிக்க வசதியாக தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. யுத்தத்தில் இருந்து மீண்ட மக்கள், ஜனநாயக வழியில் தம்மை வழிநடத்தக் கூடியவர்களைத் தெரிவுசெய்ய வசதியாகவே தேர்தல்கள் நடத்தப்படவிருக்கின்றன.

நீண்டகாலத்தின் பின் வடக்கின் நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கும் நோக்குடன் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படவிருகிறது.

இத்தேர்தலைத் தொடர்ந்து வடக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டு அவற்றின் நிர்வாகங்களும் பொதுமக்களிடம் கையளிக்கப் படும் - என்றார் அமைச்சர். (ஓ-1)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் மகப்பேற்று விருதி திறப்பு

கொழும்பு, மே 30

கிளிநொச்சி வைத்தியசாலைக்கான மகப்பேற்று விடுதி உள்ளிட்ட சிகிச்சைப் பிரிவுக் கூடங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில், தேசியக் கொடியை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், மாகாணக் கொடியை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் ஏற்றி வைத்தனர்.

இந்நிலையில், பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரை வரவேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இவர்களை அழைத்துச்சென்றிருந்தார்.

அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், சம்பிக்க ரணவக்க, சரத் அமுனுகம, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர், ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் கொருடா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொன்சேகா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக அவர் மேலும் செய்தியாளர்களுக்குக் கூறியதாவது-

தடுத்துவைக்கப்பட்டுள்ள சரத்பொன்சேகாவின் உரிமைகளை இலங்கை அரசு கட்டாயம் மதிப்பதுடன் அவர் மீதான இராணுவ நீதிமன்ற விசாரணைகளில் வெளிப்படைத் தன்மையைப் பேணவேண்டும்.

இராணுவ நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக பிரத்தியேகமான குற்றச்சாட்டு எதனையும் நாம் காணவில்லை. அவரது உரிமைகளை மதிக்கவேண்டியது அவசியம்.

அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் மட்டும் அன்றி வழக்கு விசாரணைகளும் வெளிப்படையாக இருக்கவேண்டியது அவசியம். இந்த விசாரணைகளை மிகக் கவனமாக அவதானித்துக்கொண்டிருகின்றோம். - என்று கூறினார் றொபேட் ஓ பிளேக். (அ-1)

## பான் கீ மூனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைந்து கொள்ள கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் அந்த வேண்டுதல்களில் ஒன்றுக்கேனும் செவிசாய்க்கப்படவில்லை. அதனால் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்.

ஆகையால் அந்தக் கொலைகளுக்கு, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு நம்பகத்தன்மையுடனான பொறுப்புக் கூறும் நடவடிக்கை அவசியம் என்று செயலாளர் நாயகம் கருதுகின்றார். இலங்கை ஜனாதிபதி அது சம்பந்தமாக வழங்கிய ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகள் அமையும் விதத்தில் தொடர்ந்து செயற்படவுள்ளார். - என்றும் ஐ.நாவின் நேற்றைய அறிக்கையில் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)


**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

**'தைரொயிட்' நோயாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம்**

Abbott நிறுவனத்தின் அனுசரணையுடன்
Lava Hospital நடத்தும் வைத்திய முகாமில்
தைரொக்ஸின் குறைபாட்டைக் கண்டறியும் இலவச
இரத்தப் பரிசோதனை (TSH) மேற்கொள்ளப்படும்.
மற்றும் இதர நோய்களுக்கான
வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படும்.

இடம் : நெல்லை முருகன் திருமண மண்டபம், நெல்லியடி
காலம் : இன்று(30.05.2010) 8.30 a.m

**பழைய மாணவர் சங்கம்**
**யா/யூனியன் கல்லூரி**
**தெல்லிப்பழை**
**பொதுக் கூட்டம் 2010**

காலம்: 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி
இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனார்மடம்

★ 30.05.2010 இன்று நடைபெறவிருந்த மேற்படி கூட்டம் 06.06.2010 இல் இடம்பெறுகின்றது.

★ அனைத்துப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் புதிதாக இணைய விரும்புவோரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

பழைய மாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

W.B.பாலேந்திரன்
(செயலாளர்).

**வேலையாள்கள் தேவை**

எமது காமன்சுக்கு தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

கிளை 1
றொசானி காமன்ஸ்,
263/1, இராஜகாரியர் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்

கிளை 2
சபாபதிப்பிள்ளை வீதி,
புற்றுநோய் காப்பகத்துக்கு அருகில்
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

புதியபிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing (Morph, Cool3d, Project, Premiere, Soundfroge, Combustion, Power director, Vcd and convertor, Editing using Photoshop)
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes

முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

**A/L 2012 வர்த்தகப் பிரிவு**
புதிய அலகுகள் ஆரம்பம்

| பொருளியல் | வணி.கல்வி | கணக்கீடு |
|---|---|---|
| S.S.சிறி | பசீல் | D.SAM |
| செவ். வியா 3 p.m. | சென் -4 p.m. சனி -3 p.m. | சென் -5 p.m. வியா. -4 p.m |

காலம்: 01.06.2010 செவ்வாய் 3 மணி
ACA கோயில் வாசல், கே.கே.எஸ். வீதி, இணுவில்.


உங்கள் கடினமான நேரங்களில் ஒரு நண்பனைப் போல் அழையுங்கள். கணனித் திருத்தம், மற்றும் ஆலோசனைகளிற்கு 0212222674/ 0773618586
STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road, Jaffna.

நாளை ஆரம்பம்
இறுதிப் பிரிவு 6
O/L Day Class 8.30 - 2.00
★இன்னும் சொற்ப அனுமதிகளுக்கு மட்டும் இடம் உண்டு.
★தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

சாதித்தவர்களுக்குத்தான் தெரியும் சாதனைக்கான வழி
கூடுதலான நேரத்தில் எளிமையான விளக்கம்
கணக்கீடு : திரு.AP.பகீரதன் B.B.A (Fm.Spl)

A/L 2012 பிரிவு I Sat, Sun.(1-2.pm)
பிரிவு II Mon, Wed (3-4pm)
A/L 2011 பிரிவு I Sat, Sun.(7-8am)
Sat, Sun(12-1pm)
பிரிவு II Mon. Wed (4-5pm)

கணக்கீட்டிற்கு "A" சித்தி பெற்றிட நாடுங்கள்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமி[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org